
தர்மசக்கரம்




ACC-NO- 38679





துன்மதி ஞு வைகாசி மீ சக்கரம் 30 ஆரம் 5

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

குற்றாலத்தில் பருவ அந்தர்யோகம்

15—6—1981 முதல் 15—8—1981 முடிய

திருக்குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முடிய இரண்டு மாதங்களுக்குக் கீழ்க்கண்ட சாதனை முறைப்படி அந்தர்யோகம் நடைபெறும். கடிதம் மூலம் குற்றாலத்துக்கு எழுதி முற்கூட்டி அனுமதி பெற்று ஒருவர் மூன்று தினங்களுக்குக் குறையாமலும் பத்துத் தினங்களுக்கு மேற்படாமலும் இந்த இரண்டு மாதங்களுக்கு நடைபெறும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ருபாய் ஒன்பது விதம் ஆச்ரமத்துக்கு வந்தபின் நேரில் செலுத்தினால் போதுமானது. படுக்கை வசதிக்குத் தேவையானதை உடன் கொண்டுவரவேண்டும். தாய்மார்களும் பருவ அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் தங்குவதற்குத் தனி இட வசதி இருக்கிறது. நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும், 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளும், அந்தர்யோகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணி வரை
திருப்பள்ளியெழுச்சி, தியானம், நாமஜபம்	4-30	5-00
ஐந்தருவி ஸ்நானம்	5-00	6-30
தியானம்	7-00	7-30
சிற்றுண்டி	7-30	
பஜனை	10-00	10-30
உபந்யாசம்	10-30	11-00
தியானம்	11-00	11-15
அர்ச்சனை, தீபாராதனை	11-15	11-30
உணவு	12-00	

மாலை

	மணிமுதல்	மணிவரை
பஜனை	3-00	3-30
உபந்யாசம்	3-30	4-00
தியானம்	4-00	4-15
சிற்றுண்டி	4-15	
நாமபஜனை, ஆரத்ரிகம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-30	
சத் சம்பாஷணை	8-00	8-30

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
குற்றாலம்-627 802, (வழி) தென்காசி

சுவாமி சங்கரானந்த

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை - 639 115, திருச்சி ஜில்லா.

இக்குருகுல உயர்நிலைப்பள்ளியில் 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்களுக்கு அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றை நேரில் பரிசோதித்த பின் இடமளிக்கப்படும். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30ம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். நுழைவுத் தேர்வுகள் அன்று நடத்தப்பெற்று தேர்வு முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை. மற்றநாட்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. இலவசமாகவோ, குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனுமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர் 75 பை. தபால் தலை அனுப்பி ''வித்யாவன குருகுல சட்ட திட்டங்கள்'' என்ற புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளுங்கள்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்.

12-5-81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30 | துன்மதி ஹு வைகாசி மீ | ஆரம் 5

பொருளடக்கம்

			பக்கம்
1.	பிரார்த்தனை		161
2.	அருள் விருந்து		162
3.	பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்		163
4.	எந்நாள் கண்ணி		166
5.	இயேசுவின் மலை உபதேச விளக்கம்		168
6.	ஆன்மிக உலகம்		170
7.	வாசுதேவ மனன விளக்கம்	சுவாமி ஸதானந்தர்	175
8.	அனுமன் கண்ட சீதை	திரு. K. ராமமூர்த்தி M. Com.	178
9.	ஸத் ஸம்பாஷணை		183
10.	ஸ்ரீ லலிதா வியாக்கியானம் - 153		185
11.	குமரகுருபரர்	வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.	188
12.	பகவத்கீதையும் காந்தியடிகளும்	சுவாமி துருவானந்தர்	193
13.	விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்	திரு. V. சோமு B. Sc., M. Ed.	196
14.	அமரநாத யாத்திரை	சுவாமி குஹானந்தர்	197
15.	ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்-ராமேஸ்வரம்		200
16.	செய்திகள்		200

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டு தோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டு மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யி னின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர் களின் உதவியால் தொடர்ந்து இலவசமாக அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம். இந்த ஞான யக்ஞத்துக்கு நிதியாக நன்கொடை ஏற்றுக்கொள்ளப்பெறும். வேண்டும்பொழுது திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியாக வட்டி இல்லாக் கடனும் தந்து உதவலாம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—அன்னூரில் 14—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : மன்னீஸ்வரர் தேவஸ்தானம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமந் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—கப்பத்தில் 24—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ முத்தையாபிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

தஞ்சை ஜில்லா—திருவாரூரில் 24—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : அம்மாளு அம்மா தொடக்கப்பள்ளி, நடவாகனத்தெரு

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

சேலம் டவுன் அம்மாப்பேட்டையில் 2—6—81 செவ்வாய்க்கிழமை

இடம் : ஸ்ரீமத் காசி சுவாமிகள் தியான நிலையம்

நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

திருநெல்வேலியில் 7—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் ; ம. தி. தா. இந்துக் கலாசாலை மேல்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 7—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி : நேரில் பகல் உணவுக்கு ரு. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசா வும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 14—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் ; ஸ்ரீமந் சுவாமி ஞானானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 14—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

புதுப்பித்துக்கொள்ள வேண்டிய சந்தாதாரர்களுக்கு சந்தாவை புதுப்பிக்கக்கோரி இரண்டு மாதங்கள் வேண்டுகோள் அனுப்பப்படுகிறது. அன்பர்கள் தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்வதுடன் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துத்தரக் கோருகிறோம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ௵ வைகாசி ௴ | ஆரம் 5

பிரார்த்தனை

न भूमिर्न चापो न वह्निर्न वायुर्न चाकाशमास्ते न तन्द्रा न निद्रा ।
न ग्रीष्मो न शीतं न देशो न वेशो न यस्यास्ति मूर्तिस्त्रिमूर्तिं तमीडे ॥

— शंकराचार्य

ந பூமிர் ந சாபோ ந வஹ்நிர் ந வாயுர்
ந சாகாசமாஸ்தே ந தந்த்ரா ந நித்ரா ।
ந க்ரீஷ்மோ ந சீதம் ந தேசோ ந வேசோ
ந யஸ்யாஸ்தி மூர்திஸ்த்ரிமூர்திம் தமீடே ॥

— சங்கராச்சாரியர்

வடிவங்களைத் தாண்டியவரும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டவரும், உறக்கமும், ஆயாசமும் அற்றவரும், சீதம் உஷ்ணத்துக்கு அப்பாற்பட்டவரும், இருப்பிடம் அற்றவரும் ஆகிய மும்மூர்த்தியை வணங்குகிறேன்.

மண்ணும் மறிகடலும் மற்றுஉளவும் எல்லாம்உன்
கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

பேரின்பமும் பெருவாழ்வும் இணைபிரியாதவைகளாம்.

அறநெறி வாழ்க்கைக்கு உறுதியான அஸ்திவாரமாம்.

திண்மையையும், தெய்வ நம்பிக்கையையும் விலைக்கு வாங்க முடியாது.

ஓட்டைப்பானையில் நீர் நில்லாது. பொய்யன் வீட்டில் திருமகள் நில்லாள்.

மயக்கமும் முயற்சியின்மையும் முக்தி மார்க்கத்துக்கு முட்டுக்கட்டைகளாம்.

அருளை மானுடன் சிக்கெனச் சாருமளவு அருள் அவனுக்குச் சொந்தமாகிறது.

ஒழுக்கத்தில் உறுதியாக நிலைநிற்பவனே நோயற்ற பெருவாழ்வு வாழுகிறான்.

மனிதன் செல்வம் படைத்திருப்பது சிற்றின்பத்தை விலைக்கு வாங்கும் பொருட்டன்று.

மனதை அகண்டாகாரத்தில் செலுத்துமளவு உடலின் பந்தபாசத்தை மனிதன் வெல்லுகிறான்.

வாழ்வுக்கு ஆதாரமாயுள்ள தூய அன்பை அறியும்பொழுது மனிதனுக்குப் புதிய பெருவாழ்வு துவங்குகிறது.

இப்பிரபஞ்சம் மனிதனுடைய மனப்பான்மைக்கு ஏற்பச் சொர்க்கமாகவோ, நரகமாகவோ காட்சி கொடுக்கிறது.

பரநாட்டம் வலுப்பதற்கேற்ப மனதின்கண் உள்ள சிறுமைகளெல்லாம் தாமாகவே மறைந்துபட்டுப் போகின்றன.

நெருக்கடி நிறைந்தது நிலவுலக வாழ்க்கை; மனிதனுக்கு நெருக்கடி எப்பொழுது நேரும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது.

உள்ளத்தினுள் ஒலித்துக் கொண்டிருக்கும் உபதேசத்தைக் கேட்கும் திறமை, சரியான மௌனத்தினின்று உருவெடுக்கிறது.

எந்த எந்த உயிர்க்கு எப்பொழுது எது தேவையோ அதை இறைவனுடைய திருவருள் கரவாது எடுத்து வழங்கிக்கொண்டேயிருக்கிறது.

பரநாட்டமும், பிரபஞ்ச நாட்டமும் ஒன்றுபடமாட்டா; சிறப்புக்கு ஏதுவான பரநாட்டத்திலேயே விவேகி ஒருவன் தன் கருத்தைச் செலுத்துவானாக.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

எட்டுவிதமான இணக்கங்கள் ஒதுக்கிவைப்பதற்கு உரியவைகள் என்று நியமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பெண்பால் ஒருத்தியின் பேச்சுக்குச் செவி சாய்த்தலும் அவளுடைய சம்பாஷணையை ரசித்தலும் கூடா. இது முதல் கட்டுப்பாடு. பெண்பால் ஒருத்தியின் பாங்கைச் சங்நியாசி ஒருவன் எடுத்து விளக்கலாகாது. இது இரண்டாவது கட்டுப்பாடு. தனியாகப் பெண்பால் ஒருத்தியோடு இருந்து கொண்டு இரகசியமாகப் பேசுதல் முறையன்று. இது மூன்ருவது கட்டுப்பாடு. பெண்பால் ஒருத்திக்குரிய உடைமையைத் துறவி பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அதைச் சிலாகித்துப் பேசுவது பொருந்தாது. இது நான்காவது கட்டுப்பாடு. எக்காரணத்தை முன்னிட்டும் சங்நியாசி ஒருவன் பெண்பாலின் மேனியைத் தீண்டலாகாது. இது ஐந்தாவது நியமம். இக்காரணத்தை முன்னிட்டே துறவி ஒருவன் தன்னுடைய குருவின் இளம் மனைவியின் பாதத்தைத் தொட்டு வணங்கலாகாது.''

பரமஹம்சர் தொடர்ந்து பக்தர்களோடு உரையாடுகின்ருர். அவர் பகர்ந்ததாவது: ''துறவி ஒருவன் யாண்டும் பெண்பாலர்களை விட்டு ஒதுங்கியிருக்கக் கடமைப்பட்டிருக்கிருன். அப்படியிருப்பது அவனுக்குரிய ஸ்வதர்மம் ஆகிறது. மற்று குடும்பி ஒருவனுடைய வாழ்க்கைமுறை வேறு ஒருவிதமானது. கணவனும் மனைவியும் கூடி வாழ்ந்திருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆயினும் குடும்பியினுடைய வாழ்க்கைக்கும் நியதியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டொரு மகப்பேறு பெறும் வரையில் கணவன் மனைவி என்னும் இணக்கம் அவர்களுக்கிடையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் அங்ஙனம் மகப்பேறு பெற்ருன பிறகு அவர்களுக்கிடையிலுள்ள இணக்கத்தை அவர்கள் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். இருவரும் சகோதரன் சகோதரிபோன்று வாழ்ந்திருப்பது தலைத்தரமானது. அப்படி வாழ்ந்திருப்பதால் அவர்களுடைய ஆத்ம சாதனத்துக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாது.

''குடும்பி ஒருவனுக்குக் கடமைகள் பலஇருக்கின்றன. அக்கடமைகளைப் பஞ்சமகா யக்ஞம் எனப் பகர்வது ஐதிகம். ஐம்பெரும் வேள்வி என பஞ்சமகாயக்ஞம் பொருள்படுகிறது. நாள்தோறும் கடவுள் வழிபாடு செய்வது தேவயக்ஞம் என இயம்பப்பட்டிருக்கிறது. எக்காரணத்தை முன்னிட்டாவது ஒரு நாள் கூடக் கடவுள் வழிபாடில்லாது கழிந்துபட்டுப் போகலாகாது. கடவுளை வழுத்தாது போக்கிய நாள் செத்துப் போனதற்கு நிகராகிறது. தேவயக்ஞத்துக்கு அடுத்தபடியில் வருவது ரிஷியக்ஞம். இந்த யக்ஞத்தைப் பிரம்மயக்ஞம் என்றும் பகர்வது மரபு. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம் என்பது இதன் அடிப்படைக் கோட்பாடு. அனுபூதிமான்களாகிய ஆன்ருேர்கள் உலக நன்மைக்காகத் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற பக்தி நூல்களைப் பாடியருளியிருக்கின்றனர். அப்படி அவர்கள் செய்தது தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளுதல் பொருட்டு அன்று. மக்களுக்கிடையில் பக்தியையும் ஞானத்தையும் வளர்ப்பதே அதன் அடிப்படைக் கோட்பாடு ஆகும். நாள்தோறும் பக்திபூர்வமாக இந்த அரியபெரிய நூல்களை ஓதுவதால் இல்வாழ்பவன் ஆத்ம பரிபாகம் அடைந்து வருகிருன். மூன்ருவது கடமையாக இல்லறத்தானுக்கு அமைந்திருப்பது பிதிர்யக்ஞமாம். காலம் சென்ற தன்னுடைய மூதாதையர்களைக் குறித்து நாள்தோறும் ஒரு தடவை நல்லெண்ணம் எண்ணுவது பிதிர் யக்ஞத்தின் முதற்பகுதியாகும். அதனுடைய இரண்டாம் பகுதியாக உடல் வாழ்க்கையில் இருந்துவரும் தாய் தந்தையருக்குக் காயத்தால் கைங்கரியம் பண்ணவேண்டும். வயதில் பெரியவனதும் தந்தை தாய்ப் பேணுதல் என்னும் பணிவிடையினின்று ஒருபொழுதும் பிசகலாகாது. மூன்ருவது பகுதியாக இந்த யக்ஞத்தில் அமைவதுமனைவியையும்மக்களையும்அன்போடு பரிபாலித்து வருவதாம். நான்காவது கடமை

யாக இல்லறத்தானுக்கு அமைந்திருப்பது நரயக்ஞமாம். மக்கள் எல்லாரையும் உள்ளன்போடு நேசித்து அவர்களோடு இணங்கி வாழ்ந்திருப்பது நரயக்ஞமாம். ஏழை எளியவர்களைத் தன் சக்திக்கேற்றவாறு பராமரிப்பதும் நரயக்ஞத்தில் அடங்கியிருக்கிறது. பூத யக்ஞம் என்பது ஐந்தாம் பகுதியாகிறது. உலக வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் மக்களினம், விலங்கு இனம், பறவை இனம் ஆகிய உயிர்வகைகள் பரஸ்பரம் உதவி பண்ணிவாழ்ந்து வருகின்றன. ஆதலால் தன்னை அண்டியிருக்கும் கால்நடைகளையும், ஏனைய உயிர் வகைகளையும் நல்ல முறையில் காப்பாற்றுவது பூதயக்ஞமாகும். இங்ஙனம் இல்லறத்தான் ஒருவனுக்கு வாய்த்துள்ள கடமைகளை அவன் முறையாக நிறைவேற்றி வருவானாகில் அவனுடைய ஜீவிதம் துறவறத்தான் ஜீவிதத்திற்கு நிகராகிறது.

"இல்லறத்தான் ஒருவனுக்கு நல்ல வாழ்க்கைத்துணை வாய்ப்பது பெரிய பேறு ஆகிறது. நல்லியல்புடைய பெண்பால் ஒருத்தி வித்யா சக்தி என அழைக்கப்பெறுகிறாள். கீழான மனப்பான்மை படைத்துள்ள மாது ஒருத்தி அவித்யா சக்தி என இயம்பப்படுகிறாள். வித்யா சக்தியாயுள்ள பெண்ணொருத்தி ஆடவனுக்கு நல்ல வாழ்க்கைத்துணை ஆகிறாள். அன்னவள் காமக் குரோதங்களுக்கு அடிமைப்பட்டவள் ஆகாள். அவள் நெடுநேரம் நித்திரை பண்ணுவதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கையில் அவள் கருத்து மிகச் செலுத்துகிறாள். எல்லாரையும் அவள் அன்போடு நேசிக்கிறாள். எல்லாரிடத்தும் அவள் இரக்கம் மிகக் காட்டுகிறாள். தெய்வபக்தி இயல்பாகவே அவளிடத்து அமைந்திருக்கிறது. பெண்பாலுக்குரிய அச்சமும் நாணமும் அவளிடத்து நன்கு இலங்குகின்றன. இத்தகைய நல்லியல்புகளோடு கூடிய மாது ஒருத்தி இனிய முறையில் இல்வாழ்க்கையை நிறைவேற்றுகிறாள். இல்வாழ்க்கையை இனிது நிறைவேற்றுகிற கணவனும் மனைவியும் மற்றவர்களுக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளை முறையாகச் செய்து சாதிக்கின்றனர். குலமகள் ஒருத்தி தன் கணவன் நீங்கலாக ஏனைய ஆண்பாலரைத் தன் குழந்தைகளாகக் கருதுகின்றாள். தன் கணவன் கடைப்பிடித்து வரும் கடவுள் பக்திக்கு மனைவி உறுதுணையாகின்றாள். தன் கணவனுடைய வருவாய்க்கு ஏற்றபடியே பணச் செலவில் அவள் சிக்கனமாயிருக்கிறாள். அங்ஙனம் தன் தலைவனோடு ஒத்து வாழுகிற தலைவி தன் தலைவனுக்கு எந்தவிதமான இடைஞ்சலையும் உண்டு பண்ணுவதில்லை. எல்லா விதத்திலும் தன் தலைவனுக்கு உதவி பண்ணுகிற பாங்கிலேயே அவள் நடந்து கொள்ளுகிறாள்.

"உடலும் உள்ளமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள். ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு மன பரிபாகம் முற்றிலும் அவசியமானது. அதற்கறிகுறியாக மேனியின் அமைப்பிலும் ஒழுங்குப்பாடு இருத்தல் வேண்டும். மாறுகண் அமைப்பும், குழிவிழுந்த கண் அமைப்பும், பூனையின் கண் அமைப்பும் மேனியின் குறைபாட்டுக்கு அறிகுறிகளாம். அகன்ற தாவாக்கட்டையும், புறாவின் நெஞ்சம் போன்ற மார்பும் நல்ல அறிகுறிகள் ஆகமாட்டா. உடலிலே இத்தகைய குறைபாடுகள் அமைந்திருந்தாலும் இவைகளுக்கு ஈடு ஆக ஆத்ம சாதகர்களிடத்துத் தீவிரமாகப் பக்தி ஓங்கவேண்டும். உறுதிப்பாடுடைய பக்தி மார்க்கம் உடலிலுள்ள குறைபாடுகளுக்கு ஈடு செய்கிறது.

"இனி பக்தியில் படித்தரங்கள் உள. குணவேற்றுமையை அனுசரித்துச் சாத்விக பக்தி, ராஜஸிகபக்தி, தாமஸிகபக்தி எனப் பக்தியின் பாங்கு மூன்று படித்தரங்களில் அமைந்திருக்கின்றன. சாத்விக பக்தி படைத்திருக்கிறவன் அடக்கமும், ஒழுக்கமும், பணிவும் உடையவனாகவிருக்கிறான். ராஜஸிக பக்தி வாய்க்கப்பெற்றவன் ஆடம்பரம் மிக உடையவனாகவும் விளம்பரப்பிரியனாகவும் இருக்கிறான். தாமஸிக பக்தி வாய்க்கப் பெற்றவனிடத்து ஒரு போக்கில் முரட்டுத்தனம் அமைந்திருக்கிறது. அவன் இறைவனிடம் பண்ணுகிற பிரார்த்தனையே அலாதியானது. அவன் இயம்புவதாவது: "இறைவா, நான் உன்னுடைய திருநாமத்தை ஓதிக் கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கிற என்னிடத்துப் பாபம் எங்ஙனம் வந்தமையும்? ஓ இறைவா! எனக்கு ஆதரவு நீயே. உன்னுடைய சொருபத்தை நீ எனக்குக் காட்டியருள வேண்டும். இங்ஙனம் பிடிவாதம் படைத்தவ

னுக அவன் நடந்து கொள்ளுகிறுன்."

கிரீஷ்சந்திரகோஷ்: (புன்னகை பூத்தவராக) "ஐயனே தாங்கள் எங்களுக்குத் தாமஸிக பக்தியைத் தான் புகட்டியருளுகின்றீர்கள்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "ஈஸ்வரனுடைய அனுக்ரஹத்தைப் பெற்ற தன் அறிகுறிகள் சில இருக்கின்றன. கடவுள் சிந்தனையில் மூழ்குகின்ற அத்தகைய பக்தன் அதிவிரைவில் சமாதிநிலையை எட்டுகிறுன். சமாதிநிலையில் படித்தரங்கள் பல இருக்கின்றன. பொதுவாக அவைகள் ஐந்து படித்தரங்களில் வைத்து இயம்பப்பெறுகின்றன. முதலாவதாக சுஷும்னை நாடியினின்று எறும்பு ஊறிச் செல்லுவது போன்ற உணர்வு ஒன்று உண்டாகிறது. பரிபாஷையிலே இது மஹா வாயு என இயம்பப் பெறுகிறது. இரண்டாவதாகக் குண்டலினி சக்தியின் எழுச்சி நீரில் மீன் நீந்திச் செல்லுவதுபோன்று உண்டாகிறது. மூன்ருவதாகச் சர்ப்பம் ஒன்று வளைந்து வளைந்து போவது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. நான்காவதாகப் பறவையொன்று ஒரு கிளையினின்று மற்றொரு கிளைக்குப் பறந்து போவது போன்று உண்டாகிறது. ஐந்தாவதாகக் குரங்கு ஒன்று நெடுந்தூரம் தாண்டிக் குதிப்பதுபோன்ற உணர்ச்சி உண்டாகிறது. அந்நிலையில் மஹாவாயு நேர் உச்சந்தலையை எட்டுகிறது. அது சமாதியாக வடிவெடுக்கிறது. சமாதியில் இன்னும் இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஸ்திதி சமாதி என்பது ஒன்று. அது வாய்க்குமிடத்து ஆத்ம சாதகன் புறவுலகின் உணர்வை ஒதுக்கியவன் ஆகிறுன். அந்நிலையில் அவன் சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள் இருப்பது உண்டு. இரண்டாவது சமாதி உன் மன சமாதி என இயம்பப் பெறுகிறது. இந்நிலையில் மனது இந்திரியார்த்தங்களினின்று, அதாவது கட்புலனுகின்ற பொருள்களிடத்திலிருந்து ஒரு நொடிப் பொழுதில் விலகிக்கொள்ளுகிறது. இஷ்ட மூர்த்தி அல்லது வழிபடு தெய்வத்திேைடு அவ்வேளையில் அது ஒன்றுபட்டிருக்கிறது."

"இவையாவும் உனக்கு விளங்குகின்றனவா?" என்று பரமஹம்சதேவர் மகேந்திர நாதரை வினவுகின்ருர். 'ஆம் ஐயனே' என்று அவர் அதற்கு விடைவிடுக்கின்ருர்.

கிரீஷ்சந்திரகோஷ்: "சாதனம் புரிந்து ஈசுவரானுபூதியைப் பெற முடியுமா?"

பரமஹம்சதேவர்: "ஈசுவரானுபூதியைப் பெறுவதற்கு மார்க்கங்கள் பல இருக்கின்றன. அவைகளை முறையாகக் கையாண்டு பலர் பரம்பொருளின் அனுபூதியைப் பெற்றிருக்கின்றனர். கடினமான தவம் புரிந்தும், தேவாராதனை பண்ணியும், பக்தியை வளர்த்தும் சிலர் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாயிருக்கிருர்கள். அன்னவர்கள் தங்கள் சொந்த முயற்சிகளாலேயே பரிபூரணத்தை எட்டியவர்கள் ஆகிருர்கள். இனி, நாரதர், சுகதேவர் போன்ற பெருமக்கள் பிறவியிலேயே சித்த புருஷர்களாக அமைந்துள்ளார்கள். அன்னவர்களை நித்திய சித்தர்கள் என்று இயம்புவது மரபு. வேறு சிலர் திடீரென்று பரிபூரணத்தை எட்டியவர்களாகிருர்கள். மானுடனொருவன் எதிர்பாராத பாங்கில் பொற்குவியலைப் பெறுவதற்கு நிகர் அது. இன்னும் சிலர் சொப்பனத்தின் வாயிலாக ஈசுவரானுபூதியைப் பெற்றிருக்கிருர்கள். அன்னவர்கள் சொப்பன சித்தர்கள் என அழைக்கப் பெறுகின்றனர். இன்னும் சிலர் ஈசுவரானுக்கிரஹத்தால் அவரை அடையப்பெற்றவராகிருர்கள்." இங்ஙனம் இயம்பிக்கொண்டு பக்திப் பரவசநிலையடைந்து பரமஹம்சதேவர் பாடலொன்று பாடினுர். அதில் அடங்கியிருந்த கருத்துக்களாவன: அன்னை பராசக்தி ச்யாமாவினுடைய திருக்காட்சி எல்லார்க்கும் வாய்க்குமா? காளிகாதேவியின் அருள் சொத்தானது பொதுவுடைமையாக அமைந்திருக்கிறதா? என்ன பரிதாபகரமான நிலை! என்னுடைய மட நெஞ்சே அம்பிகையின் அருளை உள்ளவாறு கண்டு கொள்ளமுடியாத நிலையிலிருக்கிறது...

சிறிது நேரம் பரமஹம்சதேவர் ஆனந்தப் பரவசநிலையில் மூழ்கியிருந்தார். அவருக்கு அருகில் கிரீஷ்சந்திரகோஷ், மகேந்திரநாத குப்தர் ஆகிய அன்பர்கள் வியப்புற்றவர்களாக அமைதியாக அமர்ந்திருந்தனர். சில நாட்களுக்கு முன்பு இதே கிரீஷ்சந்திரகோஷ் பரமஹம்சதேவரை அவமானப்படுத்துகிற பாங்கில் தம்முடைய நாடகக் கொட்டகையில் நடந்து கொண்டார். அத்தகையவர் இப்பொழுது மனம் திருந்தப் பெற்றவராகத் தென்பட்டார்.

என்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

2-4. பொய்கண்டார் காணுப் புனிதம்எனும் அத்வைத
மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ.

ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்தில் இல்லாது எது மறைந்துபட்டுப் போகிறதோ அது பொய். இந்த விளக்கத்துக்கு ஒப்பப் பிரபஞ்சமுழுதும் பொய் என ஒதுக்கப்படுதல் வேண்டும். அதற்கு நிகராக மஹாபிரளயம் நிகழ்கின்ற பொழுது அண்டங்களனைத்தும் மறைந்துபட்டுப் போகின்றன. மறைந்துபட்டுப் போதல் என்பதன் பொருள் சூன்யமாகப் போகின்றன என்பதன்று. பஞ்சேந்திரியங்களுக்குக் கட்புலனுகின்ற பிரபஞ்சம் கட்புலனுகாத சூட்சுமநிலை எய்துகிறது. மனிதனுடைய ஜாக்ரதாவஸ்தையில் இம்மாயப் பிரபஞ்சம் காட்சியிலிருக்கிறது. சுஷுப்தியில் இது மறைந்துபட்டுப் போகிறது. ஆகவே ஜீவாத்மன் ஒருவனுக்கு இப்பிரபஞ்சமும், இதில் வாழ்ந்துவருகிற வாழ்க்கையும் நிலைபேறு உடையவைகள் ஆகமாட்டா. ஆகவே பிரபஞ்சத்தில் பற்றுதலும், பிரபஞ்ச வாழ்க்கையில் பற்றுதலும் வைக்கின்றவர்களைப் பொய்கண்டார் எனப் பாகுபடுத்துதல் வேண்டும். நிலையற்ற உலக வாழ்க்கையில் பற்று வைத்திருக்கிறவன் நிலையுற்ற தெய்வக் காட்சிக்குத் தகுதியற்றவன் ஆகிறுன். நூலாசிரியர்கள் இக் கோட்பாட்டை ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகிறுர்கள். இருண்டு வருகிற நேரத்தில் சுருண்டு கிடக்கிற கயிறு ஒன்றைப் பார்க்கிறவன் அதைப் பாம்பு என்று பொருள்படுத்துகிறுன். அதைப் பாம்பு என்று பொருள்படுத்தும் மயக்கத்திலிருக்கும் வரையில் அப்பொய்க் காட்சியே அவனுக்கு மெய்க்காட்சியாகப் புலனுகிறது. அப்பொய்க் காட்சியின் மயக்கம் நீங்கப்பெறுகிற வேளையில்தான் அது கயிறு என்னும் மெய்க்காட்சி அவனுக்கு வாய்க்கிறது.

இனி அத்வைதம் என்னும் கோட்பாட்டைப் பற்றிய உட்கருத்தை நாம் அறிந்துகொள்ளுவது அவசியமாகிறது. துவைதம் என்றுல் இரண்டு எனப் பொருள்படுகிறது. உலகம் வேறு, இவ்வுலகை ஆண்டுவருகிற இறைவன் வேறு எனப் பொருள்படுத்துவது துவைதம். இறைவன் தானே உலகாகத் தோன்றிக் கொண்டிருக்கிறுன். ஆக இறைவன் வேறு, அவன் ஆண்டு வருகிற உலகம் வேறு எனப் பொருள்படுத்துவது மயக்கமாகும். எங்ஙனம் கயிறு தானே பாம்பாகத் தென்பட்டதோ அங்ஙனம் அக்ஞான வேளையில் ஜீவாத்மனுக்கு இறைவனே உலகாகக் காட்சிகொடுக்கிறுன். இறைவன் வேறு உலகம் வேறு அல்ல. அத்வைதம் என்றுல் இரண்டற்றது எனப்பொருள் படுகிறது. இறைவனும் உலகும் இரண்டல்ல, அத்வைதம். இருக்கிற ஒரு பொருளை உலகாகப் பொருள்படுத்துவது புல்லியகாட்சி. பொருளை உள்ளது உள்ளபடி காண்பது புனிதக் காட்சி. பிரபஞ்சமும், பரமனும் அத்வைதம், இரண்டு பொருள்கள் ஆகமாட்டா. மயக்கத்தால் பிரபஞ்சமாகக் காண்பது பொய்க்காட்சி. ஞானத் தெளிவால் பொருளை இருக்கிறபடி இறைவனைக் காண்பது மெய்க்காட்சி. திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்த மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்னும் நூலில் சிவதத்துவத்துக்கு விளக்கம் தருகிறுர். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்னும் வேதமொழிப்படி மெய்கண்டதேவர் பொருளைப் பிரபஞ்சமாகப்பொருள்படுத்துவது பொய்கண்டார் காட்சி என்றும், பொருளை மெய்ப்பொருளாகிய சிவனைக் காண்பது மெய்க்காட்சி என்றும்விளக்கியருளியுள்ளார். பொருளை உள்ளபடி காண்பது புனிதக் காட்சி. மயக்கத்தில் பொருளைத் திரிவுபட்டுக் காண்பது பொய்க்காட்சி. சிவஞானபோதத்தின் வாயிலாகப் பொருளை உள்ளபடி காணும் மெய்ஞ்ஞானத்தை உலகுக்கு வழங்கியுள்ள மெய்கண்ட நாதனை வணங்கி அவர் அருளால் மெய்க்காட்சி காணும் நன்னுள் விரைவில் வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

2-5. பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்தம் ஆகஉண்மை
சாதித்தார் பொன்அடியைத் தாழ்பணிவது
எந்நாளோ.

அருள்நந்திசிவாச்சாரியர் அக்காலத்தில்

சகல ஆகமப் பண்டிதர் என்னும் பட்டம் பெற்றிருந்தார். சிவபக்தர்கள் பலர் அவரிடம் சென்று சிவதீட்சை பெற்றுவந்தனர். தமது ஞான பரிபாகத்தைப்பற்றிச் சிறிது செருக் குற்றிருந்த அருள்நந்திசிவாச்சாரியர் தம் மிடம் மெய்கண்ட தேவர் ஏன் தீக்ஷைபெற வரவில்லை என்று எண்ணினர். அப்படி எண் ணியவர் தாமே புறப்பட்டு மெய்கண்டதேவ ரிடம் சென்ருர். அருள் நந்தி சிவாச்சாரியர் படைத்திருந்த ஞானச்செருக்கை மெய் கண்ட தேவர் தமது ஞான பரிபாகத்தால் நன்கு அறிந்துகொண்டார். அவருடைய அருள் நோக்கத்தால் அருள்நந்திசிவாச்சாரி யரின் ஞானச் செருக்கு அகன்று போவதா யிற்று. மெய்கண்டதேவரைக் குருவாக ஏற்றுக் கொண்டு அவர் முற்றிலும் ஞானபரிபாகம் அடைந்தார். அதன் பிறகு அவர் இயற்றிய சிவ ஞான சித்தியார் எட்டாவது சூத்திரம் முப்ப தாவது திருச்செய்யுளிலே முதல்இரண்டு அடி களாகிய "பாதியிலே இவ்வுலகம் நிலையற்றது என விளங்கும்படி சுத்த அத்வைத ஞானத்தை நிலைநாட்டியிருக்கிருர். அத்தகைய அருள்நந்தி சிவாசாரியரின் திருவடிகளை வணங்கி அடியே னும் ஆத்மபரிபாகம் அடைவது எந்நாளோ" என்பது இக்கண்ணியின் கருத்து.

2-6. சிற்றம் பலம்மன்னும் சின்மயராம் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள் எந்நாளோ.

ஞான சொருபமாயிருக்கின்ற சிதம்பரத் திலே பரம்பொருளோடு இரண்டறக் கலந்த ஞான சொரூபியாகிய திருஞானசம்பந்த தேசி கரைத் திரிகரணங்களும் ஒன்றித்து வணங்கு வதற்கான பரிபக்குவம் எளியேனுக்கு என்று வாய்க்கும் என்று ஏங்கியிருப்பது இக்கண்ணி யில் அடங்கியிருக்கின்ற கருத்து.

2-7. குறைவு இல் அருள் ஞானமுதல் கொற்றங்
குடிஅடிகள்
நறைமலர்த்தாட்கு அன்புபெற்று நாம்இருப்பது
எந்நாளோ.

கொற்றங்குடியில் சிவஞானத்துக்குரிய பார மார்த்திகப்பெருவாழ்வு வாழ்ந்த உமாபதிசிவா சாரியரின் தேன் நிறைந்துள்ள தாமரைத் திரு வடிகளைப் போற்றி அவர் பக்தியில் ஊறியிருக் கும் நல்லநாள் எனக்கு எப்பொழுது வாய்க்கும் என்பதுஇக்கண்ணியில் அடங்கியுள்ளகருத்து.

2-8. நான் அவங்கள் போகாமல் நன்னெறியைக்
காட்டிஎனை
ஆளவந்த கோலங்கட்கு அன்புவைப்பது
எந்நாளோ.

காலத்தை வீண்போக்காமல் சிவஞான சன் மார்க்கத்தினைக் காட்டிப் பக்தர்களை ஆட் கொள்ள எழுந்தருளியுள்ளசான்ருேர்களுக்குத் தூய அன்பு வைப்பது எந்நாளோ என்பது இக்கண்ணியிலுள்ள கருத்து.

2-9. என் அறிவை உள் அடக்கி என்போல் வரும்மவுனி
தன் அறிவுக்கு உள்ளே நான் சாருநாள் எந்நாளோ.

உலக வியவஹாரங்களிலே செல்லுகிற ஜீவ போத உணர்ச்சியை நான் ஒதுக்கித் தள்ள வேண்டும். என்னைப் போன்றே பஞ்சபூதங் களாலாகிய மானுட வடிவெடுத்து என்னை உய்விக்க என்முன் தோன்றி வந்தவர் மௌன குரு. அவருடைய சொரூப தியானத்தில் மூழ்கியிருந்து முற்றிலும் நான் அவர் மயம் ஆகின்ற நல்ல நாள் எனக்கு எப்போது வாய்க்கும்?

2-10. ஆறுள்ஒன்றைநாடின் அதற்கு ஆறும்உண்டாம்
என்று எமக்குக்
கூறும் மவுனி அருள் கூடுநாள் எந்நாளோ.

அகச் சமயங்கள் ஆறு இருக்கின்றன. அவைகள் முறையே சைவம், வைஷ்ணவம். சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் என்னும் பேர் பெற்றுள்ளன. இந்த ஆறு சமயங்களுள் ஒரே பரம்பொருள் முறையே சிவன் என்றும், விஷ்ணு என்றும், அம்பிகை யென்றும், கணபதி என்றும், குமரன் என்றும், சூரிய நாராயணன் என்றும் பெயர் பெற்றுள் ளது. இவ் ஆறு மூர்த்திகளும் உபாசனைக்குரிய வர்களேயாம். இவர்களுக்கிடையில் உயர்வு தாழ்வு பாராட்டுவது பரம்பொருள் நிந்தனைக் குச் சமனுகும். சாதகன் ஒருவனுக்கு இஷ்ட மூர்த்தியாயமைந்துள்ள தெய்வமே ஆறுசமயங் களிலும் அதனதனுக்குரிய தெய்வமாக இலங்கு கின்ருர் எனக்கருதுதல் வேண்டும். இம்மூர்த்தி களுள் எந்த மூர்த்தியை வழுத்தினுலும் அது பரமனுக்குரிய வழிபாடு ஆகிறது. அவ் உபா சனை சாதகனை முக்தியின்பால் எடுத்துச் செல் லும் என்று உபதேசித்த மௌனகுருவினேடு ஒன்றுபட்டிருக்கும் நாள் எப்போது வாய்க்கும் என்பது இக்கண்ணியின் கருத்து.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

19. நீங்கள் தானம் செய்யும்பொழுது ஊரார் யாவரும் பார்க்கவேண்டும் என்ற எண்ணங்கொள்ள வேண்டாம். விளம்பரத்துக்கு என்று செய்யும் தானம் கடவுளுக்கு ஏற்புடையதாகாது. வெளிப்பகட்டில் விருப்பமுடையவர்கள் தேவாலயங்களிலும் தெருக்களிலும் கொட்டு முழக்குடன் தானம் செய்கின்றனர். உலகத்தவர் தங்களைப் புகழ்ந்து பேச வேண்டுமென்பதற்காக அங்ஙனம் அவர்கள் செய்கின்றார்கள். அவர்களுக்கு அதற்கேற்ற வெகுமதியும் கிடைக்கின்றது என்பது உண்மை. நீ பிறர்க்கு ஏதாவது எடுத்துத் தானமாகக் கொடுக்கும்பொழுது அடக்கத்துடனும் பணிவுடனும் இரு. உன் வலக் கை வழங்குவதை இடக்கை அறியாதிருக்கட்டும். நீ கொடுக்கும் தானத்தை ரகசியமாகச் செய். உன் மனத்தகத்து மறைந்திருக்கும் சர்வேசுவரன் அதை அறிந்துகொள்வான். பிறகு அவர் உலகறிய உன்னை ஆட்கொள்வார்.

இங்கு இயேசுநாதர் செயலையும் செயலின் பலனையும் பற்றிப் பேசுகின்றார். வேதாந்தத்தில் இது கர்மத்தின் நியதி என்று சொல்லப்படுகிறது. நலம் செய்கின்றவர் நலம் அடைவார் என்பது கர்ம நியதி. நலன் யார் செய்தாலும் செய்தவருக்கு நலம் வந்து வாய்க்கும். கேடு செய்தவர் அதன் விளைவாகக் கேட்டை அடைவார். இது கர்மத்தின் நியதி. தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்பது கோட்பாடு. பூரண நிலையை அடைய விரும்புபவர்கள் நலம், கேடு ஆகிய இரண்டிலும் பற்றற்று இருக்கவேண்டும். கர்மபலனில் பற்றற்று இருப்பதே நிறைநிலையாகும். நலம் கேடு ஆகிய இவ்விரண்டு வினைகளின் மூலமாக வரும் விளைவுகளாகிய பதிவுகளிலிருந்து மனம் விலகி இருத்தல் வேண்டும். புண்ணியமும் செயலுக்குக் காரணமாக இருக்கின்றது. கர்மத்தைக் கடந்து கர்மாதீதத்துக்குப் போக வேண்டுமென்றால் கர்மபலன்களை எல்லாம் ஈசனிடம் சமர்ப்பித்து விடவேண்டுமென்று கீதை போதிக்கிறது. இதுதான் கர்மயோகம். கர்மத்தின் பலனைத் தெய்வத்திடம் ஒப்படைப்பதன் வாயிலாகத் தெய்வத்துடன் நாம் இணைந்துவிடுகின்றோம்.

கர்மயோகத்தில் ஈடுபட்டிருக்கும் கர்மயோகியின் செயலுக்கு முடிவு இல்லை. ஆனால் கர்மயோகி தனக்காக என்று செயல்புரிவதில்லை. செய்கின்ற ஒவ்வொரு செயலையும் அவன் வழிபாடாகச் செய்கின்றான். கர்மபலனை எல்லாம் கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றவன், கர்மபலனில் பற்றற்றுச் செய்கிறவனுக்கு நிகராகின்றான். நாம் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றியடையும் பொழுது மனதில் கர்வம் வந்துவிடுகிறது. நம் செயலைப் பிறர் பாராட்டும் பொழுதும் நம்மிடத்து அஹங்காரம் உண்டாகிறது. ஆனால் கர்மயோகி இக்குற்றத்துக்கு ஆளாவதில்லை. வெற்றி கிட்டினாலும், பிறர் போற்றினாலும் மனதில் எவ்வித விகாரமும் கர்மயோகிக்கு ஏற்படுவதில்லை. எடுத்துக்கொண்ட செயலைக் கர்மயோகி திறமையாகச் செய்கின்றான். விளைவைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. விபரீதமான விளைவுகள் ஏற்பட்டாலும் பிறர் அவனுடைய செயலைக் குறை கூறினாலும் அவனுடைய செயலைப் பிறர் அறவே புறக்கணித்தாலும் அதைப்பற்றி அவன் மனத்தளர்ச்சி அடைவதில்லை. தியாக மனப்பான்மையுடன் தங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்திப் பலர் கர்மம் செய்கின்றனர். ஆனால் கடவுளை அடைய வேண்டுமென்கின்ற லட்சியத்தை உடையவர்கள்தாம் கர்மபலன் பாதகமாக அமைந்தாலும் மனத்தளர்ச்சி அடையாமல் இருப்பார்கள். மற்றவர்கள் காரியம் நிறைவேறாவிட்டாலும் செய்த காரியம் பயன் கொடுக்காது போய்விட்டாலும் மனத்தளர்ச்சிக்கு உள்ளாவார்கள். பக்தன் ஒருபொழுதும் மனத்தளர்ச்சி அடைவதில்லை. அவனுக்குக் கர்மபலனில் பற்று இல்லை. கடவுளை அடைவதுதான் அவனுக்குக் குறிக்கோள். ஆகையால்தான் பக்தன் ‘நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே’ என்ற கோட்பாட்டில் உறுதியாக இருக்கின்றான்.

ஆசைதான் கர்மம் செய்யும்படி நம்மைத் தூண்டுகிறது. ஆசை இல்லாவிட்டால் நம் மூலம் கர்மம் நிகழாது. கர்மத்தில் உதாசீன

மும், ஊக்கமின்மையும், சோம்பலுற்று இருப்பதும், விதி என்று சொல்லிக் கொண்டிருப்பதும், பற்றற்ற நிலை என்று பல மக்கள் நினைக்கின்றார்கள். பற்றற்ற நிலை என்பது இவற்றிற்கெல்லாம் முற்றிலும் வேறுபட்டதாகும். பற்றற்று இருக்கும் தன்மை கடவுள்பற்றிலிருந்து வருகிறது. உலகப்பற்று உடையவனை விடக் கடவுள் பற்றுடையவன் சிரத்தையோடு காரியம் செய்கின்றான். கர்மயோகி கர்மத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது தன்னைக் கர்மத்தோடு முற்றிலும் லயப்படுத்திக் கொள்கின்றான். கர்மத்தை வழிபாடாக அவன் செய்வதாலும் தன் மனம் முழுவதையும் கர்மத்தில் ஈடுபடுத்துவதாலும் கர்மம் செம்மையாக நிகழ்கிறது. ஆனால் ஒரு க்ஷண நேரத்தில் அவன் தன்னை முழுவதும் அக்கர்மத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முடியும். கர்மயோகி பற்றற்றும், சுயநலமற்றும் கர்மத்தைச் செய்வதால் கர்மபலனில் அவன் கட்டுண்டு போவதில்லை. கர்மபலனில் கட்டுப்படாது அவன் கர்மம் செய்துகொண்டே இருக்கின்றான். அக்கர்மம் அவனிடத்துச் சித்தசுத்தியை உண்டாக்குகிறது. சித்தம் சுத்தியடைந்தால் பரத்தின் காட்சி உண்டாகிறது.

பீஷ்மர் ஒரு சிறந்த கர்மயோகியாவார். பாரதயுத்தத்தில் அவர் கௌரவர்களுக்குத் துணையாகப் போர்புரிந்தார். கௌரவர்களுக்குத் துணைபுரிந்தது கேட்டுக்குத் துணைபுரிந்ததாகும். சூழ்நிலை கௌரவர்களுக்குத் துணைபுரியும்படியாக அமைந்தது. கேட்டுக்குத் துணை செய்தால் அதன் விளைவாக இகழ்ச்சி வந்தமையும் என்பதைப் பீஷ்மர் அறிந்திருந்தார். மேலும், கௌரவர்கள் நிச்சயம் வெற்றி அடையமாட்டார்கள் என்பதையும் பீஷ்மர் அறிந்திருந்தார். பாண்டவர்கள் பக்கம் தர்மம் இருந்தது என்பதையும், தெய்வசகாயம் இருந்தது என்பதையும் பீஷ்மர் நன்கு அறிந்திருந்தார். ஆகையால் கௌரவர்கள் நிச்சயம் வெற்றி அடையமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். கௌரவர்களுக்காகப் போர் செய்வதால் இகழ்ச்சி வரும் என்பதையும், தோல்வி வரும் என்பதையும் அறிந்திருந்தும், போரைத் திறம்படச் செய்தார். கர்மயோகி எப்படிச் செயல்புரிவான் என்பதை அவர் பாரதப் போரில் விளக்கிக் காட்டினார். கர்மபலனில் பற்றற்றுக் கர்மம் செய்வதற்குப் பீஷ்மர் சிறந்த எடுத்துக்காட்டாகிறார். அப்படி அவர் போர் செய்ததனுடைய விளைவாக உலகுக்கு ஓர் உண்மை விளங்குவதாயிற்று. கேடு எவ்வளவு வலிவுடையதாக இருந்தாலும், இறுதியில் அது அழிந்துபோகும் என்ற உண்மையைப் பீஷ்மர் தம் செயலால் விளக்கிக் காட்டினார்.

"இயல்வது கரவேல்" என்பது கோட்பாடு. நம்மிடத்தில் உள்ளதைக் கரவாது உலகுக்கு வழங்கிக்கொண்டே இருக்கவேண்டும். நாம் உலகுக்கு எதை வழங்குகின்றோமோ அது பன்மடங்கு நம்மிடத்தில் வளர்ச்சியடைகிறது. அப்படி வழங்குவதை விளம்பரமில்லாது, பணிவோடு வழங்க வேண்டும். செல்வம் படைத்தவர்கள் அச்செல்வம் உலக நலனுக்குரியது என்று எண்ணிச் சத்கர்மங்களில் அச்செல்வத்தைப் பயன்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். அப்படிச் சத்கர்மங்கள் செய்யும் பொழுது 'நான்' என்ற முனைப்புக்கு இடம் தரக்கூடாது. அறிவு படைத்தவர்கள் தங்களிடத்துள்ள அறிவையும், பண்பு படைத்தவர்கள் தங்களிடத்துள்ள பண்பையும் உலகுக்கு எடுத்து வழங்குவதில் பரமானந்தம் அடையவேண்டும். உலகுக்கு உதவி செய்வதன் வாயிலாக ஒவ்வொருவரும் தங்களுக்கே உதவி செய்தவர்களாகிறார்கள். தாங்கள் செய்யும் சத்கர்மங்களை எல்லாம் கடவுள் பார்த்துக் கொண்டு இருக்கிறார் என்றும் உலகத்தவர் அவற்றைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் அறிபவர்கள் கடவுள் பக்தர்களாகிறார்கள். அவர்கள் சத்கர்மங்களை விளம்பரத்துக்காகவோ, புகழுக்காகவோ, உலக மக்களின் பாராட்டுதலுக்காகவோ செய்வதில்லை. கடமையைக் கடமைக்காகவே செய்கிறார்கள். தங்கள் மூலம் நிகழ்கின்ற சத்கர்மங்களையெல்லாம் கடவுள் ஆராதனையாகக் கருதுபவர்கள் கர்மபலனில் கருத்து வைப்பதில்லை. கர்மபலனிலுள்ள பற்றைத் துறக்கின்ற அளவு கர்மயோகிகள் தெய்வத்தின் அருளுக்குப் பாத்திரமாகிறார்கள். உலக மக்கள் ஒருவனுடைய செயலைப்பார்க்கிறார்கள்; ஆனால் இறைவன் உள்ளத்தைப் பார்க்கிறார். இயேசுவின் இவ்வுபதேசம் இக்கருத்துக்களை விளக்குகிறது.

ஆன்மீக உலகம்

வாழ்க்கை சம்பந்தமான பல உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகளை வேதங்கள் என்று சொல்லப்படும் நூல்கள் விளக்குகின்றன. மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகளைக் கூறுவதால் வேதத்துக்கு மறை என்ற ஒரு பெயரும் உண்டு. உண்மைகள் யாவும் நம் உள்ளத்தே மறைந்து கிடக்கின்றன. உள்ளத்திலுள்ள மறைப்பை நீக்குவதற்கு வேதங்கள் வழிகாட்டித் தருகின்றன. வேதங்கள் காட்டியபடி வாழ்ந்து உள்ளத்திலுள்ள மறைப்பை அகற்றினால் உண்மைகள் தெளிவாக நமக்கு விளங்குகின்றன. அவ் உண்மைகளை அறிந்து அவற்றின்படி நடப்பது நம் வாழ்க்கையின் திட்டமாக இருக்கவேண்டும்.

நாரதருக்குத் திரிலோகசஞ்சாரி என்பது ஒரு பெயர். மூன்று உலகங்களுக்கும் அவர் போய் வருகிறார் என்பது அதன் பொருள். நாரதர் போன்று நாமும் திரிலோக சஞ்சாரிகளாக இருக்கின்றோம். நாம் நாள்தோறும் மூன்று உலகங்களில் மாறி மாறி இருந்து வருகின்றோம். நனவு அல்லது விழிப்பு நிலையில் நாம் ஒரு உலகத்தில் இருக்கின்றோம். சொப்பனம் அல்லது கனவு நாள்தோறும் நமக்கு வந்து அமையும் இரண்டாவது உலகமாகும். சுஷுப்தி அல்லது ஆழ்ந்த உறக்கம் நமக்கு அமையும் மூன்றாவது உலகமாகும். இம்மூன்று உலகங்களிலும் நாம் நாள்தோறும் இருந்து வருகின்றோம். இம்மூன்று உலகங்களிலும் நமக்கு அனுபவங்கள் ஏற்படுகின்றன. நனவு அல்லது விழிப்பு நிலையில் புற உலக அனுபவம் நமக்கு உண்டாகிறது. கனவில் நம் மனது எத்தகையது என்பதை அறிவது நமக்குச் சாத்தியமாகும். ஆழ்ந்த உறக்கத்தில் உண்டாகும் அனுபவம் நமக்கு முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆழ்ந்த உறக்கத்தில் நாம் ஜடம் போன்று கிடக்கின்றோம். ஆகையால் அவ் உலக அனுபவம் நமக்கு ஒன்றும் தெரிவதில்லை. இம்மூன்று உலகங்களுக்கும் அப்பாற்பட்டது ஆன்மீக உலகமாகும். ஆன்மீக உலக அனுபவத்தைப் பெறுவது நம் வாழ்க்கையின் லட்சியமாகும்.

பொதுவாக உயிர்கள் நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று உலகங்களில் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. அங்கிலையில் இவ்வுலகத்தைப்பற்றிய சில அனுபவங்களை அவை பெறுகின்றன. இவ்வுலகத்துக்கு அப்பால் செல்ல விரும்புபவர்கள் மிகச்சிலரேயாவர். மேய்ச்சல் தரை ஒன்றில் முளை ஒன்று அடித்துக் கயிறு கொண்டு மாடு ஒன்று அதில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். கயிற்றின் நீளம் எவ்வளவோ அந்த அளவுக்குத்தான் மாடு புல்தரையை வட்டமிட்டு வரும். கயிற்றின் நீளத்துக்கு அப்பால் அது செல்லமுடியாது. அங்ஙனம் நமக்கு நாமே ஒரு எல்லையை உண்டுபண்ணி வைத்திருக்கிறோம். அந்த எல்லைக்குள் வரும் அனுபவங்களைத்தாம் நாம் ஆராயமுடியும். அதற்கு அப்பால் இருக்கின்ற உண்மைகளைப் பற்றி நமக்குத் தெரியாது.

பௌதிக விஞ்ஞானம் புறவுலகைப்பற்றி ஆராய்ச்சி செய்து சில உண்மைகளை வெளியிட்டு இருக்கின்றது. உள்ளத்தைப்பற்றி உள நூல் ஆராய்ச்சி பண்ணி இருக்கிறது. உள்ளத்துக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ச்சி பண்ணுவதுதான் ஆன்மீகம் எனப்படுகிறது. ஆன்மீக உலகம் உள்ளத்தையும் கடந்து அப்பால் இருக்கிறது. மன உலகை ஆராய்ச்சி செய்து சில அற்புதச் செயல்களைச் செய்கின்றார்கள். அவைகள் சித்திகள் என்னும் பெயர் பெறுகின்றன. புறவுலக ஆராய்ச்சியோடு பௌதிக விஞ்ஞானம் நின்றுவிடுகிறது. சித்திகளில் கருத்து உடையவர்களாக மனவுலக ஆராய்ச்சியோடு சிலர் நின்றுவிடுகின்றனர். இவ்விரண்டையும் கடந்து அப்பால் மனத்தைச் செலுத்தும்பொழுதுதான் ஆன்மீக உண்மைகள் நமக்கு விளங்குகின்றன. பௌதிக விஞ்ஞானம் எங்கு முடிவடைகிறதோ ஆங்கு ஆன்மீகம் துவங்குகிறது என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். ஆக இவ்வுலக ஆராய்ச்சியோடு நின்றுவிடுவது உண்மையை அறிந்தது ஆகாது. அகவுலக ஆராய்ச்சி செய்து ஆங்குச் சில அற்புதங்களைக் கண்டு அவற்றில் மயங்கி விடுவதும் உண்மையை

அறிவது ஆகாது. சித்திகளெல்லாம் பொருளற்றவை என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு மனதை அப்பால் செலுத்தும்பொழுதுதான் உண்மை நமக்கு விளங்குகிறது. ஆன்மீக உலகத்தில் மனதைச் செலுத்தும்பொழுது தான் நாம் உண்மையை அறிபவர்களாகின்றோம்.

புற உலகில் நம் உள்ளத்தைக் கவர்வன உடலாசையும், பொருளாசையும் ஆகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விரண்டையும் காமம், காஞ்சனம் என்று பகர்வார். காமத்தையும் காஞ்சனத்தையும் வென்று பழகுகின்றவர்கள் புற உலகுக்கு அடிமைகளாக இருக்கமாட்டார்கள். காமத்துக்கும், காஞ்சனத்துக்கும் வசப்பட்டுக்கிடப்பவர்கள் புற உலகத்துக்குத் தங்களை அடிமைப்படுத்திக் கொள்கின்றார்கள். மேலும் ஆணவ அகங்காரத்துக்கு இடம் தரலாகாது. ஆணவ அகங்காரத்துக்கு உள்ளத்தில் இடம் தருபவர்கள் பேரிலும் புகழிலும் பற்று உடையவர்களாக இருக்கிறார்கள். பேரையும் புகழையும் பொருள் அற்றவைகள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு மனதை ஆழ்ந்து உள்ளே செலுத்துபவர்கள் ஆன்மீக உலகுக்குப் போகின்றார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தற்காலக் கல்வியைப் பொருளற்றது என்று ஒதுக்கித் தள்ளினர். கற்கின்ற பருவம் வந்ததும் அவர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அவர் சில ஆண்டுகள் பள்ளிக்குச் சென்றதும் பள்ளிப் படிப்பில் பிரயோஜனம் இல்லை என்பதை அறிந்துகொண்டார். பள்ளிக்கூடம் சென்று கற்பதில் காலத்தைக் கழிக்க விரும்பவில்லை. சாஸ்திரங்களும் மனிதனுக்கு எந்த விதத்தில் உதவுகின்றன என்பதை அவர் விளக்கி இருக்கின்றார். நண்பன் ஒருவனிடமிருந்து ஓர் அன்பருக்குக் கடிதம் வந்தது. அதில் அவன் சில சாமான்கள் வேண்டுமென்று எழுதியிருந்தான். அக்கடிதத்தை வாசித்துப் பார்த்து அதில் அவன் குறிப்பிட்டிருந்த சாமான்களையெல்லாம் அறிந்துகொண்டான பிறகு அதைக் கிழித்துப் போட்டு விட்டார். சாஸ்திரங்கள் அக்கடிதத்துக்கு ஒப்பாகின்றன. மெய்ப்பொருளை எப்படி அறிவதென்று சாஸ்திரங்கள் விளக்கி இருக்கின்றன. மெய்ப்பொருளை அறிந்தான பிறகு சாஸ்திரங்களால் பிரயோஜனம் இல்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாஸ்திரங்களின் துணையை நாடாது நேரே அம்பிகையினிடத்துப் பிரார்த்தனை செய்தார். அவர் அம்பிகையினிடத்துச் செய்த பிரார்த்தனையாவது: "தாயே, நான் சாஸ்திரங்களைக் கற்கமாட்டேன். நான் எதைக் கற்க வேண்டுமென்று நீ எண்ணுகின்றாயோ அதை நீயே எனக்குப் புகட்டிவிடு. நான் உன் மகிமையை நூல்கள்மூலம் அறிய விரும்பவில்லை. நான் உன் மகிமையை உன் மூலமாகவே அறிந்துகொள்ள விரும்புகின்றேன்." இங்ஙனம் அவர் பிரார்த்தித்துவிட்டு அம்பிகையின் உபாசனையில் ஆழ்ந்து மூழ்கினர். ஆன்மீக உலகத்துக்குத்தம் மனதைச் செலுத்தினர். புற உலகத்திலிருந்து தம் மனதைப் பிரித்து எடுத்துக்கொண்டார். அக உலகத்தினின்றும் மனதைப் பிரித்தெடுத்து ஆன்மீக உலகத்தினுள் அதைச் செலுத்தினர். ஆன்மீக உலகத்தில் உள்ள மகிமைகளையெல்லாம் அறிந்தார். ஆன்மீக உலக அனுபவம் ஏற்பட்டான பிறகு அக உலகமும் புற உலகமும் அவரை வசப்படுத்த முடியவில்லை. ஆன்மீக உலக அனுபவம் ஏற்பட்டு விட்டால் இவ்வுலக இன்பம் பொருளற்றது என்று தெளிவாக விளங்கிவிடும். கற்கண்டு கட்டியைச் சுவைத்துப் பழகியவனுக்குக் கருப்பட்டி சுவைக்காது. அங்ஙனம் ஆன்மீக இன்பம் ஏற்பட்டவர்களுக்கு உலகியல் இன்பமோ புலன் இன்பமோ இன்பமாகத் தோன்றா. முதல் முதல் இனிப்புப் பண்டத்தைச் சாப்பிடுபவனுக்குக் கருப்பட்டி சுவையாகத் தென்படும். தூயகற்கண்டு கட்டியைச்சுவைத்துப் பழகியவனுக்கு மட்டமான கருப்பட்டி சுவைக்காது. புறஉலக இன்பம் கருப்பட்டிக்கு நிகரானது. ஆன்மீக இன்பம் கற்கண்டுகட்டிக்கு நிகரானது. எனவேஈசுவர நாட்டம் உடையவர்களாகி ஆன்மீக இன்பத்தைப் பெற்றுவிடுவோமானல் புறஉலகம் நம்மைச் சிறிதும் மயக்காது. ஆன்மீக உலக அனுபவம் இல்லாதவர்கள் புறஉலக மயக்கத்தில் அகப்பட்டுக்கொள்கின்றார்கள்.

ஆன்மீக உலகத்தை நாடிச் சென்றவர்களைப் புற உலகம் மயக்கி இருக்கிறது. அம்மயக்கத்துக்கு அவர்கள் இடமும் தந்து இருக்கிறார்

கள். விசுவாமித்திரர் உலக மயக்கத்தால் இழுக்கப்பட்டு மேல் நிலையில் இருந்து தவறி விழுந்திருக்கிறார். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய வாழ்வில் புற உலகம் அவரை எள்ள ளவும் மயக்கவில்லை. மார்வாரி பக்தர் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார். அவர் ஸ்ரீ ராம கிருஷ்ணரைப் பார்த்து "உங்களுக்குப் பிற் கால வாழ்க்கையில் பயன்படுவதற்காக உங் கள் பெயரில் நான் பத்தாயிரம் ரூபாயை வங்கி யில் போட்டு வைக்க எண்ணியுள்ளேன்" என்று கூறினார். அதற்குப் பரமஹம்சர் பகர்ந்ததாவது: "இனிமேல் என்னிடம் இப்ப டிப் பேசாதே. இச்சொல் காதில் விழுந்ததும் எனக்கு வேதனை மிக உண்டாயிற்று. ஒருவர் என் தலையை வாள்கொண்டு அறுத்தால் எவ்வ ளவு வேதனை உண்டாகுமோ அவ்வளவு வேத னையை நீ பேசிய சொல் என் உள்ளத்தில் உண்டாக்கி விட்டது." பொருளாசையிலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் விலகி இருந்தார் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கையில் மற் றொரு நிகழ்ச்சி அவர் காமத்தை அறவே வென் றிருந்தார் என்பதைக் காட்டுகிறது. மதுர நாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தெய்வமாக வைத்து வழிபட்டார். மதுரநாதர் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய உள்ளத் தூய்மையைச் சோதிப்பதற்கு ஏற்பாடு ஒன்று செய்திருந் தார். ஸ்ரீராமகிருஷ்ணரை அழைத்துக்கொண்டு ஒருநாள் உலாவச் சென்றிருந்தார். அப் பொழுது ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரை அங்கு இருக்கும்படி கூறி வெளியே வந்துவிட்டார். அவ் அறையில் விலை மாதர்கள் இருந்தார்கள். அவர்கள் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய மனதைக் கலக்க முயன்ற னர். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உள்ளம் ஆத்மீக உலகில் பிரவேசித்துவிட்டது. அவர் பரவச நிலையை அடைந்தவராக அம்மகளிரை ஆசீர்வதித்தார். அம்மகளிரும் அவருடைய காலில் விழ்ந்து வணங்கினார்கள். அறையை விட்டு வெளியே வந்த பிறகு அம்மகளிர் மதுரநாதரை வைதார்கள். பெரிய மகானிடத் தில் முறைகேடாக நடந்துகொள்ளும்படி தூண் டியது பொருந்தாதுஎன்று மதுரநாதரை அவர் கள் கண்டித்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காமத்தை அறவே வென்றிருந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக அமைகின் றது. புறவுலகிலுள்ள காமத்தூண்டுதலும், காசு ஆசைத் தூண்டுதலும் ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய உள்ளத்தைக் கலக்கமடையச் செய்ய வில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் சித்திகளில் உள்ள ஆசைகளையும் அறவே வென்றிருந்தார். அம் பிகை ஒரு தடவை கூடை நிறைய சித்திகளைக் கொண்டு வந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன் வைத்து "குழந்தாய்! நீ இவற்றை ஏற்றுக் கொள். இவற்றை நீ பெற்றுப் பேரும் புகழும் தேடிக்கொள்" என்று பகர்ந்தார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்ததாவது: "தாயே, நான் உன்னை முற்றும் நம்பி இருக்கின்றேன். நீ உன் குழந்தையைச் சித்திகளைக்காட்டி மயக்க முயன்றால் நான் வேறு யாரிடம் தஞ் சம் புகுவேன்? நீ எனக்குத் தாய். நான் உனக் குக் குழந்தை. தாயாகிய நீதான் எனக்கு வேண்டும். இந்தச் சித்திகளெல்லாம் தாயே, எனக்கு வேண்டாம். தயவு செய்து இவை களையெல்லாம் நீயே எடுத்துக்கொள். நீ தான் எனக்கு வேண்டும். உன்னைத் தவிர எனக்கு வேறு எதுவும் வேண்டாம்." இங்ஙனம் சித்தி களினுடைய மயக்கத்திலிருந்தும் அவர் தம் உள்ளத்தை மீட்டெடுத்தார். ஆக உலகக் கவர்ச்சியாகிய சித்தியும் அவருடைய உள் ளத்தை மயக்க முடியவில்லை. அவருடைய உள்ளம் ஆழ்ந்து ஆன்மீக உலகில் சென்று பேரானந்தம் அடைந்திருந்த பேருள்ளமாக அமைந்திருந்தது.

இனி, சாதாரண மக்களாகிய நம்முடைய உள்ளம் எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை ஆராய்வோம். பொறிபுலன்களுக்கு விளங்கிக்கொண்டிருப்பது புறவுலகமாகும். நம்முடைய கற்பனைகளும், எண்ணப் பதிவு களும் மனவுலகில் அடங்கி இருக்கின்றன. கண் மூலம் அழகான வடிவம் ஒன்றைப் புறவுலகில் காண்கின்றோம். அவ்வடிவத்தி லுள்ள அழகு நம் உள்ளத்தைக் கவர்கிறது. காதின் மூலம் இசையைக் கேட்கின்றோம். அவ் இசையின்பால் நம் உள்ளம் கவரப்படு கிறது. ஏன் உள்ளம் அப்படிக் கவரப்படு கிறது என்பதற்கு விளக்கம் சொல்ல முடி யாது. அப்படிக் கவர்ச்சிக்கு வசப்படுவது

சாதாரண உயிர்களின் இயல்பாகும். நம் மனதின் அடிப்பகுதியிலிருந்து உணர்ச்சி வேலை செய்து வருகிறது. அவ்வுணர்ச்சியை ஆங்கிலத்தில் Instinct என்று சொல்வதுண்டு. அவ்வுணர்ச்சி நம்மீது ஆதிக்கம் செலுத்த, அதற்கு வசப்பட்டிருப்பது நம்முடைய செயலாக இருக்கிறது. அவ்வுணர்வை அறிவுப் பகுதிக்குக் கொண்டுவந்து அது எத்தகைய உணர்வு என்பதை அறிந்து அக்கவர்ச்சிக்கு நாம் ஏன் அடிமைப்படவேண்டும்? என்று ஆராயப் புகுந்தால் அதைப்பற்றிய உண்மை சிறிது விளங்கும். அழகான உடல் வடிவத்தில் மனம் கவரப்படுகிறது. உடல் எத்தகையது என்று அறிவைக்கொண்டு ஆராய்ந்தால் சிறிது விளங்கும். தோல், இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு முதலியவைகள் இந்த உடம்பில் அடங்கி இருக்கின்றன. இவைகளைத் தனித் தனியே பார்த்தால் மனது அருவருப்புக் கொள்ளும். அருவருப்புக்குரிய பொருள்களெல்லாம் சேர்ந்து உடல் என்னும் பிண்டமாக வடிவெடுத்திருக்கின்றன. அப்படி ஆராய்ந்து அறியும் பொழுது உடல் கவர்ச்சிக்குரியது அன்று என்பது விளங்கும். ஆராயாது உடல் அழகில் நாம் மயக்கமுற்றுக் கிடக்கும் பொழுது நம்மிடத்திலுள்ள இயல்பு (Instinct) நம்மீது ஆட்சிபுரிகிறது. நம் இயல்பை எல்லாம் வென்று பழகுவது ஆத்மசாதனமாகும். இயல்பை அறிவுப் பகுதிக்குக்கொண்டு வரும் பொழுது ஆங்கு அறிவு வேலை செய்கிறது. அறிவை நாம் நன்கு கையாளவேண்டும். அறிவை நாம் நன்கு கையாளுகின்றவளவு உணர்வைத் திருத்தியமைக்கலாம். ஆனால் நாம் அறிவையே முற்றிலும் நம்பியிருக்கக்கூடாது. நம் அறிவுக்குமேல் ஒரு சக்தி உண்டு. அச்சக்தியினிடத்து அறிவு நம்மை எடுத்துச்செல்ல வேண்டும். நம் அறிவுக்கும் மேலான அறிவைத் தான் வள்ளுவர் வாலறிவு என்கின்றார். இயல்பு அறிவாகவும், அறிவு வாலறிவாகவும் மாறி அமையவேண்டும். உயிரினிடத்து இம்மாறுதல் ஏற்படும்பொழுது அது பேருயிராகப் பரிணமிக்கிறது. இயல்பை வெல்லுகின்றவளவு விவேகம் உண்டாகிறது.

விவேகத்தைக் கொண்டு நித்தியப்பொருள்கள் யாவை? அநித்தியப்பொருள்கள் யாவை? என்பதைப் பிரித்து அறியவேண்டும். விவேகம் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையில் நம்மை எடுத்துச் செல்கிறது. அவ் எல்லைக்கு அப்பால் விவேகமும் நம்மை எடுத்துச் செல்லாது.

இயல்புக்கு உட்பட்டு நடப்பதை ஒழுக்கமற்ற செயல் என்று சொல்லுகின்றோம். இயல்பை வெல்லுகின்றவளவுதான் நாம் ஒழுக்கத்தில் நிலை பெற்றிருக்க முடியும். இயல்புக்கு அடிமைகளாக இருக்கும்பொழுது புறவுலகுக்கும், புலனின்பத்துக்கும் அடிமைகளாக நாம் இருக்கின்றோம். இயல்பை வெல்ல முடியாதவர்கள் துன்பத்தையும் வரவழைத்துக்கொள்கின்றார்கள். இயல்பை வெல்லமுடியாதவர்களுக்கு இந்திரிய வாழ்வு நிலையானதாகத் தோன்றுகிறது. இந்திரிய போகம் அவர்களுக்குக் கவர்ச்சியாக இருக்கிறது. நீண்டகாலப் பழக்கம் இயல்பாக வடிவெடுக்கிறது. பொய்யை மெய்யாக எண்ணிப் பழகியதன் விளைவாகப் பொய்யான உலகம் மெய் போலக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது. இயல்பை வெல்லுகின்றபொழுது நம் அறிவு மெய்ப்பொருளைப்பற்றிச் சிந்திக்கிறது. இயல்பை வென்று அறிவு உலகத்தில் நாம் பிரவேசிக்கின்றபொழுது அகங்காரம் குறுக்கிடுகிறது.

நான் வாழ்க்கையைப்பற்றிய உண்மைகளை அறிந்திருக்கின்றேன்; எனக்குமேல் அறிந்தவர்கள் யாரும் இல்லை. இங்ஙனம் எண்ணுகின்ற எண்ணம் அகங்காரத்தால் உண்டாகிறது. அகங்காரம் மிகசூட்சுமமாக இருந்து நம்மிடம் வேலை செய்கிறது. புகழ், கீர்த்திக்கு வசப்படும்படி அகங்காரம் நம்மைத் தூண்டுகிறது. அகங்காரம் உள்ளவளவு நம் அறிவு சுருங்குகிறது.

அந்தகாரத்தை ஓர் அகமாக்கி மின்போல்
என் அறிவைச் சுருக்கினேவர்யார்?

என்று தாயுமானவர் பகர்ந்துள்ளார். அகங்காரம் இங்கு அந்தகாரம் என்று சொல்லப்படுகிறது. அறிவை விரிவடையச் செய்வது மனதை விரிவடையச் செய்வதாகும். மனதை விரிவடையச் செய்வது தான் ஞானம் என்று சொல்லப்படுகிறது. அகங்காரத்தை இமயமலையளவு பெரியதாக்கவேண்டும். இமயமலையை யாரும் கயிறு கொண்டு கட்ட முடி

யாது. இமயமலை கட்டில் அடங்காததாக இருக்கிறது. நான் பிரம்மம் [அஹம் பிரம்மாஸ்மி] என்று உணர்வது அகங்காரத்தைப் பெரியதாக்குவதாகிறது. அந்த அகங்காரம் கேடுடையதன்று. நான் உடல் சொரூபம் என்று உணர்வது அல்ப அகங்காரமாகும். அவ் அகங்காரம் உடலோடும் உலகத்தோடும் ஜீவனைக் கட்டிவைக்கிறது. உடல் மீதுள்ள பற்றை அண்டத்தின்மீதுள்ள பற்றாக விரிவடையச் செய்யவேண்டும். அப்பொழுது அகங்காரம் அகண்டாகாரமாகிறது. அண்டத்தை அடக்கி ஆள்வது ஈசனுடைய செயல். ஈசன் நிலைக்கு நம்மை உயர்த்துவது ஞானம் என்று சொல்லப்படுகின்றது. பிரபஞ்சம் அனைத்தையும் நம் சொரூபமாக உணர்கின்ற வளவு அறிவு விரிவடைகின்றது. அதை அருள்நிலை என்று பகரலாம். அறிவு முதிர்ந்த நிலையில் அது அருளாகப் பரிணமிக்கிறது.

அருள் நிலையிலிருந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ணராவார். அறிவு முதிர்ந்த நிலையில் ஈசுவரச்சந்திர வித்யாசாகர் இருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஈசுவரச்சந்திரவித்யாசாகரைப் பார்ப்பதற்கு ஒரு சமயம் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மைப் பார்க்க வருகிறார் என்பதை அறிந்த ஈசுவர சந்திரவித்யாசாகர் அவரைத் தாமே நேரில் போய் வரவேற்றுத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தார். "சாதாரண குளம்குட்டைகளைத்தாம் நான் இவ்வளவு நாட்களாகப் பார்த்து வந்தேன். ஆனால் நான் இன்றைக்குச் சாகரத்தையே பார்க்க வந்திருக்கிறேன்" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஈசுவரச்சந்திரர் தம்மைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறப்பித்துப் பேசுகின்றார் என்பதை அறிந்துகொண்டார். ஈசுவரச்சந்திரவித்தியாசாகருக்கு அகங்காரம் சிறிதும் இல்லை. ஆகையால் அவர் பகர்ந்ததாவது: "நீங்கள் சாகரத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். சாகரத்தில் உங்களுக்கு உப்பு நீர்தான் கிடைக்கும். அதை நீங்கள் பருகிச் செல்லலாம்." ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்துடன் பேச்சை நிறுத்திவிடாது மேலும் பகர்ந்ததாவது: "நீங்கள் குறிப்பிடுவது போன்று நான் காண வந்திருக்கும் சாகரம் அவித்யாசாகரம் அன்று. அவித்யாசாகரம்தான் உப்பாக இருக்கும். நான் காண வந்திருப்பது வித்யாசாகரம். அதாவது அறிவுக் கடலாகும். "ஈசுவரச்சந்திரவித்யாசாகர் பணிவுடன் பகர்ந்ததாவது: "நான் பேசுவதற்கு இனி ஒன்றும் இல்லை. தங்கள்தாம் பேருண்மைகளை எனக்குப் பகரவேண்டும்." ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாயிலிருந்து வந்த அமுதமொழிகளை ஈசுவரச்சந்திர வித்யாசாகர் குறிப்பெடுத்துக் கொண்டார். நூல்களைப் படித்தவர்கள் நூல்களிலுள்ள கருத்துக்களைத்தாம் எடுத்துச் சொல்வார்கள். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய அனுபவத்தைச் சாதாரண மக்களுக்கும் விளங்குகிற பாங்கில் எளிய வார்த்தையிலே விளக்கினார். வேதங்கள் கரடு முரடான வார்த்தைகளைக் கொண்டு கஷ்டப்பட்டு விளக்குகின்ற உண்மைகளையெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எளிய வார்த்தைகளில் தெளிவாக விளக்கி இருக்கின்றார். அப்படி அவர் வாயிலிருந்து வந்த அரிய உண்மைகளையெல்லாம் ஈசுவரச்சந்திரவித்யாசாகர் அப்படியே குறிப்பெடுத்துக் கொண்டார். மனோ வாக்குக்கு எட்டாத பொருள் என்றும், மனோ வாக்குக்கு அதீதத்தில் இருக்கும் பொருள் என்றும் பரம்பொருளுக்கு வேதங்கள் விளக்கம் தந்திருக்கின்றன. அவ்வுண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடவுள் ஒருவர்தாம் எச்சில் படாதவர் என்று பாமரர்களுக்கும் விளங்கும்படியாகப் பகர்ந்திருக்கிறார். சாதாரண மக்களுக்கு எட்டாத கருத்துக்களை எளிய முறையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்கி வந்தார். ஆன்மீக உலகில் அவர் உள்ளம் இருந்ததால் அத்தகைய விளக்கம் தருவது அவருக்குச் சாத்தியமாயிற்று. அவர் உண்மைகளை அனுபவம் மூலமாக அறிந்தார். ஆன்மீக உலகுக்குச் சென்றவர்களுக்குப் பாரமார்த்திக உண்மைகளை அறிவது மெத்தச் சுலபமாகின்றது. மனம்கீழான உணர்ச்சிக்கு வசப்பட்டிருக்கும் பொழுது பாரமார்த்திக உண்மைகளை அது கிரகிக்க முடியாது. எனவே அத்தகைய மனதுக்குப் பாரமார்த்திக நாட்டம் மிகவும் கடினமாகிறது. மேலாம் உணர்ச்சி உள்ளத்தில் ஓங்குகின்ற பொழுது பாரமார்த்திக நாட்டம் மிக எளிதாக வந்து அமைந்து விடுகிறது.

(தொடரும்)

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஐந்து கோசங்களுக்கும் ஆத்மாவுக்கும் அன்யோன்ய அத்யாசம் (மிக நெருங்கிய, ஒன்று மற்றென்ருகத் தோன்றுகிற நிலை) என்கிற சம்பந்தம் இருக்கிறது என்பதைப் பார்த்தோம். இந்த அத்யாசம் எதனுல் ஏற்படுகிறது? இது ஆத்மா, இவை ஐந்து கோசங்கள் என்று நன்ருகப் பாகுபடுத்தும் ஞானம் இல்லாததால் அவிவேகத்தால் உண்டாகிறது. இதே போன்று பிறந்தது முதல் இறக்கும்வரை பல்வேறு படித்தரங்களில் அவிவேகத்தால் இவ்வுலகில் சிரமப்படுவதை, மோஹமடைவதை நாம் அன்ருடம் பார்க்கிருேம். குழந்தை முதலில் புதிய சூழ்நிலைக்கு, புதிய மனிதர்களுடன் பழக மறுக்கிறது. அதன் அக்ஞானத்தைக் குறித்து நாம் அனுதாபத்துடன் அதற்குச் சமாதானம் சொல்லிப் பள்ளிக்கு அனுப்புகிருேம். மாணவர்கள், யுவர்கள் எதன் எதன் பேரிலோ ஆசை வைத்துச் சிரமப்படுகின்றனர். அந்த ஆசை மனிதனுடைய பண்பை வளர்க்காது. வீணை ஆசை என்பது பெரியவர்களுக்குத் தெரிகிறது. பெரியவர்களோ அனுவசியமான சிறு விஷயங்களில் மனஸ்தாபம், சண்டை சச்சரவு, கோர்ட் விவகாரங்களை வைத்துக் கொள்கிருர்கள். முதுமையடைந்தவர்கள் எவ்வளவோ அனுபவப்பட்டும் தங்களையும், பேரக்குழந்தைகளையும், வீட்டுச் செலவையும் குறித்துக் கவலை கொள்கின்றனர். தங்கள் போக்கில் மனதைக் கடவுள்பால் திருப்பித் திருப்தியுடன் வாழ முடிவதில்லை. அக்ஞானமே இதற்குக் காரணம். ஆத்மா அனுத்மா ஆகியவற்றை விசாரம் செய்யத் தெரிய வேண்டும். ஐந்து கோசங்களையும் ஆத்மாவையும் பிரித்துத் தெரிந்துகொள்வது எப்படி? உலகில் பெற்றேர், புத்திரன், மனைவி, சிநேகிதன், வீடு, தனம், தான்யம் முதலியவைகளைப் பற்றிப் பேசும்போது இவை என்னுடையவை என்று கூறுகிருேம். அதேபோன்று இது என் சரீரம், என் பிராணன், என் மனம், என் புத்தி, என் அக்ஞானம் என்று சொல்லுகிருேம். 'இவை என்னுடையவை' என்று சொல்லும்போது இவை என்ற சொல் குறிப்பிடும் பொருள்களும் என்னுடையவை என்பதில் உள்ள ஆத்மாவும் வெவ்வேருனவை என்பது நிச்சயமாக நமக்குத் தெரிகிறது. இது போன்றே சரீரம் முதலிய கோசங்களையும் என்னுடையவை என்று கூறுவதால் அவை ஆத்மா அல்ல, ஆத்மாவின் உடைமைகள் என்று புலனுகின்றன. ஆத்மாவைக்காட்டிலும் அவை வேருனவை என்று ஆகின்றன. பஞ்சகோசங்களும் ஆத்மாவும் வெவ்வேறு என்பதற்கு இதுதான் யுக்தி. இந்த ஆராய்ச்சியை ரமணர் இக்காலத்தில் இன்னும் தெளிவுபடுத்தினுர். 'நான் யார்?' என்ற ஆராய்ச்சி மூலம் நான் என்பது ஆத்மாவைக் குறிக்கிறது; தாம் ஆத்மா, அழிகின்ற இவ்வுலகப்பொருள்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தினுர் ரமணர். வேதத்தில் அசரீரம் என்ற பதத்தால் ஆத்மா சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆத்மா சரீரமற்றது என்று சுருதி கூறுகிறது. ஐந்து கோசங்களைக் காட்டிலும் ஆத்மா வேருனது என்பது தெளிவான உண்மை. பஞ்சகோசங்களாகிற சரீரத்தின் மாறுதல்கள் ஆத்மாவை அணுகுவதில்லை.

கேள்வி: மேலே சொன்ன உதாரணத்தில் பொருள்கள் வெளியே உள்ளவையாகையால் நன்கு அறிய முடிகிறது. ஆத்மாவும் பஞ்சகோசங்களும் நமக்கு உள்ளே இருப்பதால் கொஞ்சமும் அறிய முடியவில்லை. பொருள்களும் யஜமானனும் வெவ்வேருய் இருப்பதை நாம் நன்கு காண்கிருேம். ஐந்து கோசங்களும் ஆத்மாவும் வெவ்வேருக இருப்பது நமக்குத் தெரியவில்லை. இரும்பை நெருப்பில் காய்ச்சினுல் இரும்பும் நெருப்பும் பிரிக்க முடியாதபடி ஒன்ருகவே தோன்றுவது போன்று பஞ்சகோசங்களும் ஆத்மாவும் ஒன்ருகத்தான் தோன்றுகின்றன. இவ்வாறு உவமானத்திற்கும் உபமேயத்திற்கும் பல வேற்றுமைகள் இருப்பதால் ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவைக்காட்டிலும் பஞ்சகோசங்கள் வேறு என்பதை எப்படித் தெரிந்துகொள்ளமுடியும்?

பதில்: வெளிப்பார்வை (ஸ்தூல ஞானம்) கண்ணினுலும், உள் பார்வை (சூக்ஷ்ம ஞானம்)

புத்தியினுலும் ஏற்படுகிறது. வெளிப்பார்வையால் அறியமுடியாத வஸ்துக்களையும் உள் அறிவினுல் அறியமுடியும். வீணையின் தந்திக் கம்பிகளுக்கும் அதன் ஸ்வரங்களுக்கும், காய்ச்சப்பட்ட ஜலத்துக்கும் அக்னிக்கும், புஷ்பத்துக்கும் அதன் வாசனைக்கும் இவைகளுக்கிடையில் வெளிப் பார்வையில் நாதம், உஷ்ணம், வாசனை இவைகளை ஸ்தூலமாகப் பார்த்து அறிய முடியாவிட்டாலும் அறிவுள்ள மனிதன் அவைகளை அறிந்துகொள்கிறுன். இதே போன்று ஜலத்தையும் பாலையும் பிரிக்க நமக்கு இயலாவிட்டாலும் அன்னப்பறவை அதை எளிதில் பிரித்துவிடுகிறது. இதே போன்று ஆத்மாவிடத்திலிருந்து பஞ்சகோசங்களைப் பிரித்துத் தெரிந்துகொள்வது ஸ்தூல புத்தியால் முடியாது போனுலும் சூக்ஷ்ம புத்திக்கு முடியும். ஒலி ஒரு செகண்டிற்கு 1,100 அடி தூரம் செல்கிறது. ஒளி ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் போகிறது. இவ்வுலகம் உருண்டையானது, சூரியன் என்பது உஷ்ணவாயுவின் திரட்சி, நட்சத்திரங்கள் சூரியனைக் காட்டிலும் பெரியவை, சரீரத்தினுள் நாடி நரம்புகள், ரத்த ஓட்டம், சுவாசம் இங்ஙனம் நிகழ்கிறது, மழை இங்ஙனம் பெய்கிறது, நீராவி, எண்ணெய், மின்சார யந்திரங்கள் இங்ஙனம் வேலை செய்கின்றன என்றெல்லாம் படிக்கிருேம். இவைகள் ஸ்தூலக் கண்ணுக்குப் புலப்படாதவை. ஆயினும் இவ்வுண்மைகள் சூக்ஷ்ம அறிவால் அறியப்பட்டுள்ளன. பஞ்சபூதங்களைப் பற்றிய உண்மைகள் இவை. இதில் மேலும் அதிசூக்ஷ்மமான உண்மைகளும், தத்துவங்களும் உள்ளன. தர்மம், கடவுள் தத்துவம் இப்பிரபஞ்சத்தின் நடைமுறை ஆகியவை அதிசூக்ஷ்மமான தத்துவங்களாம். சமயத்தின் ஆராய்ச்சிக் கருத்து முழுவதும் இந்த அதிசூக்ஷ்மமான உண்மைகளைப் பற்றியதாம். கனவைக் குழந்தை உண்மை என்று நம்புகிறது. அறிவு வந்த மனிதனுக்கு அது கனவு என்று தெரிகிறது. ஞானி இவ்வுலகமே கனவு மயமானது என்று கண்டுகொள்கிறுன். அறிவு தெளிவடையத் தெளிவடைய மாசற்ற அறிவு ஆகி அதுவே மேலாம் உண்மைகளைக் காண்கிறது. அது ஞானக் கண், திவ்வியசக்ஷு, மேதா நாடி என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

இதுவரை அநாதிகாலமாக வந்துள்ள பூர்வ ஜன்ம வாசனைகளோடு கூடிய மனிதர்களின் பிரபஞ்ச விவகாரத்தை அங்கீகரித்துப் பஞ்ச கோசங்கள் என்றும் அவற்றை ஆத்மாவினிடத்திருந்து பிரிப்பது என்றும் சொல்லப்பட்டது. ஆனுல் உண்மை நிலையோ வேறுவிதமானது. ஆத்மாவிடத்தில் பஞ்சகோசமே இல்லை. எப்படியெனில் கயிற்றில் சர்ப்பமும், கிளிஞ்சலில் வெள்ளியும், கம்பத்தில் மனிதனும், ஆகாசத்தில் நீலவர்ணமும் பிராந்தியால் தோன்றுகின்றனவே தவிர அவை அங்கு இல்லை. மற்றென்றில் தோன்றுகிற சர்ப்பம் முதலியவை முக்காலத்திலும் உண்மையன்று. அதே போன்று ஆத்மாவினிடத்தில் பஞ்ச கோசங்கள் தோன்றுகின்றனவே தவிர அவை உண்மையில் இல்லை. எது தோன்றுகிறதோ அது அசத். இரண்டு சந்திரன்கள் இருப்பதாகக் குடிகாரனுக்கும், கண் வியாதி உள்ளவனுக்கும் தோன்றுகிறது. அதில் இரண்டாவது சந்திரன் உண்மையன்று; ஒன்றின்பேரில் ஏற்றப்பட்ட போலிக் காட்சி. குடிகாரனின் மயக்கம் தெளிந்த பிறகு, கண்வியாதி சரியான பிறகு இரண்டாவதாகத் தோன்றிய சந்திரன் பொய் என்று தெரியவரும். அது போன்று இப் பஞ்சகோசங்களும் இப்பிரபஞ்சமும் ஆத்மாவில் ஆரோபிதம்.

கேள்வி : கயிற்றில் தோன்றிய சர்ப்பம் அதற்கு அதிஷ்டானமான (அதற்கு இருப்பிடமான) கயிற்றை அறிந்த பிறகு மறைந்துவிடுகிறது, அதன் பிறகு அது தோன்றுவதில்லை. ஆகையால் சர்ப்பத்தை ஆரோபிதம் (ஏற்றப்பட்ட காட்சி) என்று சொல்லலாம். பஞ்ச கோசங்களோ ஆத்மாவை அறிந்த பிறகும் தோன்றிக் கொண்டிருப்பதால் அவைகளைத் தோற்றம் என்று எப்படிச் சொல்லமுடியும்?

பதில் : உலகில் ஸத் (இருத்தல்) மூன்று வகைப்படும். 1) பிராதி பாசிக ஸத் 2) வியவஹாரிகஸத் 3) பாரமார்த்திக ஸத் என்று அவைகள் பெயர் பெறுகின்றன. சிருஷ்டி இரண்டு வகை. 1) ஈசுவர சிருஷ்டி 2) ஜீவ சிருஷ்டி. கிளிஞ்சலில் வெள்ளியின் தோற்றம், கயிற்றில் பாம்பின் தோற்றம் இவை எல்லாம் ஜீவசிருஷ்டி. இதற்குப் பிராதிபாசிக

ஸத் என்று பெயர். அதாவது தாற்காலிகமாக மட்டும் தோன்றும். கனவு காண்கிற நிலையையும் பிராதிபாஸிக ஸத்துக்கு உதாரணமாகச் சொல்லுவது வழக்கம். கனவு காண்கிற வரையில் அது உண்மை. பிறகு வெறும் காட்சி தான். இந்த ஜீவ சிருஷ்டிக்கு அதிஷ்டானமாக (இருப்பிடமாக) உள்ள ஆகாசம், வாயு முதலியவை எல்லாம் வியாவஹாரிக ஸத். (அதாவது விவகாரகாலம் வரை உள்ளவை) இது ஈசுவரசிருஷ்டி. இந்த ஈசுவர சிருஷ்டிக்கும் அதிஷ்டானமாக (இருப்பிடமாக) இருப்பது எதுவோ அது பாரமார்த்திக ஸத்.

வியாவஹாரிக ஸத் விவகாரம் முடியும்வரை இருக்கும். பிராதிபாஸிக ஸத் தோற்றம் உள்ள வரையில் இருக்கும். (கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது.) இந்தத் தோற்றம் போய் விட்டால் அந்தவெள்ளியும் போய்விடும். பிரதி பாஸம் என்றுல் தோற்றம் என்று பொருள். அந்தத் தோற்றத்தால் ஏற்படுவது பிராதி பாஸிகம். பிராதிபாஸிகம், வியாவகாரிகம் ஆகிய இரண்டும் ஒரு வஸ்துவின்பேரில் ஆரோபிதம் (ஏற்றப்பட்டது, காட்சி)என்கிற விஷயத்தில் ஒரே மாதிரியானுலும் இவைகளின் ஸத் தன்மை (இருப்பின்நிலைமை) வெவ்வேறுனவை. மனிதனின் அறிவின் குறைவால் இருள் முதலிய காரணங்களினுல் கயிற்றின்பேரில் பாம்பு தோன்றியது. விளக்கு வந்தபின் இருள் நீங்கவே இது கயிறுதான் என்ற அதிஷ்டான ஞானம் (ஆதாரமாய் இருந்த பொருளைப் பற்றிய அறிவு) வந்ததும் அங்குத் தோன்றிய பாம்பு நாசமடைந்துவிடுகிறது. பிராதிபாஸிக ஸத் அல்லது வஸ்து அதிஷ்டான ஞானத்தால் நாசமடைவதுபோன்று வியாவகாரிகப் பிரபஞ்சம் அதன் அதிஷ்டானமான ஆத்மஞானத்தால் நாசம் அடைவதில்லை. ஆத்ம ஞானம் வந்தவுடன் பிரபஞ்சம் மறைந்துவிடுமானுல் ஆத்மஞானிகளான ஜீவன்முக்தர்களே உலகில் இருக்கமாட்டார்கள். ஞானிகளுக்குப் பிரபஞ்ச விவகாரம் இல்லாததாலும் அக்ஞானிகளுக்கு உபதேசம் செய்ய சக்தி இல்லாததாலும் ஆத்மசாதகர்களுக்கு உபதேசிக்கக் குருவும் இல்லாது போய்விடுவார். குரு இல்லாததால் ஆத்ம சாதனத்தில் தூண்டுதல்,எழுச்சி உண்டு பண்ணுதல் இல்லாமல் போகும். ஆகையால் அதிஷ்டானமான ஆத்ம ஞானம் வந்த பிறகும் அவர்களுக்கு வியாவகாரிகப் பிரபஞ்சம் உண்டு.

சமாதிநிலை அடைந்த ஜீவன் முக்தனது சரீரம் இருபத்தொரு நாட்களுக்குமேல் இவ்வுலகில் நிலைத்திராது என்பார்கள். சிறிய குடிசைக்குள் யானை வசிக்கமுடியாததுபோன்று ஆத்ம போதம் தலையெடுத்தவர்கள் சரீரத்தில் கட்டுண்டு வாழமுடியாது. யாரோ சில பெரியவர்கள்தாம் உலக நன்மையின் பொருட்டு அங்ஙனம் ஜீவிப்பார்கள். அவர்கள் உணர்வு, தெய்வீகமானதாக ஆகிவிடுகிறது. அப்போது இதே பிரபஞ்சம் அவர்களுக்குக் கடவுளாகக் காட்சி தருகிறது.

மண்ணில் ஆரோபிதமான (எழுந்த, வடிவெடுத்த) குடமானது குயவனுல் செய்யப்பட்ட அடிவயிறு பருத்தும் மேலே கழுத்துச் சிறுத்தும் உள்ள அதன் வடிவம் நசிக்கும் வரை இருந்துகொண்டுதான் இருக்கும். அதே போன்று ஆத்மாவில் ஆரோபிதமான பஞ்ச கோசங்கள் பொய் என்ற ஞானம் வந்தபோதிலும் பிராரப்தம் முடியும்வரை எரிந்த வஸ்திரம் போலத் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். இதற்குத் தக்தபட நியாயம் என்று பெயர். அதாவது எரிந்துபோன வேஷ்டி போன்று என்று பொருள். ஒருவன் வீட்டில் வஸ்திரத்தை மடித்து வைத்திருந்தான். வீடு எரிந்தபோது அந்தத் துணியும் எரிந்து விட்டது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வேஷ்டி மடித்து வைத்திருப்பது போலத் தோன்றும்.

இதனுல் முடிவு செய்யும் விஷயம் என்ன என்று தெரிந்து கொள்வோம். மண்ணில் ஏற்பட்ட குடத்தின் பெயர், வடிவம் இரண்டும் நீங்கி விட்டால் மண் மட்டுமே மிச்சமிருக்கிறது. அது போன்று ஆத்ம ஞானத்தால் ஆத்மாவில் ஆரோபிதமான பஞ்ச கோசங்கள் விலக்கப்பட்டால் சத் சித் ஆனந்த ரூபமான ஆத்மா ஒன்றே மிச்சமிருக்கிறது. இவ்வுண்மையை அறிபவன் ஆத்ம ஞானி. அவனே பிரம்மஞானி. அவனுக்குத்தான் விதேகமுக்தி. (சரீரம் நாசமானதும் பூரண விடுதலை, பிறப்பற்ற நிலை). இங்ஙனம் ஆத்ம தத்துவங்களை உபநிஷதம் விளக்குகிறது. அதை உணர்ந்து நாம் ஆத்மபோதம் பெறவேண்டும்.

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com.)

4. சந்தேகமும் தெளிவும்

தான் பார்த்துக்கொண்டிருப்பது ராமபிரானின் தேவியாகிய சீதைதான் என்று உறுதியாகத் தெரிந்துகொண்ட அனுமன் தான் யார் என்பதைப் பிராட்டிக்குத் தெரிவிக்கின்றான்:

"தேவி! ராமபிரானது கட்டளையினல் இங்குவந்திருக்கும் நான் ராமனுடைய தூதன். உமக்கு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கின்றேன். வேதம் அறிந்தவர்களில் சிறந்தவரும் பிரம்மாஸ்திரத்தை அறிந்தவருமான தசரத குமாரன் ராமன் நலமாக இருக்கின்றார். உமக்கும் நலத்தைத் தெரிவித்தார். உம் துணைவருக்கு இனிய துணைவராக அவருடைய துக்கத்தில் பங்குகொண்டு தொண்டுபுரியும் இளையவர் இலக்குமணன் தம் தலையால் உமக்கு வணக்கத்தைச் சமர்ப்பித்தார்."

அஞ்சனைச் செல்வனின் இந்த அமுதம் போன்ற சொற்கள் சீதையின் மனத்தில் எத்தகைய பேரின்பத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதைச் சொற்களால் விவரிக்க முடியுமா? உள்ளத்தில் உவகைக்கடல் பொங்க அனுமனிடம் பேசுகின்றாள் ஜானகி:

"உலகத்தாரிடையே வழங்கும் பழமொழியான 'உயிருடன் இருப்போர்க்கு நீண்ட நாட்களுக்குப் பிறகாவது மகிழ்ச்சி கிட்டுகின்றது' என்ற சொல் என் விஷயத்தில் இன்று உண்மையாகி விட்டது போல் தோன்றுகின்றது. அந்தவரையில் எனக்கு மகிழ்ச்சிதான்."

இருவரின் உரையாடல் துவக்கத்தைப் பார்த்தால் இருவரும் ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை கொண்டுவிட்டது போல் தோன்றுகின்றது. அனுமன் உள்ளத்தில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. ஆனல் சீதைக்கு அனுமன்மீது முழுநம்பிக்கை ஏற்பட்டு விட்டதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தங்கள் உரையாடல் உறங்குகின்ற அரக்கியரை விழித்துக்கொள்ளச் செய்யக் கூடும் என்று கருதி அனுமன் சீதையின் அருகில் சென்று மேற்கொண்டு பேச விழைகின்றான். ஆனல் அவன் சீதையின் அருகே செல்லச் செல்லச் சீதைக்குப் பயமும் அவநம்பிக்கையும் வந்து விட்டன. ஜனஸ்தானத்தில் துறவி வேடம் கொண்டு திருட்டுத்தனமாக வந்த ராவணனே இப்போது வானரமாக வந்திருக்கின்றானே என்ற ஐயம் சீதைக்கு ஏற்பட்டு விட்டது. உடனே அனுமனைப் பார்க்காமலேயே மரத்தடியில் அமர்ந்து வேறு பக்கம் திரும்பிக்கொண்டுவிடுகின்றாள். அவளுடைய செயலையும் அதற்குக் காரணமான அவளுடைய எண்ணத்தையும் ஒருவாறு ஊகித்து அறிந்துகொண்ட அனுமன் அவளுடைய மனப்போராட்டம் ஓரளவு அடங்கட்டும் என்று காத்திருக்கின்றான்; ஆனல் சீதையை வணங்கிய கைகளை மட்டும் எடுக்கவே இல்லை. அனுமன் எதிர்பார்த்தது போன்றே நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே எழுந்த போராட்டம் ஓரளவு ஓய்ந்தபின்னர் சிறிது தைரியம் அடைந்த சீதை தயங்கித் தயங்கி அனுமனுடன் பேச ஆரம்பிக்கிறாள்.

"கொடுமையையே இயல்பாகவுடையவனும், சூதும் மாயமும் வஞ்சகமும் நிறைந்தவனும், துறவி வேடம் பூண்டு ஜனஸ்தானத்தில் வஞ்சகமாக என்னை எடுத்து வந்தவனுமான ராவணன் தானே நீ? இரக்கம் என்று ஒன்றில்லாத அரக்கர் தலைவனே! உறக்கமின்றி வாடும் என்னை ஏன் மீண்டும் துன்புறுத்த வருகின்றாய்?......

ஒருவேளை நான் சந்தேகப்படுவதுபோன்று நீ ராவணன் இல்லையோ? ஏனென்றால் உன்னைப் பார்த்ததும் என் மனம் என்றைக்கும் இல்லாத அமைதி அடைந்துள்ளது. ஆற்று வெள்ளம் தான் போகுமிடமெங்கும் கரையைத் தன் பக்கம் ஆக்கிக்கொள்வது போன்று என் மனத்தை உன் பக்கம் ஈர்த்துக்கொண்டுள்ளாய். நீ ராமனுடைய தூதனக இருக்கும் பட்சத்தில் உனக்கு மங்களம் உண்டாகட்டும். ராமனுடைய வரலாற்றைச் சொல். ராமனுடைய குணங்களைப் பற்றியும் சொல்வாயாக!......

ஒகோ! இதென்ன இன்பமான கனவு! ராகவனல் அனுப்பப்பட்டதான ஒரு குரங்கைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கின்

றேனே? கனவிலாவது ராமனைக் கண்டால் மனம் தளராமல் இருப்பேன். ஆனல் என் துரதிர்ஷ்டம், கனவிலும் அபசகுனம் போன்று குரங்குதானே தென்படுகின்றது! கனவும் எனக்குக் கொடுமை செய்கின்றதோ! இருக்காது. இது கனவு இல்லை! கனவில் குரங்கு நல்ல செய்தி கொண்டு வராது. அப்படியானல் ஒருவேளை இது என் மதிமயக்கமாக இருக்குமோ? பேய் பிசாசுக் கோளாறினல் ஏற்பட்ட தோஷமாக இருக்குமோ? அல்லது அதிகமாக ஆசை வைத்திருப்பதால் ஏற்பட்ட மனேவிகாரமாய் இருக்குமோ?...... இல்லை, இல்லை! இவற்றில் எதுவும் இருக்க முடியாது! நான் காண்பது நிஜம்தான்!"

இவ்வாறு மனக்குழப்பமடைந்த பிராட்டியை அனுமன் தன் இனிய மொழிகளால் தேற்றுகின்றான்:

"மங்கையர் திலகமே! ராமனுடைய கீர்த்தியை என்னல் விரித்துரைக்க முடியாது! வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறையும் ஒளி உடையவர். சந்திரன் போன்று உலகத்திற்கு இனிமையானவர். குபேரன்போன்று குவலயத்திற்கு எல்லாம் தலைவர். விஷ்ணுவைப் போன்ற வீரமும் பிருகஸ்பதியைப் போன்ற சொல்வன்மையும் படைத்தவர். மன்மதனே உருவெடுத்து வந்ததுபோன்று அல்லையாண்டமைந்த மேனி அழகர். செல்லிடத்துக் காக்கும் சினமுள்ளவர். ஆயுதம் ஏந்தியவர்களில் முதன்மையானவர். அந்த உத்தமர் இல்லாத சமயம் உன்னைத் திருடி வந்த உன்மத்தனுக்குத் தண்டனை அளிக்கக்காத்திருப்பவர். ராமனுடைய தீயைக் கக்கும் அம்புகளால் இந்த ராவணனும் இலங்கையும் எரிந்து சாம்பலாவதை நீர் காணப் போகின்றீர்! அந்த ராமபிரானுடைய தூதன் நான் என்பதை நம்புவீராக! உமக்கு நல்ல செய்தியைராமன் அனுப்பியிருக்கின்ருர். சுமித்திரை பெற்ற செல்வனகிய இலக்குவன் உமக்குத் தன் பணிவான வணக்கங்களைச் சமர்ப்பித்தார். வானர மன்னன் சுக்ரீவன் தங்களுக்கு நல்ல செய்தியை அறிவிக்கச் சொல்லியிருக்கின்ருர்.

"தேவீ! ராமனுக்கு எந்நேரமும் தங்கள் நினைவுதான். தெய்வாதீனமாகத் தாங்கள் இவ் அரக்கியருக்கிடையில் பிழைத்திருக்கின்றீர்கள். ராமனும், இலக்குவனும், எல்லையில்லா ஆற்றலுடைய சுக்ரீவனும் கோடிக் கணக்கான வானர வீரர்களின் மத்தியில் இங்கு எழுந்தருளப்போவதை நீங்கள் காணும் காலம் நெருங்கி விட்டது. உங்கள் பொருட்டுக் கடலைக் கடந்து இங்கு வந்துள்ள நான் சுக்ரீவனுடைய அமைச்சன். என் பெயர் அனுமன். இனியாவது என்னைப்பற்றிய சந்தேகத்தை விட்டொழியுங்கள்."

அனுமனின் இச்சொல் அமுதத்தைப் பருகிய சீதை ஒருவாறு மனத்தெளிவுபெற்று அனுமனிடம் ராம-இலக்குவர்களின் மேனி நலனையும் வாழ்க்கை முறையையும் அவர்களுடன் வானரர்கட்கு நட்பு ஏற்பட்டதையும் விரிவாகச் சொல்லும்படி கேட்கின்ருள்.

எனவே, வான்மீகத்தில் அனுமன் சீதையிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் போது, அவளுடைய செவிகளுக்குக் கேட்கும் வண்ணம் ராமன் வரலாற்றைப் பாடியதாகவும், அதனல் சீதையின் கவனம் தற்கொலை முயற்சியினின்றும் மாறி அனுமன் மீது திரும்பியது என்றும், அதன் பிறகு பலவித மனப் போராட்டங்களுக்குப் பின்னர்தான் சீதை அனுமனை ராமதூதனக ஏற்றுக்கொள்கின்ருள் என்றும் பார்த்தோம்.

5. துளசிதாசரின் படைப்பில்

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய துளசிதாசரின் ராமாயணத்தில் அனுமன்-சீதை சந்திப்புச் சிறிது மாறுதலுடன் காணப்படுகின்றது.

இலங்கை முழுவதும் சீதையைத் தேடித் திரிந்த அனுமன் இறுதியில் வீடணனைச் சந்திக்கின்ருன். இருவரும் ராமனின் புகழ் பாடுகின்றனர். சீதையின் இருப்பிடத்தை வீடணன் தெரிவிக்கின்ருன். அதன்படி அனுமன் சீதை இருக்குமிடம் வருகிருன்.

ராவணன் தன்னை மிரட்டிச் சென்ற பின்னர் மனமுடைந்த சீதை அக்னிப்பிரவேசம் செய்து தன்னையே அழித்துக்கொள்ள உறுதிகொண்டு திரிசடையிடம் தீ மூட்டும்படி கேட்டுக்கொள்கின்ருள். திரிசடை அவளைச் சமாதானப் படுத்திவிட்டு, அரக்கியரைப் பார்த்துத் தான் கண்ட கனவினைக் கூறி அவர்கள் மேலும்

சீதையைத் துன்புறுத்தா வண்ணம் எச்சரித்து விட்டுத் தன் வீட்டிற்குச் சென்று விடுகின்றாள். தனியாக விடப்பட்ட சீதை தற்கொலை முயற்சியில் இறங்குகின்றாள். அருகிலிருந்த அசோக மரத்தின் அடியில் வந்து நிற்கின்றாள். அம் மரத்தின் மேல் அமர்ந்திருந்த அனுமன் அவளுடைய கவனத்தைத் திருப்பும் பொருட்டுத் தான் வைத்திருந்த ராமனுடைய மோதிரத்தைச் சீதையின் முன் நழுவ விடுகின்றான். கணையாழி தர்சனம் சீதையை ஒரு கணம் திகைக்க வைக்கின்றது. மாயமாக இருக்குமோ என்று ஐயுறுகின்றாள். அதே சமயம் அனுமன் ராமன் கதையை இனிமையாகப் பாடுகின்றான். செவிகளுக்குத் தேனமுதம் ஊட்டும் கதையைச் சொல்பவன் தன் முன் ஏன் வரவில்லை என்று சீதை வினவுகின்றாள். அதன் பின்னர் அனுமன் அவள் எதிரே தோன்றுகின்றான். தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான். ஆரம்பத்தில் சிறிது ஐயப்பட்டாலும் பின்னர் சீதை அனுமன் மேல் நம்பிக்கை கொண்டு அவனுடன் உரையாடுகின்றாள். இது துளசி காட்டும் அனுமன்-சீதை சந்திப்பு.

துளசி ராமாயணத்தில் இன்னொரு வேறுபாடும் உண்டு. ஆதிகாவியத்திலும் கம்பனிலும் அனுமன் சீதையிடமிருந்து சூடாமணி பெற்றுக்கொண்ட பின்னரே அசோகவன அழிவும் இலங்காதகனமும் நடைபெறுவதாகக் காணப்படுகின்றது. ஆனால் துளசியில் இலங்கையை எரித்த பின்பே அனுமன் சீதையிடம் வந்து சூடாமணியைப் பெற்றுக்கொள்கின்றான்.

6 கம்பன் தீட்டிய ஓவியம்

இனி, கம்பன் கைவண்ணத்தில் அனுமன்-சீதை அறிமுகக் காட்சி எவ்வாறு காட்டப்படுகின்றது என்று காண்போம்.

காமத்திற்கும் கோபத்திற்கும் ஏற்பட்ட போராட்டத்தில் காமம் வென்று ராவணனைச் சீதையிடம் அமைதியாகப் பேச வைத்தது; உள்ளத்தில் ஆசையை இருத்திக்கொண்டு உதட்டினால் அவளை மிரட்டினான் ராவணன். காவல் அரக்கியரிடம், "எவ்வாறாயினும் இவளை எனக்கு இணங்கச் செய்யுங்கள். இன்றேல் உங்களுக்கு நானே எமனாவேன்" என்று எச்சரித்துச் சென்றுவிடுகின்றான் அவன். ராவணன் ஆணையின்படி அரக்கியர் சீதையை வெருட்ட ஆரம்பிக்கின்றனர். சமாதானமாகவும், மிரட்டியும், அச்சுறுத்தியும் அரக்கியர் சீதையிடம் ராவணனுக்கு இணங்குமாறு கூறினார்கள். வஞ்சக ராவணனின் நஞ்சனைய வார்த்தைகளையும், இரக்கமற்ற அரக்கியரின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது, தன்னுடைய நிலைமைக்கு வருந்தியும், அவர்களுடைய அறியாமையைக் கண்டு மனத்திற்குள் நகைத்துக் கொண்டும் தனித்திருந்தாள் தவம் செய்த தவமாம் தையல். திரிசடையின் தலையீட்டால் அரக்கியர் அடங்கினர். திரிசடை சீதையிடம் தான் கண்ட கனவினை நினைவூட்டிச் சீதை வருந்துவது பொருந்தாது என்று எடுத்துரைக்கின்றாள். இந்தக் காட்சியையெல்லாம் மரக்கிளையின் இடுக்கில் மறைந்திருந்து பார்த்துக் கொண்டே யோசனை செய்து பார்க்கின்றான் வாயு மைந்தன். தான் சீதையைக் காண்பதற்கு இதுவே நல்ல சமயம் என்று முடிவு செய்கின்றான். ஆனால் சீதையிடம் தன்னை எப்படி அறிமுகப்படுத்திக்கொள்வது? தான் சீதையிடம் பேசும்போது அரக்கியர் கண்டு விட்டால் வந்த காரியம் தடைப்பட்டுவிடுமே! பத்து மாதங்களாக மனித முகங்களையே கண்டிராத சீதை, அரக்கனின் கடுமையான காவலைக் கடந்து தன்னைக் காண வருவது யாருக்கும் இயலாத காரியம் என்று நம்பிக்கை இழந்துவிட்ட சீதை, குரங்கு உருவத்துடன் வரும் தன்னை எவ்வாறு நம்புவாள்? அவள் நம்பும்படி என்ன செய்வது? முதலில் இந்த அரக்கியர் மயக்கமடைய ஒரு வழி செய்ய வேண்டும். இவர்கள் ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டால்தான் தன் பணி எளிதாகும் என்று எண்ணி, ஒரு விஞ்சை செய்தான் அஞ்சனைச் செல்வன். இறந்தவர் போன்று மயக்கம் அடைந்தார்கள் அரக்கியர்.

வான்மீகி ராமாயணத்தில் அனுமன் இவ்வாறு அரக்கியர் மயங்கும் வண்ணம் மந்திரம் செய்ததாகக் காணப்படவில்லை. அனுமன்-சீதை சந்திப்பின்போது அரக்கியர் தூங்கி விட்டார்கள் என்றுதான் ஊகிக்கவேண்டியிருக்கின்றது. ஆனால் அப்படியும் உறுதியாக நினைத்துவிட முடியாதவாறு வான்மீகியின்

கதைப்போக்கு அமைந்துள்ளது. 42வது சர்க்கம் 3வது சுலோகத்தில், அனுமனின் அசோகவனத் தாக்குதலால் 'தூக்கம் கலைந்து போன' அரக்கியர் குலைந்துபோன பூஞ்சோலையைப் பார்த்தார்கள் என்று வருகின்றது. ஆனால் அதே சர்க்கம் 7வது சுலோகத்தில் அனுமனுடன் சீதை பேசியதைப் பார்த்த அரக்கியர் சீதையை விசாரித்ததாகவும், அதற்குச் சீதையின் பதிலில் திருப்தியடையாத அரக்கியர் ராவணனிடம் சென்று "சீதையிடம் ஒரு வானரம் பேசிக்கொண்டிருந்தது; அதைப் பற்றிய விவரத்தைச் சொல்ல சீதை மறுக்கின்றாள்; அவள் இருக்கும் இடத்தை மட்டும் விட்டுவிட்டு அசோக வனத்தின் மற்றைப் பகுதிகளையெல்லாம் அந்த வானரம் நாசம் செய்துவிட்டது" (சுலோகம் 13-20) என்று முறையிட்டார்கள் என்றும் வான்மீகி தெரிவிக்கின்றார். பின்னர் சர்க்கம் 53, சுலோகம் 24ல்அனுமன்வாலில் தீயிட்டபோது அரக்கியர் சிலர் சீதையிடம் வந்து "உன்னிடம் பேசிக்கொண்டிருந்த வானரம் வாலில் தீயிடப்பட்டதாய் அது கண்டபடி இழுக்கப்படுகின்றது" என்று கூறுகின்றார்கள். எனவே அனுமன் சீதை உரையாடலின்போது அரக்கியர் தூங்கிவிட்டார்கள் என்றும் ஊகிக்க முடியவில்லை. அப்படித் தூங்காமல் இருந்திருந்தால் அனுமனைச் சீதையிடம் பேசவிட்டுக்கொண்டு எப்படிச் சும்மா இருந்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. ஆதலால்தான் கம்பன் தன் கதையில் அரக்கியர் மயக்கமடையும் வண்ணம் மாருதி ஒரு மந்திரம் செய்தான் என்று வைத்துக்கொண்டு ஆதிகாவியத்தில் ஏற்படும் முரண்பாடுகளை நீக்கிவிடுகின்றான்.

தனது மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு மயக்கமடைந்துவிட்ட அரக்கியர் இறந்தவர் போன்று கிடந்ததைக் கண்ட அனுமன் சீதாதேவியிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளத் தன்னைத் தயார்செய்துகொள்கின்றான். அரக்கியர் மயக்கம் சீதையிடம் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துகின்றதா என்று கூர்ந்து கவனித்தான். சீதை தனக்குத்தானே ஏதோ பேசிக்கொள்வது போன்று தோன்றியது. அவளுடைய உதடுகள் அசைவிலிருந்து அவள் என்ன பேசிக்கொள்கின்றாள் என்பதையும், அதிலிருந்து அவள் எண்ண ஓட்டங்களையும் அறிந்துகொள்வதற்காக அவள் முகத்தைமிக்க கவனமாக நோக்கினான் அனுமன். சிறிது நேரத்தில் அவள் தனக்குத்தானே பேசிக்கொள்வது குறைந்து, ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டதுபோன்று தோன்றியது. அவள் என்ன செய்யப் போகின்றாள் என்பதை அறிந்துகொள்ளத் துடித்தான் அனுமன். அனுமன் நிலை இவ்வாறிருக்க, அரக்கியர் உறங்கிவிட்டதைக் கண்ட சீதையின் நிலையைச் சிறிது கவனிப்போம்.

7. பொய்யாய்ப் பழங்கதையாய்...

அந்த இரவு மிக நீண்ட இரவாகத் தோன்றியது சீதைக்கு. முதலில் சில நல்ல சகுனங்கள் தன்னிடம் தோன்றியதையும், திரிசடையின் விளக்கத்தையும் கனவையும் அவள் நினைத்துப் பார்க்கின்றாள். இத்தனை மாதங்களாக இல்லாத ஒரு சிலிர்ப்பு தன் மனத்தில் தோன்றியதையும், அதனால் தனக்கு விடிவுகாலம் விரைவில் வரப்போகின்றது என்று எண்ணியதையும் நினைத்துப் பார்க்கின்றாள். ஆனால் இந்தக் குறுகுறுப்பும், நல் நிமித்தங்களும், திரிசடையின் கனவும், அது ஏற்படுத்திய இன்ப உணர்வுகளும் ராவணன் வருகையினால் அர்த்தமற்றுப் 'பொய்யாய்ப் பழங்கதையாய்'போய் விடவே, ஏற்கனவே இடிந்துபோன தன் மனம் சுக்கு நூறாகியதை உணர்கின்றாள் சீதை. தன் வாழ்நாளில் துன்பமே தொடர்வதும், நல் நிமித்தங்கள் கூடத் தனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி மிகப் பெரிய இன்னலைத் தனக்குத் தருவதற்குத்தான் வருகின்றன என்பதும் சீதைக்கு உறுதியாயிற்று. புயலுக்குப் பின் அமைதி போன்று புயலெனச் சீறி எழுந்த அரக்கியர் தம் கொட்டமடங்கி இப்போது உறங்குகின்றனர். சீதை மட்டும் தனித்து விடப்படுகின்றாள். அவள் மனம் ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டதுபோல் தோன்றுகின்றது; அந்த முடிவிற்கு வருமுன் அவள் மனம் பட்டபாடு சொல்லுந்தரமன்று. அவளுடைய எண்ண ஓட்டத்தைச் சிறிது கண்காணித்தால் நாமும் அதை உணரலாம். எனவே தனித்து விடப்பட்ட சீதையின் சிந்தையில் மலர்ந்த மலர்களை அழகிய மாலையாகத் தொடுத்து அளித்த கம்பனின் கற்பனைத்திறனை இங்குச் சிறிது

பார்ப்போம்:

"சிக்கெனப் பிடித்து என்னை இக்கதிக்கு ஆளாக்கிய விதியே! கருமேகம் போன்ற வள்ளல் ராமன் என்மேல் கருணை மழை பொழிய வருவாரோ? கரைகாணுக் கடலன்ன ஈரமும், சினந்தால் உலகு அழிக்கும் வீரமும் கொண்ட வீரன் என் குற்றங்களை மன்னித்து, அரக்கர் உலகினை அழிக்க வருவாரோ? கோசலநாடுடைய வள்ளல் பெருமான் குறைந்து வரும் என் உயிரை மீட்க இங்கு வருவாரோ? கூட்டு ஒருவரையும் வேண்டாத கொற்றவனின் கோதண்டத்தின் நாதம் என் செவியுள் புகுந்து இன்பம் தருவது எந்நாளோ?"

ராமன் வரவால்தான் தன் உயிர் தங்கும் என்றும் அவன் வில்லின் நாண் ஒலிதான் தனக்கு இன்பம் தரும் என்றும், இவையெல்லாம் நடக்குமா என்றும் விதியைப் பார்த்து முறையிடுகின்றுள் சீதை.

> " தூங்கு பொன் மாலைகளோடு உடனாய் நின்று
> தூங்குகின்றேன்......
> சார்ங்கவில் நாண் ஒலியும் தலைப்பெய்வது
> எஞ்ஞான்று கொலோ ?"
>
> —பிரபந்தம், நாச்சியார் திருமொழி,
> சிந்துரச் செம்பொடி–9.

என்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் ஏக்கத்தைச் சீதையின் இந்த மனநிலையிலும் காண வைக்கின்றுன் கம்பன். சீதையின் தனிமொழியை மேலும் கேட்போம்.

"கல்வி அறிவில்லாத கலைமதியே! பொங்கி வரும் பெருநிலவொளியே! விரைவில் தொலைந்து போகாத இரவுப்பொழுதே! குறையாமல் பெருகுகின்ற இரவே! நீங்கள் எல்லாரும் சினங்கொண்டு அபலையாகிய என்னைத் தானே வருத்துகின்றீர்கள்! என்னை நினையாத வில்லாளனுகிய ராமபிரானை நீங்கள் வருத்தமாட்டீர்களோ? ஒருவேளை அவருடைய வில்லிற்குப் பயந்து அவரை நெருங்க அஞ்சி விட்டீர்கள் போலும்! பெண்மையின் மென்மை கொண்ட பூங்கொடிகளே! என்னை எரிக்கும் வாடைக் காற்றைத் துணைகொண்டு என் உயிரை வருத்துகின்றீர்களே! உங்களில் ஒருத்தியான எனது உயிர்படும் துன்பத்தை நீங்கள் அறியவில்லையோ? மறிகடல் வண்ணனுடன் நெடுங்காலம் பழகியிருக்கின்றீர்களே! அவரிடம் சென்று என் குறையைச் சொல்லமாட்டீர்களோ?

"அறந்தரு சிந்தையுடைய என் ஆவி நாயகனே! ஆயுதமேந்தியவர்களில் இணையற்ற வீரனே! நாராயணன் என்ற திருப்பெயர் கொண்ட கார்முகில் வண்ணனே! 'என்னைக் காக்க என் மன்னன் வருவார்' என்ற ஒரே நம்பிக்கையில்தான் இத்தனை நாட்கள் இவ்வளவு இன்னல்களையும் பொறுத்துக் கொண்டிருந்தேன். ஆனல் என் நம்பிக்கை பொய்த்துப்போய் விடும் போலிருக்கின்றதே! ஆஹா! இப்பொழுது எனக்கு நினைவு வருகின்றது! அயோத்தியிலிருந்து வனவாசத்திற்குப் புறப்பட்டபொழுது நீங்கள் என்ன சொன்னீர்கள்? "கல்லும் உருகும் கடுமையான வெப்பத்தை உன் மலர்ப்பாதங்கள் தாங்கமாட்டா! எனவே நான் வனம் சென்று மலைவளம் கண்டு வருவேன்! வருந்தவேண்டாம் நீ! என்று என்னிடம் கூறினீர்களல்லவா? 'அதன் பொருள் என்ன? கானகத்தில் வெப்பத்திலிருந்து என்னைக் காக்க நினைத்த கருணைக்கடலே! இப்போது பிரிவு என்னும் வெப்பத்தால் கருகிக் கொண்டிருக்கின்றேனே, என்னைக் காக்க உங்களுக்கு மனம் வரவில்லையா? அல்லது உங்கள் சொல்லை மீறிவந்த எனக்கு இந்தப் பிரிவு தகுந்த தண்டனைதான் என்று நினைத்துவிட்டீர்களா? இல்லை, இல்லை! அப்படி இருக்காது! பதினுறு ஆண்டுகள் என்னைப் பிரிந்து வனம் செல்ல நினைத்த கல்நெஞ்சமுடையவர் தானே நீங்கள்? இப்போது இந்தச் சிறிய பிரிவினல் நீங்கள் எங்கே வருந்தப் போகின்றீர்கள்? என் உயிரையல்லவா வருத்திக் கொண்டிருக்கிறீர்கள்?" இங்ஙனம் சீதை ராமனைக் குறித்து வருந்தியது நமக்குப் புகட்டும் பாடமாவது: பரத்தைக்குறித்துநாம்இத்தகைய பரிதவிப்புக்கொள்ளவேண்டும். அப்பொழுது தான் பரத்தின் காட்சி நமக்குக் கிட்டும்.

சீதையின் எண்ணத் தோட்டத்தில் மலர்ந்த வண்ண மலர்களில் ஒரு சிலவற்றைக் கண்டோம். அந்தத் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசிய மலர்கள் சிலவற்றை மேலும் காணலாம். எத்தனை விதமான மலர்கள் தோன்றி மறைந்தன அவ் இளநெஞ்சத்தில்! என்று பார்க்கும் போது நாம் வியப்படையாமலிருக்க முடியாது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (274) ஜீவ வியக்தி என்பது யாது?

உடல் எடுத்துள்ள உயிர்வகைகள் ஜீவ வியக்தி என்னும் பெயர் பெறுகின்றன. பரம்பொருள் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டும் முக்குணங்களைத் தோற்றுவித்து அவைகளை ஆண்டும் வருகிறது. அப்பாலுள்ள பரம்பொருள் நிர்க்குணப் பிரம்மம் என்னும் பெயர் பெறுகிறது. முக்குணங்களை ஆண்டுவருகிற பரம்பொருள் சகுணப்பிரம்மம் என்னும் பெயர் பெறுகிறது. குணங்களோடு கூடியது என்பது இதன் பொருள். கடலின் அலையற்ற அடிப்பகுதி போன்றது நிர்க்குணப் பிரம்மம். அலைவீசிக்கொண்டிருக்கும் கடலின் மேற்பரப்பு போன்றது சகுணப்பிரம்மம். அலைஒன்று சமுத்திரத்திற்குப் புறம்பாயிருக்கமுடியாது. சமுத்திரத்தில் வடிவெடுக்கும் அலைக்கு நிகர் ஜீவ வியக்தி. சிற்றுயிர், பேருயிர் ஆகிய உயிர் வகைகளனைத்தும் அறிவுப் பெருவெளியாயிருக்கும் சகுணப்பிரம்மத்தின் தோற்றங்களாம். ஜீவவியக்தியிடத்துப் பிரம்மத்திடத்திருக்கும் அறியும் தன்மையும், ஆனந்தமாயிருக்கும் தன்மையும் அமைந்திருக்கின்றன. அத்தகைய அமைப்புக்கு உடலும் சேர்ந்து அமைந்திருக்கிறது. உடலோ முக்குணங்களால் ஆனது. ஆகையினால் ஜீவ வியக்தி என்பது ஆத்ம தத்துவமாகிய அறியும் தன்மையும் முக்குணமயமாயுள்ள ஜடப்பொருளாகிய உடலும் ஒன்று சேர்ந்ததாம். உடலில் குடிகொண்டிருக்கும் ஆத்மா ஜீவ வியக்தியாகிறது. பல பிறவிகளில் இந்த ஜீவ வியக்தி சிற்றுயிர் நிலையிலிருந்து பரிணமித்துப் பேருயிர் நிலையை எட்டுகிறது. மானுட சரீரம் எடுத்துள்ள ஜீவன் பரிணமத்தில் உச்சநிலைக்கு வந்த ஜீவாத்மா ஆகிறது. ஆக உடல் எடுத்திருக்கும் ஜீவாத்மாவிற்கு ஜீவ வியக்தி என்று பெயர். புளியம்பழம் முதிர்ந்து வருகின்றபொழுது ஓடு வேறு, பழம் வேறாகப் பிரிகிறது. அங்ஙனம் மானுட நிலையை எட்டியுள்ள ஜீவ வியக்தி முக்குண மயமாயுள்ள உடல் வேறு, அதனுள் வீற்றிருக்கும் ஆத்மாவேறு என அறிகிறது. அந்த அறிவு அனுபூதியாகின்றபொழுது அந்த ஆத்மா ஜீவமுக்தி நிலையை அடைகிறது. உடல் அழிந்துபட்டுப்போன பிறகு அந்த ஆத்மா பரப்பிரம்மத்தில் ஒன்றுபடுகிறது. பரம்பொருளை எட்டும் பரியந்தம் சரீரத்தோடுகூடியிருக்கிற ஜீவாத்மனுக்கு ஜீவவியக்தி என்று பெயர்.

கேள்வி: (275) நாட்டின் பண்பு அதி வேகம் தாழ்வுற்று வருகிறது. இதற்குக் காரணம் யாது?

நாடு மேன்மையுறுவதற்கு அரசியல் துறையில் அது சுதந்திரம் பெற்றிருப்பது முற்றிலும் அவசியம். *1947* ஆம் ஆண்டில் நம் நாடு பிற ஆட்சியினின்று விடுதலை பெற்றுச் சுதந்திர வாழ்வு வாழ்ந்து வருகிறது. அதற்குச் சற்று முன்பு நிகழ்ந்த இரண்டாவது உலகமகாயுத்தத்தில் ஜெர்மனியும், ஜப்பானும் பெரும் நஷ்டத்துக்கு ஆளாயின. அங்ஙனம் அனைத்தையும் இழந்த நிலையில் அந்த நாடுகள் இரண்டும் *1947* ஆம் ஆண்டில் இருந்தன. சுதந்திரம் என்னும் பெரிய வாய்ப்பு வாய்க்கப்பெற்ற நாடாக நம் இந்தியா அதே *1947*ல் அமைவதாயிற்று. முப்பத்து நான்கு வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கு ஜெர்மனியும், ஜப்பானும் யாண்டும் மேன்மையுற்று விளங்குகின்றன. பொருளாதாரத்துறையில் அந்த நாடுகள் இரண்டும் தலையாய இடம் பெற்றுள்ளன. அந்நாட்டு மக்கள் மனப்பான்மையில் மேலோங்கியிருக்கின்றனர். அறிவிலும், உழைப்பிலும், அன்னவர்களுக்கு நிகரானவர்களை இன்றைக்கு உலகில் வேறு எங்கும் காணமுடியாது. பிரதிகூலமான சூழ்நிலையை எல்லா விதத்திலும் முன்னேற்றத்துக்கேதுவான சூழ்நிலையாகத் திருத்தியமைத்த பெருமை அந்நாட்டு மக்களுக்கு உண்டு.

எல்லாவிதமான சௌபாக்யத்தோடு கூடியதாக நம் நாடு *1947* ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர வாழ்வு வாழ்ந்து வருகிறது. அது பரியந்தம் வெளிநாட்டவர்கள் இங்கிருந்து சுரண்டி எடுத்துச்சென்ற செல்வம் இப்பொழுது இந்நாட்டுக்கே உரியதாக விரிவடைந்து வருகிறது. ஆகவே பொருளாதாரத்துறையில் ஓரளவு முன்னேற்றம் காண்கிறோம். ஆயினும் ஏழை

மக்கள் இன்றைக்கும் ஏழையாக இருந்து வருகின்றனர். மேழிச்செல்வம் கோழைபடாது என்பது கோட்பாடு. ஆனல் இன்றைக்கு வேளாண்மைத்தொழில் எந்த விதமான முன்னேற்றமும் அடையாது பின்னணியிலேயே இருந்து வருகிறது. இந்த ஒரு காரணத்தை முன்னிட்டுப் பொருளாதாரத்துறையில் நாம் மேலோங்கியிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. முன்னேற்றங்களுள் முதன்மை வகிப்பது நல்ல மனப்பாங்கு ஆகும். வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம் உள்ளத்தனையதுயர்வு என்பது பொய்யாமொழி. இன்றைக்கு நம் நாட்டு மக்களுள் பெரும்பான்மையோர் மனபரிபாகத்தில் அதிவேகம் கீழ்மையடைந்து வருகின்றனர். சுயநல எண்ணமே இதற்கு முதற்காரணமாகும். பொது நலனில் சுயநலம் அடங்கியிருக்கிறது என்னும் மேலாம் கோட்பாட்டை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். நமக்கு நாம் வகுத்து வைத்திருக்கும் அரசியல் திட்டம் நமக்குப் பொருத்தமானதன்று. பண்டொருகாலத்தில் நம் நாட்டில் முடிஅரசும் குடியரசும் ஒன்றுபட்டு இருந்தன. இன்றைக்கு அமைந்துள்ள குடியரசு நம் நாட்டுப் பண்பை அடிப்படையாகக் கொண்டதன்று. கைக்கூலி அல்லது இலஞ்சம் கொடுத்து ஆதிக்கத்திற்கு வரும் முறை இன்றைக்கு அமலில் இருக்கிறது. நாடு கீழ்மையுற்றதற்கு இதுவே முதற்காரணமாகும். இலஞ்சத்தைத் தொடர்ந்து பொய்யும் பித்தலாட்டமும் ஏராளமாக வடிவெடுத்து வருகின்றன.

எனவே நம் நாட்டில் அமைந்துள்ள ஆட்சிமுறையைப் பழைய பண்போடு கூடியதாகத் திருத்தியமைக்காவிடில் நாம் இன்னும் அதிகமாகக் கீழ்மையுறுவது திண்ணம். இறைவன் திருவருளால் ராம ராஜ்யம் என்னும்பெயர் பெற்றுள்ள மேலாம் ஆட்சிமுறை நமக்கு வாய்க்கும் பொழுது பண்பாட்டில் நம் நாடு புத்துயிர் பெற்று இலங்கும்.

கேள்வி: (276) ***மந்திரங்களுள் சிறந்தது காயத்ரி என்று சொல்லுவதற்குக் காரணம் யாது?***

மனிதன் ஏதேதோ எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கிறன். அவ்வெண்ணங்களுள் மனிதனை மேல்நிலைக்கு எடுத்துச்செல்லக்கூடியவைகளும் இருக்கின்றன; அவனைக் கீழ்மையில் ஆழ்த்தும் எண்ணங்களும் இருக்கின்றன. அப்படி அமையும் எண்ணங்கள் மனிதனுடைய பாங்கை அனுசரித்து இருக்கின்றன. கெடுப்பதுவும் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே எடுப்பதுவும் எல்லாம் எண்ணம் என்று குறளை மாற்றியமைப்பதில் பிழை இல்லை. நல்லெண்ணமே எண்ணுபவன் மேன்மையுறுகிறன். தன்னுடைய தெய்வீக இயல்புக்குத் தீங்கு பண்ணும் கெட்ட எண்ணங்களை எண்ணுபவன் சீர்கேடு அடைகிறன். மனிதனை மேல்நிலைக்கு எடுத்துச்செல்லும் எண்ணம் மந்திரம் எனப்படுகிறது. மனதை உறுதிப்படுத்துகின்ற எண்ணம் மந்திரமாகிறது. அந்த எண்ணத்துக்கு விளக்கமாக அமைவது சொல். எனவே சொல்மயமாக மந்திரம் அமைந்திருக்கிறது. அப்படி அமைந்திருக்கும் மந்திரங்களுள்

ओं तत् सवितुर्वरेण्यं
भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

என்பது காயத்ரிமந்திரம்.

இதன் பொருள் ஓம் அறிவைத் தீட்டுகின்ற அகத்திலிருக்கும் அழுக்கை அகற்றுகின்ற அருள் ஒளியோடு கூடிய போற்றுதற்குரிய ஆக்கத்தெய்வத்தைத் தியானிப்போமாக என்பதாம். ஓம் என்பது தன்னளவில் மந்திரம். அதன் தலைசிறந்த பகுதியாக இந்தக் காயத்ரி மந்திரம் அமைந்திருக்கிறது. ஓம் என்னும் ஓசையை இடையருது உள்ளத்தில் எழுப்பிக் கொண்டிருப்பவன் மேலோனகத் திருந்தியமைகிறன். அத்தகைய சக்தி வாய்ந்தது ஓயாது இயற்கை முழுதிலும் ஒலித்துக் கொண்டிருக்கிற பிரணவம் என்னும் அந்த ஓங்கார மந்திரம். ஏனைய மந்திரங்களனைத்துக்கும் இது ஆதிமூலமாயிருப்பதால் இதற்கு பீஜமந்திரம் என்று பெயர். பீஜம் என்றுல் வித்து. வித்திலிருந்து செடி முளைக்கிறது. அங்ஙனம் ஓங்காரத்திலிருந்து ஓசைகளனைத்தும், உலகமும் வந்துள்ளன. இனி காயத்ரி மந்திரம் அறிவைத் தீட்டுவதால் இது மந்திரங்களனைத்திலும் தலைசிறந்தது எனக் கருதப்படுகிறது.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-153

882. यज्ञकर्त्री யக்ஞகர்த்ரீ— யக்ஞங்களுக்கெல்லாம் கர்த்தாவாயிருக்கின்ற சிவனுருக்கு அபின்னமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள். சிவம் வேறு சக்தி வேறு என்று பாகுபடுத்தலாகாது. எங்ஙனம் அக்னியும் அதனுடைய சுடுகிற தன்மையும் ஒன்ருே, சூரியனும் சூரியப்பிரகாசமும் ஒன்ருே, அங்ஙனம் யாகங்களுக்கு அதிஷ்டான தெய்வமாயிருக்கின்ற சிவனரும் அவருடைய சக்தியாகிய அம்பிகையும் சொரூபத்தில் ஒன்ரும்.

செயல் ஒன்றுக்கு, அல்லது பொருள் ஒன்றுக்கு, அல்லது பதவி ஒன்றுக்கு உரிமை பாராட்டுவது அச்ஞானத்தில் உழலும் உலகத்தவர் போக்கு ஆகிறது. ஆனல் முறையாக யக்ஞம் பண்ணுகிற ஒருவனிடத்து இத்தகைய குறைநிலைகளைக் காணமுடியாது. நிகழ்கின்ற யக்ஞகிருத்தியங்கள் யாவும் இறைவன் அருளால் நிகழ்கின்றனஎன்னும் எண்ணத்தில் அன்னவன் மூழ்கியிருக்கிருன். கொல்லன் ஒருவன் பழுக்கக் காய்ச்சிய இரும்பைச் சம்மட்டியால் அடிக்கிருன். அதன் உருவத்தை மாற்றியமைப்பது சம்மட்டி எனினும் அச்செயலனைத்தும் கொல்லனுக்கே உரியதாகின்றன. யாகம் பண்ணுகிற மூர்த்தியை உலகத்தவர் எஜமானன் என்கிருர்கள். ஆனல் ஞானபரிபாகம் அடைந்துள்ள அந்த யக்ஞமூர்த்தி கொல்லன் கையில் சம்மட்டியிருப்பதற்கு நிகராகத் தன்னை இறைவனுக்கு அமைந்துள்ள கருவியாகமட்டும் வைத்துக்கொள்ளுகிருன். யான் எனது என்னும் அகங்கார மமகாரத்திற்குச் சிறிதேனும் அவனுடைய உள்ளத்தில் இடமில்லை. ஜீவபோதம் அவனுடைய உள்ளத்தினின்று அறவே அகன்றுபோயிருப்பதால் பரபோதம்மட்டும் அவ்வடிவத்தில் நிலைத்திருக்கிறது. அத்தகைய தெய்வீக நிலையில் ஊறியிருக்கும் மூர்த்தியை வணங்குவதும் பரம்பொருளை வணங்குவதும் ஒன்றேயாம். எஜமானன் ஒருவனுக்கு இத்தகைய பாரமார்த்திகப் பெருநிலை அம்பிகையின் அருளால் வாய்க்கிறது. இனி அம்பிகை வேறு இறைவன் வேறு அல்ல. எனவே முறையாக யக்ஞகிருத்தியம் நிகழ்கின்றவிடத்து ஆங்கு யக்ஞ சொருபமாயுள்ள அம்பிகையின் சாந்நித்தியத்தையே ஆத்மசாதகர்கள் காண்கிருர்கள். இக்காட்சியே மெய்க்காட்சி ஆகிறது. ஆதலால் அம்பிகையை யக்ஞகர்த்ரீ எனக் கூறுவது மிகவும் பொருந்தும்.

883. यजमानस्वरूपिणी எஜமானஸ்வருபிணீ—வேள்வி வேட்பவனுடைய வடிவத்திலிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

யார் ஒருவன் யக்ஞம் பண்ணுகின்ருனே அவன் யக்ஞமூர்த்தி அல்லது எஜமானன் என்னும் பெயர் பெறுகிருன். இன்றைக்கு யாதேனும் ஒரு செயலுக்கு, அல்லது ஸ்தாபனத்துக்கு, அல்லது பதவிக்கு யார் தலைவனுகயிருக்கிருனே அவன் எஜமானன் என அழைக்கப் பெறுகிருன். இந்த விதங்களில் எஜமானன் ஆவது வெறும் உபசாரத்தின் விளைவாம். யாரொருவன் தனக்குரிய செல்வங்களையும், நலன்களையும் பொதுவுடைமையாக்குகின்ருனே அவனே உண்மையில் யக்ஞகர்த்தாவாக அல்லது எஜமானனுக அமைகிருன். அது தியாகத்தின் விளைவு. அற்றது பற்று எனில் உற்றது வீடு என்பது மறைமொழி. உலகப் பற்றனைத்தும் யார் ஒருவனிடமிருந்து நீங்கப் பெறுகின்றனவோ அன்னவன் முற்றும் ஆத்ம பரிபாகம் அடைந்தவனுகிருன். ஆத்ம பரிபாகம் அடைந்தவனுடைய உள்ளமே இறைவனுக்குகந்த ஆலயமாகிறது: ஆதலால் இறைவனுடைய சாந்நித்தியத்தையும் மகிமைகளையும் திரிகரணசுத்தியோடு வேள்வி வேட்பவனிடத்துக் காணலாம். எங்கும் நிறைபொருளாகிய இறைவன் அல்லது இறைவி ஆகிய அன்னை பராசக்தியின் சாந்நித்தியத்தைத் தகுதி வாய்ந்த உண்மை எஜமானன் ஒருவனிடத்துக் காணலாம் என்பது இந்த நாமத்தின் உட்கருத்து.

884. धर्म आधारा தர்மஆதாரா—தர்மத்துக்கு ஆதாரமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

தர்மம் என்னும் சொல் பரந்த கருத்துடையது. அதற்கு நிகரான பதத்தை வேறு எந்த மொழியிலும் காணமுடியாது. தர்மமும், தர்மத்துக்கு ஆதாரமாயிருக்கும் அன்னை

பராசக்தியும் ஒன்றேயாம். பிரபஞ்ச முழுதும் சேதன அசேதன சொருபமாக அமைந்திருக்கிறது. அசேதனம் அல்லது உயிர் அற்றவை பஞ்சபூதங்கள். இந்தப் பஞ்ச பூதங்களுக்கும் ஏற்ற தர்மங்கள் அமைந்திருக்கின்றன. பொறையே வடிவெடுத்திருப்பது பூமியின் தர்மம். நனைப்பது நீரின் தர்மம். தகிப்பது அல்லது சுட்டெரிப்பது நெருப்பின் தர்மம். உலர்த்துவது காற்றின் தர்மம். தோன்றியுள்ள அனைத்தையும் தன்னகத்து அடக்கியிருப்பது ஆகாசத்தின் தர்மம். இக்கோட்பாடுகளை ஆராய்ந்து பார்க்குமிடத்தே தர்மத்தின் பாங்கு எவ்வளவு பரந்தது என்பது ஓரளவு விளங்கும். அடுத்தபடியாக உயிர்வகைகளாகப் பரிணமித்திருப்பவைகளுக்கிடையில் இந்திரியங்கள் அல்லது பொறிகள் படிப்படியாக மேலோங்கியமைகின்றன. ஊறு அல்லது ஸ்பர்ச உணர்ச்சி ஒன்றை மட்டும் அடிப்படையாகக்கொண்டிருப்பது ஸ்தாவர உலகம். புல், பூண்டு, மரம், செடி, கொடிகள் ஆகிய ஸ்தாவரங்கள் முழுதுக்கும் ஸ்பர்சம் ஒன்றுதான் பொறியாக அமைந்திருக்கிறது. ஊறு அல்லது ஸ்பர்சத்தை உபாயமாக வைத்துக் கொண்டு நிறைவாழ்வு வாழ்வது பயிர்பச்சை, புல், பூண்டு, மரம், செடி கொடிகளின் தர்மமாம். இந்த அமைப்பும் வியப்புக்குரியதேயாம். அடுத்த படியாக எறும்பு உலகை ஆராய்ந்து பார்த்தால் எறும்பு வகைகள் ஸ்பர்சம், மோப்பம், சுவை ஆகிய பொறிகள் உடையவைகளாயிருக்கின்றன. இந்த மூன்று இந்திரியங்களை வைத்துக்கொண்டு எறும்பு இனங்கள் நிறை நிலையில் தனி வாழ்வு மட்டுமல்ல, சமுதாய வாழ்வும் வாழ்ந்து வருகின்றன. தனக்கென வாழாது பொது நலனுக்காக வாழ்வது உயிர்வகைகளின் தர்மமாகும். அத்தகைய உயிர் வகைகளுள் மூன்று இந்திரியங்கள் மட்டும் வாய்க்கப்பெற்றுள்ள அல்ப ஜந்துக்களாகத் தென்படும் எறும்பு வகைகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள தர்மத்தினின்று இம்மியளவும் பிசகாது வாழ்ந்து வருகின்றன. அவைகள் அப்படி வாழ்வதும் அம்பிகையின் பெருந்திட்டமாம்.

அடுத்த படியாகத் தேன் ஈ உலகுக்கு ஐந்து இந்திரியங்களும் வடிவெடுத்து இருக்கின்றன. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்கள் தேன் ஈக்கும் அதற்கு மேலே வந்துள்ள மற்ற உயிர்களுக்கும் சொந்தமாம். அத்தகைய தேன் ஈ அருமையான பாங்கில் சமுதாய வாழ்வு வாழ்கிறது. ஆட்சி முறையில் மனிதன் அதற்கு நிகராகமாட்டான். தூயவாழ்வுக்கும் தேன் ஈ எடுத்துக்காட்டு ஆகிறது. ஆக இந்த உயிர்வகைகளிடத்துத் தர்மத்தின் விளக்கம் பன்மடங்கு மேலோங்குகிறது.

இனி மனிதவர்க்கத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டால் ஐந்து இந்திரியங்களும் அவைகளுக்கு மேல் பகுத்தறிவும் அவனுக்குச் சொந்தமாகின்றன. பகுத்தறிவைப் பயன்படுத்துதலில் மனிதனுடைய பாங்கு பலதரப்பட்டதாகிறது. அரக்க இயல்பு படைத்துள்ள மானுடன் அந்த இயல்புக்கேற்றவாறு தன்னுடைய பகுத்தறிவைப் பயன்படுத்துகிறான். மானுட இயல்பைப் படைத்துள்ள மனிதனிடத்து மனிதத்தன்மை முழுதும் நன்கு வெளியாகிறது. இதே மனிதனிடத்துத் தெய்வீகப் பெற்றியையும் காணலாம். மக்களுள் யுதிஷ்திரன் என்னும் பெயர் பெற்றுள்ளவன் பாண்டவர்கள் ஐவருள் மூத்தவன் ஆவான். அவனுக்குத் தர்மபுத்திரன் என்பதும், தர்மராஜன் என்பதும் ஏனைய பெயர்களாம். பூவுலகில் தர்மராஜன் என அழைக்கப்பெறுகிறவன் யுதிஷ்திரன் ஒருவனே. மனிதனிடத்து இருக்கவேண்டிய தர்மத்தின் பாங்குகளனைத்துக்கும் இருப்பிடமாயிருப்பவன் யுதிஷ்திரன். அவனிடத்து அமைந்திருக்கும் தர்மத்துக்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பாண்டவர்கள் ஐவரும் அவர்களுக்கு மனைவியாக வாய்த்த திரௌபதியும் சொர்க்கத்தை நோக்கிப் பயணம் போனார்கள். அவர்களைத் தொடர்ந்து நாய் ஒன்று வந்தது. பயணம் போகும் வழியில் யுதிஷ்திரன் ஒருவன் நீங்கலாக ஏனைய சகோதரர்கள் நால்வரும் திரௌபதியும் வழியில் வீழ்ந்து மடிந்து போனார்கள். ஆனால் அப்படி வீழ்ந்தவர்களைத் திரும்பிப் பார்க்காது யுதிஷ்திரன் மட்டும் மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். சொர்க்கத்திற்கு அவனை அழைத்துச் செல்ல இந்திரன்

விமானத்தோடு நிலவுலகில் வந்து இறங்கினன். விமானத்தில் யுதிஷ்திரனை ஏறும்படி கேட்டுக்கொண்ட போது வழியில் மடிந்து போன சகோதரர்களும் மனைவியும் எங்கே எந்த நிலையிலிருக்கிறார்கள் என்பதையறிந்து கொள்ளாது தான் மட்டும் சுவர்க்கத்திற்குப் போவது பொருந்தாது என்று யுதிஷ்திரன் மறுத்தான். இந்திரன் கேட்ட கேள்வியாவது: "தம்பிமார்மீது அவ்வளவு அபிமானம் வைத்துள்ள நீ வீழ்ந்து மடிந்து போனவர்களை ஏன் திரும்பிப்பார்க்கவில்லை?"

யுதிஷ்திரன்: திரும்பிப் பார்த்திருந்தால் நானும் வீழ்ந்திருப்பேன். அதில் யாருக்கும் பிரயோஜனமில்லை. வீழ்வதற்குரிய காரணத்தை மட்டும் நான் அறிந்து கொண்டேன்.

இந்திரன்: நீ பகர்ந்த அக்காரணங்களை முன்னிட்டே அவர்கள் படைத்திருந்த பூத சரீரத்தோடு சொர்க்கத்துக்குப்போக அவர்கள் தகுதியற்றவர்கள் ஆனார்கள். ஆதலால் சரீரங்கள் வீழ்ந்தன. அவர்கள் ஏற்கனவே சொர்க்கத்தை எட்டியாயிற்று. பூத சரீரத்தோடு சொர்க்கத்துக்குப் போகும் தகுதி உன்னிடத்தே அமைந்திருக்கிறது.

இப்பொழுது யுதிஷ்திரன் விமானத்தில் ஏற முயன்ற பொழுது நாயும் வாலைக் குழைத்துக்கொண்டு விமானத்தில் ஏற முயன்றது. இந்த நாய்க்குச் சொர்க்கத்தில் இடமில்லை யென்று இந்திரன் ஆட்சேபித்தான். "என்னை நம்பி வந்துள்ள நாயை ஒதுக்கித் தள்ளி விட்டு நான் மட்டும் சொர்க்கத்திற்குப் போவது தர்மமாகாது" என்றான் யுதிஷ்திரன். "இந்த நாயோடு நீ நிலவுலகில் வாழ்ந்திருக்க விரும்புகின்றாயா? அல்லது தம்பிமாருடன் சொர்க்கத்தில் வாழ்ந்திருக்க விரும்புகின்றாயா?" என்று கேட்டான் இந்திரன். தம்பிமார்களோடு கூடி வாழ்கிற சொர்க்க வாழ்வையும், தர்மத்தைப் புறக்கணித்து நான் நாடமாட்டேன். நாய் ஒன்று பிறர்க்கு அல்ப ஜந்துவாகத் தென்படலாம். உயிர்வகைகளனைத்தையும் ஒரே பாங்கில் பாராட்டுவது நான் கடைப்பிடிக்கும் தர்மமாகும். இப்பொழுது நாய் தர்ம தேவதையாக மாறியமைந்தது. தர்ம புத்திரனுடைய தர்ம அனுஷ்டானத்தை இந்திரனும் தர்மதேவதையும் முற்றிலும் பாராட்டினார்கள்.

இங்ஙனம் தர்மத்தினுடைய கூறுகள் பல தரப்பட்டவைகளாம். அவை யாவுக்கும் அன்னை பராசக்தி ஆதாரமாக இலங்குகின்றாள்.

885. धनाध्यक्षा தனாத்யக்ஷா — செல்வத்துக்குத் தலைவியாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாயிருப்பவைகளும் நன்கு பயன்படுபவைகளும் தனம் அல்லது செல்வம் என சொல்லப்படுகின்றன. உணவு, உடை, உறைவிடம் ஆகியவைகள் வாழ்க்கைக்கு முற்றிலும் தேவைப்படுகின்றன. உணவை உண்டுபண்ணுகிற நிலமும் செல்வம் எனவே கருதப்படுகிறது. இவ்வுலக வாழ்க்கைக்கு இவை யாவும் முற்றிலும் அவசியம். இக்கோட்பாட்டை அனுசரித்தே 'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லாகி யாங்கு' என்னும் பொய்யாமொழி அமைவதாயிற்று. அன்னை பராசக்தியின் கடைக்கண் பார்வைக்கு இலக்காகும் மாந்தர் அதிவிரைவில் செல்வம் யாவும் வாய்க்கப் பெற்ற பெருமக்கள் ஆவார்கள். அன்னையின் அருளால் நிலவுலகிலுள்ள பெரும்பகுதிகள் தனத்தை உண்டுபண்ணக் கூடியவைகளாக அமைந்திருக்கின்றன. பூமியினுள் புதைந்து கிடக்கும் பலப்பல சுரங்கங்களில் பொன் தாதுக்களும் ரத்ன வகைகளும் புதைந்து கிடக்கின்றன. அவை யாவையும் எடுத்து நன்கு பயன்படுத்த வல்லவர்கள் தனவந்தர்கள் ஆகின்றார்கள். பூமியினுள் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருக்கும் உலோக, எண்ணெய்களும் இன்றைக்குச் செல்வமாகப் பயன்பட்டு வருகின்றன. பூமியினுள் புதைந்து கிடக்கின்ற நிலக்கரியும் இன்றைக்குச் செல்வமாகப் பயன்பட்டுவருகின்றது. இனி நிலத்தின் மேற்பரப்பில் அமைந்துள்ள நிலவளம், நீர்வளம், மலைவளம், வனவளம் ஆகியவைகள் தனத்தைப் பெறுவதற்கு ஏதுவானவைகளாக வாய்த்திருக்கின்றன. கால்நடைகளும், அன்னையின் அருளால் மக்களுக்குத் தனமாக வந்து வாய்த்துள்ளன. இவையாவுக்கும் அன்னை பராசக்தி தலைவியாயிருப்பதால் தனஅத்யக்ஷா என அவள் போற்றப்பெறுகிறாள்.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

"ஆலயம் பிற எள்ளியர் அங்கமே" என்பது மடக்கணி அமைந்த அப்பாடலின் அடி.

தெய்வத்தைத் தவிர உலகத்தில் உள்ள எல்லாப்பொருள்களும் உள்ளத்தில் இடம்பெறு வண்ணம் ஒதுக்கித்தள்ளும் அடியார்களின் மனம் எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் ஆலயம் ஆகும்.

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்பது ஆன்றோர்களின் அனுபவ வாக்கு. உண்மையான அன்புடனும், பக்தியுடனும் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்ற அடியார்களின் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டு இறைவன் எழுந்தருளி இருப்பான்.

"அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சேரலின், ஏகினன் என இறந்த காலத்தாற் கூறினார்" எனப் பரிமேலழகர் திருக்குறளுக்கு விளக்க உரை கூறும்போது சொல்லுவதும் கவனிக்கத் தக்கது.

நினைக்காதவர் நெஞ்சில் ஈசன் வரமாட்டான், புகமாட்டான் என்பதும் தெரிகிறது.

உருவமே இல்லாத இறைவன், யார்யார் எந்த எந்த வடிவத்தில் நினைக்கிறார்களோ அந்த அந்த வடிவத்தில் அவரவர்கள் மனத்தில் எழுந்தருளிக் காட்சி அளிப்பான்.

ஆன்மா, சந்திரன், சூரியன், அக்னி, ஆகாயம், நிலம், நீர், காற்று ஆகிய அஷ்ட மூர்த்தமாக விளங்குபவன் இறைவன். "மேவ வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே" என இறைவன் அஷ்ட மூர்த்தியாக விளங்குவதைக் குமரகுருபரர் இயம்புகின்றார். சுயம் பிரகாசத்தை உடைய ஞான சூரியன் இறைவன். அநாதி முத்த நித்தன் அவன். உலகம், உலகத்தில் உள்ள பொருள்கள் ஆகிய அனைத்தும் தோன்றுவதற்கு முன்பே உள்ளவன் இறைவன். சமானமும், ஆதியும் அந்தமும், இல்லாதவன். போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன் என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். யோக மூர்த்தியாக எழுந்தருளி யோகிகளுக்கு யோக முக்தி அருளுவான். போக மூர்த்தியாக எழுந்தருளிப் போகிகளுக்குப் போகம் வழங்குவான். இத்தகைய இயல்பினன் இறைவன்.

ஈறிலாப் பதங்கள் யாவும் கடந்த இன்ப அன்பாகத் திகழும் இறைவனை மட்டுமே எப்பொழுதும் எண்ணுபவர்கள், மனத்தால் தியானிப்பவர்கள் உண்மையான அடியார்கள்.

"பிற எள்ளியர்"—சிவனைத் தவிர உலகத்தில் உள்ள மற்றைய பொருள்கள் பொருளற்றவையென ஒதுக்கியவர்கள் அடியார்கள். எப்போதும் சிவசிந்தனையோடு இருப்பவர்கள், தூய்மை உடையவர்கள் அடியார்கள்.

அவ்வாறு உணருவதும் தங்களுடைய அறிவாற்றலால் இல்லை; இறைவனுடைய திருவருள் ஆற்றலால்தான் உணரமுடிகிறது என்னும் ஆத்ம சுத்தி உடையவர்கள்.

ஆத்மா உணர்வு இல்லை; அதுவும் திருவருள் தான் என உணரும் திரவிய சுத்தி உடையவர்கள். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துப் பஞ்சாக்ஷர உண்மையை உணரும் மந்திர சுத்தி உடையவர்கள்.

சிவமே சகல ஜகத் காரண பூதம், அச்சிவம் சிவலிங்க மூர்த்தத்தில் எழுந்தருளி இருக்கும் என்னும் லிங்கசுத்தி உடையவர்கள்.

இவ்வாறு பஞ்சசுத்தி உணர்ந்து, உள்ளும் புறமும் சிவநேசச் செல்வர்களாக வாழ்பவர்கள் அடியார்கள். நெற்றியாகிய லாடஸ்தானத்தில் அந்தர்முகமாகத் தரிசித்துச் சிவபெருமானை ஜோதி வடிவமாகத் தரிசித்தவர்கள் அடியார்கள்.

"நெற்றிக்கு நேரே நீண்ட புருவத்திடையே உற்று உற்றுப் பார்க்க ஒளி தோன்றும்"— என்று சிவஜோதி தரிசனத்தை உணர்ந்த அனுபவ ஞானிகள் கூறுகிறார்கள். இவ் அனுபவ ஞானிகள் அடியார்கள். "மேதா" என்பது இருபத்திரண்டு எழுத்துக்களாலாகிய ஒரு மந்திரம். விழுது இல்லாத ஆலமரமாகிய கல் ஆலமரத்தின் கீழ் முதல் குருவாக, மோன நிலையில் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் தக்ஷிணாமூர்த்தியின் திருவருள்பிரகாசத்தை அடைவதற்கு "மேதா" என்னும் மந்திரத்தை உச்சரிப்பவர்கள் அடியார்கள்.

இத்தகைய சிறந்த அடியார்களின் உள்ளத்தை தான் எழுந்தருளி இருக்கும் ஆலயமாக ஆக்கிக்கொண்டவன் சிவபெருமான். ஈடு இணை இல்லாத ஒளி விளக்கைப் போல எழுந்தருளிய சிவபிரான், சூட்சும ரூபமான ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தால், ஆன்மாவைச் சூழ்ந்திருக்கும் ஆணவ மலமாகிய பந்தத்தை ஒழிப்பார். அவ்வாறு ஒழித்து, சிவானந்தம் விளைகின்ற ஞான பூமியில் சேர்த்துப் பிறப்பும் இறப்பும் இல்லாத பரிபூரணமான சிவமாக அடியார்களைத் திளைக்கச் செய்வார்.

''அங்கம்'' என்பது இங்கே மனத்தைக் குறிக்கும். ஆரவாரத்துடன், உண்மையான பக்தி இல்லாமல் செய்யும் பூஜையைக்காட்டிலும், ஆரவாரம் எதுவும் இல்லாமல், மனத்தை அடக்கி அமைதியாகத் தியானம் செய்வதே இறைவனுக்கு உகந்த வழிபாடு. இறையருளைப் பெறுவதற்கு ஏற்ற வழிபாடு உண்மையான அன்பு, பக்திகொண்ட பூசலார் நாயனர் உள்ளத்தைச் சிவபெருமான் பெரு விருப்பம் கொண்டு கோயிலாக ஏற்று எழுந்தருளினர் எனப் பெரிய புராணம் கூறுவது இங்கே நினைக்கத் தக்கது.

இப்பாடலில், முதல் அடியில் ''வெள்ளியரங்கமே'' என்னும் தொடர் இரண்டு முறை வந்துள்ளது. ''வெள்ளி அரங்கம்'' எனப் பிரித்து, ''வெள்ளி அம்பலம்'' எனப்பொருள் கொள்ளுவது ஒரு விதம். பிற என்பதுடன் இணைத்து, ''பிற எள்ளியர் அங்கம்''—அடியார்களின் உள்ளம் எனப் பொருள் கொள்ளுவது இன்னொரு விதம்.

''உரங்கொள் பல்கலன் என்பர வாமையே
உணர்வு உருமையும் என்பர வாமையே''

— இவ் அடியில், ''என்பரவாமை'' என்னும் தொடர் இரண்டு முறை வந்துள்ளது.

''உரம் கொள் பல்கலன் என்பு அரவு ஆமை''— சிவபெருமான் தமது மார்பில் பல அணிகலன்களாக அணிந்திருப்பவை எலும்பு, பாம்பு, ஆமை ஓடு ஆகியவை ஆகும்.

உலகம் தடையில்லாமல் இயங்குவதன் பொருட்டு உலகத்தில் உள்ள உயிர்களையெல்லாம் படைக்கின்றான் இறைவன். அவ்வாறு படைத்த உயிர்களையெல்லாம் சம்ஹார காலத்தில் சம்ஹாரம் செய்கிறான் சிவபெருமான். அழித்த பிறகு அவைகளுடைய எலும்புகளையும், தலைகளையும் மாலையாகக் கோர்த்துக் கழுத்திலே அணிந்துகொள்கின்றான்.

சோமயாகம், அவிர்யாகம், பாகயாகம், காமிய யாகம் என்பவை யாகத்தின் வகைகள் ஆகும்.

அக்னிஷ்டோமம், அத்தியக்னிஷ்டோமம், உக்தியம், சோடசீகம், வாஜபேயம், அதிராத்ரம், அப்தோரியாமம் ஆகிய ஏழும் ஸோம யாகம் எனப்படும்.

அக்னியாதானம், அக்னி ஹோத்ரம், தர்ச பூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிருடபசுபந்தம், ஆக்ரயணம், சௌத்ராமணி ஆகிய ஏழும் அவிர்யாகம் என்று சொல்லப்படும்.

அஷ்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணீ, ஆக்ர காயணீ, சைத்ரீ, ஆஷ்வயுஜி ஆகிய ஏழும் பாகயாகம் எனப்படும்.

ஸோமலதை கொண்டு செய்யப்படும் யாகம் ஸோமயாகம். ஸோமயாகம் செய்பவர் ஸோம யாஜியார். அவிஸ் கொண்டு செய்யப்படும் வேள்வி அவிர்யாகம்.

யாகாக்னி கொண்டு இயற்றப்படும் யாகம் பாகயாகம். இது ஏகாக்னி கொண்டு செய்யப்படும் சிறிய யாகம். எனவே பாகயாகம் எனவும் பெயர் பெற்றது எனக் கூறுவார்கள்.

அஸ்வமேதயாகம், ராஜசூய யாகம் ஆகிய இரண்டும் காம்ய யாகங்கள் எனப்படும். வேதங்களில் வல்ல வேதியர்கள் இருபத்து மூன்று மேஷங்களால் பன்னிரண்டு நாட்கள் சிவப்ரீதி யாகம் செய்யும் யாகம் வாஜபேய யாகம். ஐந்து நாட்களில் இரண்டு மேஷங்களாற் செய்யப்படும் யாகம் சோடசீக யாகம். அனைத்து அரசர்களையும் வென்று அவர்களைத் தங்களுக்குக் குற்றேவல் செய்ய இயற்றப்படுகின்ற யாகம் ராஜசூய யாகம். இவ்யாகம் ஐந்து நாள், ஏழு நாள், ஒன்பது நாள், பன்னிரண்டு நாள் என நான்கு மேஷங்களில் க்ஷத்திரியர்களால் செய்யப்படும். பௌர்ணமி, அமாவாசை ஆகிய உவா நாட்களில் சிவனுக்கு உகந்ததாகச் செய்யப்படும் கிரியை தரிசன பூர்வயாகம் எனப்படும்.

இவ்யாகங்களைப்போல இன்னொரு யாகமும் உண்டு. அது அபிசார வேள்வி அல்லது ஆபி

சார வேள்வி எனப்படும். எதிரிகளை வெல்லுவதற்காகத் தீய எண்ணத்துடன் செய்யப்படும் யாகம் இதுவாகும்.

தாருகாவனத்து முனிவர்கள் சிவபிரானை அழிப்பதற்கு ஆபிசார வேள்வி செய்தனர். அவ்யக்ஞத்திலிருந்து அரவங்களை உருவாக்கிச் சிவனைத் தீண்டி அழிக்குமாறு ஏவினர். தன்னை அழிக்க வந்த பாம்புகளையெல்லாம் சங்கரன் ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டு சங்கரா பரணன் ஆனான்.

தேவர்களும் அசுரர்களும் தேவாம்ருதம் பெறுவதற்குத் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மந்திரமலையை மத்தாக ஆக்கிக்கொண்டனர். வாசுகி என்னும் பாம்பை நாணாக அமைத்துக்கொண்டனர். திருமால் ஆமை வடிவம் ஏற்று மத்தின் அடிப்பாகத்தைத் தாங்கிக் கொண்டார்; கால்களால் மேல்பகுதியைப் பற்றிக்கொண்டார். செய்வதற்கு அரிய இச் செயலைச் செய்தமையால் திருமாலுக்குக் கர்வம் ஏற்பட்டது. அக்கர்வத்தை ஒடுக்கும்பொருட்டு ஆமையின் ஓட்டினைப் பறித்துத் தமது மார்பிலே அணிந்துகொண்டார் சிவபெருமான். இவ்வாறு புராணம் கூறுகிறது.

''உணர்வு உறாமையும் என்பர வாமையே"— நல்ல உணர்வுகளை நான் பெறாமல் இருப்பதற்குக் காரணம், சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து வணங்காமல் இருப்பதே ஆகும் என்பது குமரகுருபரர் வாக்கு.

துஞ்சாத போதும், துஞ்சுகின்றபோதும், எப்போதும் சிவனையே எண்ணித் தியானிப்பவர் குமரகுருபரர். சிவசிந்தனை அன்றி வேறு சிந்தனை அறியாதவர் அவர். இருப்பினும் தமது ஈசுவர பக்தியில் நிறை கண்டவரல்லர். ஈசுவர தியானம்மூலம் ஏற்கனவே நல்ல உணர்வுகள் கைவரப் பெற்றவர் அவர். ஏற்கனவே தெய்வீகம் வாய்க்கப் பெற்றவர். இருந்தாலும் அந்நிலை அவருக்குத் திருப்தியளிக்கவில்லை.

நாஸ்திகம் பேசித் திரிந்த முனிவர் ஒருவர் நாஸ்திகம் பேசிய குற்றம் நீங்கவும்,நல்லுணர்வு பெறவும், தமது தந்தங்களையே மலர்களாகப் பாவித்துச் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து, அப்பெருமான் திருவருளைப் பெற்றார். அவருக்குத் தெய்விக நிலை கிடைத்தது. அம் முனிவருக்குப் புஷ்பதந்தர் என்பது பெயர்.

நாஸ்திகம் என்பதை அறியாத பருவத்திலேயே திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருள் கூடப்பெற்றவர் குமரகுருபரர். அங்ஙனமிருந்தும், தமது மனம் நிறைவு உறாத வகையில், சிவனைப் போற்றாத காரணத்தால் நல்ல உணர்வுகளைப் பெறவில்லை என்கிறார்.

நல்ல உணர்வு எது? வஞ்சகம் உடைய கருமம், மாயை, ஆணவம் ஆகிய மும்மலங்களையும் வென்று, வேதத்தின் உச்சிப் பொருளாய் விளங்கும் பரசிவமே உண்மைப் பொருள் என்பதை உணர வேண்டும்.

மானதம், வாசிகம், காயிகம் என நூல்களால் வகுக்கப்பட்ட தவம் மூன்று வகைப்படும்.

மனத்தால் செய்யப்படுவது மானதம். தான தருமங்கள் செய்வதில் சிந்தனையைச் செலுத்துதல், உயிர்களிடத்தில் கருணை காட்டுதல், மற்றவர்கள் செய்கின்ற குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதல், எப்பொழுதும் உண்மையே பேசுதல், வேறு சிந்தனை எதுவும் இல்லாமல் தெய்வ சிந்தனையோடு விளங்குதல், ஐம்பொறிகளை அடக்குதல் இவையெல்லாம் மானதம் என ஆன்றோர்கள் கூறுவார்கள்.

வாக்கால் சொல்லப்படும் தவம் வாசிகம். இறைவனுடைய நாமத்தை ஜபித்தல், வேதங்களில் சொல்லப்பட்ட மந்திராதி தோத்திரங்களை எப்போதும் உச்சரித்தல், பெரும் புண்ணியமான காரியங்களைக் குற்றம் குறைஇல்லாமல் எடுத்துக் கூறுதல் ஆகியவற்றை வாசிகம் என்பார்கள்.

தேகத்தால் செய்யப்படுவது காயிக தவம். பூஜைசெய்தல், ஆலயப் பிரதக்ஷிணம் செய்தல், தெய்வ சந்நிதியில் பணிந்து வணங்குதல் முதலானவற்றைக் காயிக தவம் என்று கூறுவார்கள்.

ஆக இம்மூன்று தவங்களாலும் மனத்தில் நல்ல உணர்வுகள் ஏற்படுகின்றன. இம்மூன்று தவங்களும் மிகவும்எளிமையானவை.இவற்றை எல்லாரும் கைக்கொண்டு ஒழுகலாம்.

விகற்பம், சங்கற்பம், குரோதம், மோகம், கொலை, துன்பம், அகங்காரம், நகை என்பவை மனத்தில் எழுகின்ற குற்றங்களாம். இக் குற்றங்களை ஒழித்துப் பூரணனும், புராணனும் ஆகிய இறைவனைப் போற்றுவது நல் உணர்வாகும்.

எங்கும் நிறைந்த பராபரம், விஞ்ஞானம், நிராமயம் என்றெல்லாம் நூல்கள் போற்றிப் பரவுகின்ற பரப்பிரம்மம் இறைவடிவம் ஆகும் என எண்ணுவது நல்லுணர்வாகும்.

பூதங்கள் ஐந்து, புலன்கள் ஐந்து, ஞானேந் திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு ஆக ஆன்ம தத்து வங்கள் இருபத்து நான்கு என உணர்வது நல்லுணர்வு.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புரு ஷன், மாயை என வித்யா தத்துவம் ஏழு என உணரும் உணர்வு நல்லுணர்வு.

சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சக்தி, சிவம் எனச் சிவ தத்துவம் ஐந்து என உண ரும் உணர்வு நல்லுணர்வு.

நித்ய நைமித்திய கருமங்களை ஈசுவர அர்ப் பணமாகச் செய்வதால் கிடைக்கும் பேருகிய சித்தசுத்தி அடைவது நல்லுணர்வு. காமிகம் முதலான சிவாகமங்கள் கூறுவது அபர ஞானம். பரம் அபரம் என்னும் இருவகை ஞானங்களையும் உணரும்உணர்வு நல்லுணர்வு.

இன்ன அடையாளம் உடையவன் இறை வன், இன்ன குணங்களை உடையவன் கடவுள் என்று சுட்டிக் கூறுகின்ற இலக்கணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன் இறைவன். அவ னுடைய நாமம் என்னும் கொடுவாளைக் கொண்டு பொறிகள், கரணங்கள் எனச் சொல் லக்கூடிய காடுகளை வெட்டி எறிந்து அழிக்க வேண்டும். அவ்வாறு அழித்து மனமாகிய நிலத்தைப் பண்படுத்த வேண்டும். பண்படுத் திச் சுத்தம் செய்து, பரிபூர்ணம் என்னும் விதையை விதைக்கவேண்டும். பசுபோதம் என்ற களையைப் பறித்து எறிய வேண்டும். அருள் என்னும் நல்ல நீரைப் பாய்ச்சவேண் டும். ஞான வடிவமாக விளைந்துள்ள ஒப்பற்ற பரானந்த அமுதம் இறைவன். அவ்இறைவனை உள்ளத்துக்குள்ளே உணரவேண்டும். அவ் வாறு உணரும் உணர்வு நல்லுணர்வாகும்.

நான் யார்? என் உள்ளம் எத்தகையது? என்று ஆத்மப் பரிசோதனைக்கு இவ்வுணர்வு கள் பெரிதும் உதவுவன ஆகும்.

" என்பரவாமை " என்னும் தொடர், என்பு+அரவு+ஆமை எனவும், என்+பர வாமை எனவும் இரண்டு விதமாகப் பிரிக்கப் பட்டு இரண்டு விதப் பொருள் தருமாறு அமைந்துள்ளது.

" விரும்பு பாடலும் மாகவி மானமே
மேவுமானமும் மாகவி மானமே "

என்பது அப்பாடலின் அடுத்த அடி.

விரும்பு பாடலும் மாகவி மானமே—என்பதன் பொருள்: சிவபெருமான் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுகின்ற பாடல்கள், மானம் (பெருமை) நிறைந்த தெய்வ மாக்கவிகள் ஆகும்.

" மானம் மாகவி "— பெருமை பொருந்திய தெய்வாம்சம் நிறைந்த பாடல்கள் ஆகும். அருள் வள்ளல்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடி யருளிய தேவாரப்பாடல்கள் தெய்வத்தன்மை பொருந்தியவை, நிரம்பியவை. இப்பெருமக் கள் அனைவரும் பாசபந்தங்களிலிருந்து விடு பட்டவர்கள் ஆவார்கள். நான்கு மறைகளிலும் சொல்லப்பட்ட அளப்பரிய உண்மைகளைத் தங்களுடைய அனுபவத்திலே கொண்டு இவர் கள் தேவாரப் பாடல்களைப் பாடியருளினர். ஞானவாணி என்னும் ஞானம்பிகை இவர்களு டைய திருநாவிலே வீற்றிருந்தருளி உதவினள். மற்றவர்களைப் போல, கால வெள்ளத்திலே அடித்துக்கொண்டு போகப்படும் மிதவை இலக்கியங்களை (Floating Literature) இவர் கள் பாடினர்களல்லர். தமிழ் மறையால் இறைவனைத் துதி செய்து பாடினர்கள். சிவனே பரம்பொருள்; அவன் திருவடி நிழலை அடைவதே பரமுக்தி என்னும் தங்கள் அனுப வத்தை இவர்கள் பாடினர்கள்.

கரும்பில் இருந்து சக்கையையெல்லாம் நீக்கி விட்டுச் சாற்றைக் காய்ச்சி எடுத்த கற்கண் டைப் போல, அளவு இல்லாத நான்கு மறை களிலும் பொதிந்துள்ள மாட்சிமைப்படுகிற பொருள்கள் அனைத்தையும் நன்ருகத் தெரிந் தெடுத்து, கொன்றை வேய்ந்த சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் இடங்கள் தோறும், அப்பெருமானுக்கு உகந்த தமிழ்ப் பாமாலை யாகச் சிவமணம் கமழுமாறு பாடினர்கள்.

எனவே, இவ்வடியார்களின் பாடல்கள் சிவ பெருமானல் பேருவப்புடன் ஏற்றுக்கொள்ளப் பட்டன. ஆகவே இவை பெருமை பொருந் திய பாடல்கள் எனச் சொல்லப்படுகின்றன.

தேவாரம் பாடிய பெருமக்கள் மூவரும், வாதவூரடிகளும் இறைவனை நேருக்கு நேராகக் காணும் பெரும்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் தத்தம் செய்து ஆசார்யன் முன்னிலையில் அடங்கி நிற்கும் திருவுடைய மாணுக்கனைப் போல, அகம் பிரம்மம் என்கின்ற அமலநாதனைத் தன்னுள்ளே கண்டு அடக்கம் பெற்றவர்கள். உடலையும் மனத்தையும் மறந்தவர்கள். மனம் இந்திரியங்களில் இந்திரியார்த்தங்களில் செல்லுதலை ஒழித்தவர்கள்.

அநித்தியப்பொருள் என்னும் அழிகின்ற பொருளைப் போற்றிப் பாடாமல், தோற்றம், வளர்ச்சி, முடிவு என்பவை இல்லாத நித்தியப் பொருளான அழியாப் பொருளைப் பாடுவதே உண்மைப் பாடல்; பெருமை பொருந்திய பாடல். இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பயக்கும் பாடல்களே பெருமை பொருந்திய பாடல்கள். இகவாழ்வுக்கும் பரவாழ்வுக்கும் ஏற்றம் தரும் பாடல்களே பெருமை பொருந்திய பாடல்கள்.

இத்தகைய அருள் வாக்குகளை வாரி வழங்கிய இந்த ஞான வள்ளல்களின் திருப்பாடல்கள் பெருமை பொருந்தியன ஆகும்.

"மேவுமானமும் மாக விமானமே"—சிவபெருமான் மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் விமானமும், தேவலோகத்தில் இருந்து இறங்கி அமைந்த விமானம் ஆகும்.

தேவேந்திரன் தனது சபையில் அமர்ந்திருந்தான், அச்சமயம் அவனுடைய ஆச்சார்யராகிய பிரகஸ்பதி சபைக்கு வந்தார். தன் குருவை இந்திரன் வரவேற்று உபசரிக்கவில்லை. குருவை மதிக்காத காரணத்தால் இந்திரனுடைய சிறப்புக் குறைந்தது. பிரகஸ்பதியைத் தேடிப் பரிகாரம் அடைய முயன்றும் இந்திரனால் இயலவில்லை. சத்தியலோகம் சென்று பிரம்ம தேவனிடம் நடந்த நிகழ்ச்சியைக் கூறினன். குலகுரு பிரகஸ்பதியைக்கண்டு வணங்கும் வரை, துவஷ்டா என்பவனின் மகனும், அசுரகுலத்தில் பிறந்தவனும் ஆகிய விஸ்வரூபன் என்பவனை ஆச்சாரியனுக வைத்துக் கொள்க என்று பிரம்ம தேவன் ஆலோசனை கூறினன். அங்ஙனமே விஸ்வரூபனைக் குருவாக ஏற்று இந்திரன் யாகம் ஒன்றைச் செய்யுமாறு அசுரகுல விஸ்வரூபனை வேண்டினன். தேவர்களுக்குத் தீமையும், அசுரர்களுக்கு நன்மையும் உண்டாகும்படி விஸ்வரூபன் யாகம் செய்து வருவதை இந்திரன் புரிந்துகொண்டு விஸ்வரூபனைச் சிரச்சேதம் செய்து விட்டான்.

இந்திரன் தன் குரு பிரகஸ்பதியைப் போற்ருத குற்றம், அசுரன் விஸ்வரூபனைக் கொன்ற குற்றம் ஆகிய இரண்டு குற்றங்களும் நீங்கும்படி, கடம்ப வனத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்தத்தைப் பிரார்த்தனை செய்தான். பொற்ருமரை மலர்களால் அர்ச்சனை செய்தான். சிவலிங்கம் மீது பரிதியின் கிரணங்கள் படுவதை உணர்ந்து மனம் பரிதவித்தான். சந்திரனைக் குடையாக ஆக்கி நிழல் உண்டாக்க நினைத்தான். அச்சமயம் ஆகாயத்திலிருந்து ஓர் இரத்தின மயமான விமானம் வந்து இறங்கியது.

அஷ்டகுல பர்வதங்கள் என்று சொல்லும்படியான அஷ்டதிக் கஜங்கள், முப்பத்திரண்டு சிங்கங்கள், அறுபத்து நான்கு சிவகணங்கள் ஆகியவை தாங்கும் படியான விமானம் அது. தேவதச்சன் மயன் நிர்மாணம்செய்துகொடுத்த அந்த விமானத்தைத் தேவேந்திரன் கொடுக்க சிவபெருமானும் ஏற்றுக்கொண்டார்.

தேவேந்திரன் பக்தியை உவப்பாய் ஏற்றுக்கொண்டார் சிவபெருமான். வேனிற்காலத்தில், சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம், பௌர்ணமி திதி அன்று என்னை இங்கு வந்து அர்ச்சனை செய்தால், வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் வழிபட்ட பலன் கிடைக்கும் என அருளிச் செய்தார்.

இன்றும் மதுரையில் சித்ராபௌர்ணமி மிகவும் விசேஷ தினமாகும்.

சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் விமானம் விண்ணில் இருந்து இறங்கிய விமானம் எனக் குமரகுருபரர் கூறுவதை இப்புராணக் கதையின்மூலம் அறியலாம்.

"மாகவிமானமே" என்னும் தொடர் மா+கவி+மானம் எனவும், மாக+விமானம் எனவும் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டு இரு பொருள் தருகிறது.

> **திருந்து தானம் தடமதில் கூடலே**
> **செயற்கை வெள்ளித் தடமதில் கூடலே"**

என்பது பாடலின் இறுதி அடி.

பகவத்கீதையும் காந்தியடிகளும்

[சுவாமி துருவானந்தர்]

ஒருவர் தம் நோய்வாய்ப்பட்ட குழந்தையைத் தூக்கிக்கொண்டு வைத்தியரிடம் போனார். குழந்தையை மருத்துவரிடம் காட்டி நோய் குணமாக மருந்து தரும்படி கேட்டார். அனைத்தையும் கேட்ட மருத்துவர் சிறிது யோசித்துவிட்டுக் குழந்தையை அடுத்த நாள் காலை மீண்டும் கொண்டுவாருங்கள் என்றார். அதே போன்று அடுத்த நாள் காலை மீண்டும் வைத்தியரிடம் தம் குழந்தையை எடுத்துச் சென்றார். அப்போது வைத்தியர் குழந்தைக்குச் சர்க்கரையையும், சர்க்கரையால் செய்யப்பட்டபொருள்களையும் தரவேண்டாம் என்று ஆலோசனை கூறினார். அதற்கு அம்மனிதர், 'இவ்வளவுதானா! நேற்றே இந்தச்சிறியவிஷயத்தைச் சொல்லியிருக்கலாமே, சொல்லியிருந்தால் மீண்டும் இவ்வளவுதூரம் வந்து இவ்வளவு நேரத்தை வீணடித்திருக்க வேண்டியதில்லையே' என்றார். அதற்கு அந்த மருத்துவர் சொன்னதாவது: "நான் நேற்றே சொல்லியிருக்கலாம் என்பது வாஸ்தவம்தான். ஆனால் நேற்று என் மேஜையின் மீது சர்க்கரை இருந்தது. குழந்தை சர்க்கரையைச் சாப்பிடக்கூடாது என்று நேற்று சொல்லியிருந்தால் அந்தக் குழந்தை என்ன நினைத்திருக்கும்? இந்த வைத்தியர் போலி வைத்தியர். சர்க்கரையைச் சாப்பிடக்கூடாது என்று சொல்லுகிறார். ஆனால் அவர் மட்டும் சர்க்கரை சாப்பிடலாம் போலிருக்கிறது! என்று என்னைத் தவறாக நினைத்திருக்கக்கூடும். ஆகவே அக்குழந்தைக்கு முன்மாதிரியாக இருக்கவே இன்றுவரச் சொன்னேன்" என்றார் மருத்துவர்.

இக்காலத்தில் நாம் எங்கும் காணுகிற போராட்டங்களுக்கும், மனக் கசப்புக்களுக்கும் சரியான காரணம் என்ன என்று ஆராய்ந்தால் மேலான ஸ்தானம் வகிக்கும் அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் தகுதியான நிலையில் இல்லாததேயாம். அவர்கள் பிறர்க்குப் புகட்டிவிட்டுத் தாம் மட்டும் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிக்காது தங்கள் மனம் போன போக்கில் போவதால் மற்றவர்களுக்கு அவர்கள்மீது ஒருவித வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது. அவர்களின் போலி முகமூடியைக் கிழித்தெறிந்து சமுதாயத்தில் அவர்களின் போலித்தனத்தைச் சிலர் பிரச்சாரம் செய்கின்றனர்.

அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். குளித்துவிட்டுக் கடவுள் வழிபாடு செய்ய வேண்டும். பின் பாடங்களைப் படிக்கவேண்டும் என்று தன் குழந்தைக்கு உபதேசிக்கும் தந்தை சூரிய உதயம் வரையில் தூங்கினால் குழந்தை மனத்தில் அவர் கூறிய அறிவுரை எங்ஙனம் பதியும்?

பெண் என்றால் பெட்டிப் பாம்பு போன்று இராமல் பம்பரமாக வீட்டுவேலைகளைத் தானே செய்து, தேனீ போன்று சுறுசுறுப்பாக உழைத்து, ஆண்களிடமிருந்து எட்ட ஒதுங்கி நின்று அடக்கமும் பணிவும் உள்ள மாதரசியாகத் தன் கணவன் வீட்டில்போய் நற்பெயர் எடுக்க வேண்டும் என்று தன் மகளுக்குச் சதா போதனை புகட்டும் தாய், தான் மட்டும் சோம்பலுக்கு இருப்பிடமாய், தான் ஆரோக்கியமாயிருந்தும் தன் வீட்டு வேலைகளைச் செய்ய வேலைக்காரர், வேலைக்காரிகளை வைத்துக் கொண்டும், வீண் வம்பளந்து, சினிமாப் பேச்சுக்கள் பேசி சுகஜீவனம் செய்துகொண்டு வருவாளானால் அவள் தன் மகளுக்குச் சரியான முன் மாதிரியாக அமைய முடியுமா?

வகுப்புக்குத் தாமதமாக வரும் மாணுக்கர்களுக்கு Punctuality என்ற ஒழுங்குப்பாட்டைப் புகட்டியும், சிகரெட் பிடிக்கக்கூடாது என்றும், சினிமாவுக்குப்போய் நல்ல மனதைக் காம வாசனையால் நிரப்பிக் கெடுத்துவிடக்கூடாது என்றும், பெரியவர்களிடம் பணிவாகவும் கீழ்ப்படிந்தும் நடக்கவேண்டும் என்றும், உண்மையே பேசும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்களாயிருக்கவேண்டும் என்றும் மாணவர்களுக்குப் புகட்டும் ஆசிரியர்கள் வகுப்புக்கு நாள்தோறும் காலதாமதமாகவும், பள்ளியை விட்டு வெளியேவந்த பிறகு ரோட்டில்போகும்போது புகைபிடிப்பவராகவும், தாம் பார்த்த சினிமாவுக்கு வகுப்பறையில் விமரிசனம் கொடுப்பவராகவும், சினிமாபத்திரிகை,

நாவல்பத்திரிகையைத் தம் வீட்டில் வாங்கிப் படிப்பவராகவும் இருந்தால் அவர்கள் மாண வர்கள் மத்தியில் சிறந்த முன் மாதிரியாகத் திகழ முடியுமா? அல்லது மாணவர்கள் தாம் இவர்களைத் தெய்வமாகப் போற்றுவார்களா?

அலுவலகத்துக்கு ஒன்பது மணிக்கு வர வேண்டும் என்ற சட்டமிருந்தும், உயரதிகாரி களாக இருப்பவர்கள் வேண்டுமென்றே கால தாமதமாக வந்தால் அவர்களுக்குக் கீழ் வேலை செய்பவர்கள் தம் போக்கில் எவ்வளவு கீழ் நிலையில் இருக்கவேண்டுமோ அவ்வளவு கீழ் நிலையில்தான் இருப்பார்கள்.

அரசியல் மேடைகளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை வெகுவாகப் பேசும் தொண் டர்கள் தாங்கள் அப்பண்புகளைக் கடைப்பிடிப் பதில் முன் மாதிரியாக வாழ்ந்து பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும். கீழான இயல்பை விட்டுவிட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்க்கையின் இலட்சிய மாகக்கொண்டிருப்பவர்கள் மட்டுமே நாட்டுக் குச் சரியான முன் மாதிரியாகத் திகழமுடியும்.

தக்ஷிணாமூர்த்தி தம்மை நாடிவந்த நான்கு ரிஷிகளுக்கு மோன நிலையைப் புகட்டத்தாமே மௌனமுற்று முன்மாதிரியாயிருந்தார். "பிறர் கேட்கவே போதிப்பதல்லாது சும்மாயிருந் தருள் பொருந்திடாப்பேதை நானே" என்று தாயுமானவர் பகர்கிறார். பலர் அதிகம் பேசு வார்கள், உயர்ந்த விஷயங்களைப்பற்றி உள் ளத்தைத் தொடுமளவிற்கு அழகொழுக அலங் காரமாகப்பேசுவார்கள். ஆனால் அவர்கள் மனம் காமகாஞ்சனத்தில்தான் உழலும். அவர்களை ராமகிருஷ்ணபரமஹம்சர்ஆகாயத்தில்பறக்கும் கழுகுகளோடு ஒப்பிடுகிறார். அவைகள் ஆகாயத் தில் வெகு உயரத்தில் பறக்கும். ஆனால் அவற் றின் பார்வை கீழேஎங்கே அழுகிய பிணங்கள் கிடக்கும் என்ற நாட்டத்தில் இருக்கும். நல்ல தைப் புகட்ட விரும்புகின்றவர் தாமே நலனில் நிலைபெற்றிருக்கவேண்டும். Empty vessel makes much noise என்ற பழமொழி ஒன்று உண்டு.குறைகுடம் ஓசையிடும்.சரக்கு இல்லாத வர்கள்தாம் சளசளவெனப் பேசிக்கொண்டே இருப்பர். ஆனால் மௌனமுற்று நற்பண்பு களைக் கடைப்பிடிக்கிறவர்களைக் கண்டாலே மற்றவர்கள் உள்ளத்திலும் அவர்கள் பண்பு ஒரு பதிவை உண்டு பண்ணிவிடும். உயர்ந்த விஷயங்களைப் பேசுவதும் மேலான விஷயங் களைச் செய்திகளாக வெளியிடுவதும் மட்டும் சாதனமாகாது. நற்பண்பை வளர்த்துநல்லவ ரானால்தான் நாடுபோற்றும்நன் மக்கள் ஆகமுடி யும். ஆகவே கிருஷ்ண பரமாத்மா கீதையில்,

यद्यदाचरति श्रेष्ठ तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

என்கிறார். அதன்பொருள்:

"மேலோன் எதனைச் செய்கிறானோ அதையே மற்ற மனிதர் பின்பற்றுகின்றனர். அவன் எதைப் பிரமாணமாக்குகிறானோ அதையே உலகம் அனுசரிக்கிறது" என்பதாகும்.

பலரும் மதித்துப் போற்றும் தியாகத்தை எல்லா மதத்தினரும், எல்லா நாட்டினரும் விரும்பிப்போற்றுகின்றனர்.தங்களால் கடைப் பிடிக்கமுடியாத ஒன்றை மற்றொருவன் கடைப் பிடித்தால் அவனைப் பெருமைப்படுத்துவதும் போற்றுவதும் நாம் எங்கும் காணும் நிகழ்ச்சி யன்றோ! மகாத்மா காந்தியடிகள் சிறுவனாக இருந்தபொழுது ஹரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார்.உண்மைக்காக ஹரிச்சந்திரன் பட்ட கஷ்டத்தைக் கண்டார். அது போன்று தாமும் சத்தியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும், அதன் பொருட்டு வருகிற எந்தக் கஷ்டத்தையும் சகித்துக்கொள்ளவேண்டும் என்று உறுதி யாகத் தீர்மானித்தார். சத்தியத்தைக் கடைப் பிடிக்கும்பொழுது அவர் பட்ட கஷ்டம் கொஞ் சமா நஞ்சமா? சத்தியவானான அவருக்கு முன் மாதிரியாயிருந்தவன் ஹரிச்சந்திரன். ஹரிச்சந் திரனின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதால் அகில உலகமும் அண்ணலின் சத்திய விரதத் தைக்கண்டு வியந்தது. அவர் அடிச் சுவட் டைப் பின்பற்றத் தொடங்கியது. நம் நாட் டிலே செய்யப்பட்ட பொருள்களைத்தான் வாங்கவேண்டும், அன்னிய நாட்டுத்துணி களைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்ற இயக் கத்தை மகாத்மா கொண்டுவந்தார். அவ்வியக் கம் நாடுமுழுவதும் பரவியது. தானே நூல் நூற்று, அந்நூலால் நெய்த துணிகளையே மகாத்மா உடுத்தினர். அவருடைய வழியைப் பின்பற்றி ஏராளமானபேர் தாங்களே ராட் டையில் நூல் நூற்று அந்நூலால் நெய்த உடைகளையே தாங்கள் உடுத்தினர். ஒரு

இயக்கத்தை ஆரம்பிக்கும்பொழுது மகாத்மா காந்தியடிகள் அதை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்று அறைகூவமாட்டார். தாமே அங்ஙனம் வாழ்ந்தார். அவர் வாழ்வு இருளில் தத்தளித்த மாந்தருக்கு ஒளி கிடைத்தது போலாயிற்று. காந்தத்தால் கவரப்பட்ட இரும்புபோன்று ஒவ்வொருவரும் தங்களையறியாது மகாத்மா காந்தியின் வழியில் நடக்க முயன்றனர். 'எம் வாழ்வே எம் செய்தி' என்று விளம்பரமில்லாது தம் வாழ்வை விளக்கிக் காட்டிய சத்தியவேந்தராவார் காந்தியடிகள்.

வட நாட்டிலே மகாத்மா காந்தியடிகள் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தபொழுது ஒரு கிராமத்திலே அவர் தங்கவேண்டி வந்தது. அந்தக் கிராமத்தினருகில் ஓர் ஏரி இருந்தது. அந்த ஏரியின் நீரை அவ்வூர் மக்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தி வந்தனர். அந்த நன்னீர் உள்ள குளக்கரையில் கிராமத்தினர் சிலர் சென்று பிறர்க்குத் தெரியாது மலஜலம் கழித்து அசுத்தப்படுத்தினர். இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்தது. கிராமத்திலுள்ள அதிகாரிகள், ஊர்மக்கள் சொல்லியும் இந்தப் பொருந்தாத செயலைச் சிலர் வேண்டுமென்றே செய்து வந்தனர். தங்களின் முயற்சி பலனளிக்காது போனதை அறிந்த அக்கிராம வாசிகள் மகாத்மாகாந்தி அக்கிராமத்திற்கு வந்தபொழுது அவரிடம் அதைக் கூறினர். மறுமொழி பகராத மகாத்மாகாந்தி மறுநாள் காலை அவர்களை மீண்டும் சந்திப்பதாகச் சொல்லி அனுப்பிவிட்டார். வழக்கம்போன்று குளக்கரையில் விடிவதற்குள் சிலர் மலம் ஜலம் கழிக்க வந்துகொண்டிருந்தனர். யாரோ ஒருவர் கையில் விளக்கை வைத்துக்கொண்டு தரையில் கிடந்த மலத்தை ஒரு தகரத்தால் வாரிஎடுத்து அருகில் இருந்த பெரிய தகரடின்னில் கொட்டிக்கொண்டிருந்ததைச் சிலர் பார்த்தனர். என்றைக்குமே இல்லாத இச்செயலை இந்நேரத்தில் செய்வது யார் என்று நெருங்கிப் பார்த்தபொழுது மகாத்மா காந்தியடிகள்தாம் அந்தத் தோட்டித் தொழிலைச் செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்டு கொண்ட அந்தக் குறும்புக்காரர்கள் அவரை அச்செயலில் ஈடுபடவேண்டாம் எனக் கெஞ்சினர். "நீங்கள் இனிமேல் இந்த ஊருக்குப் பயன்படும் குளத்தைக் கெடுக்க மாட்டோம் என்று உறுதிகொடுத்தால்தான் நான் மேற்கொண்டு செய்யமாட்டேன்" என்று விடையிறுத்தார். காந்தியடிகளிடம் இனிமேல் இது போன்று தாங்கள் நடப்பதில்லை என்று அவ்வூர் மக்கள் உறுதி அளித்தனர். அன்று முதல் அக்குளமும், குளக்கரையும் சுத்தமாகக் காட்சியளித்தன.

தவறுகள் பல புரிந்தும் தம்மைத் திருத்தியமைத்தவர் காந்தியடிகள். நம்மில் பலர் ஒரே தவற்றைத் திரும்பத் திரும்பச் செய்கிறோம். அப்பழக்கத்திற்கு ஆளான பிறகு அதை என்னால் விட முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறோம். தவறு என்று தெரிந்தவுடன் அதை இனிமேல் வர விடாது தடுக்க என்ன முயற்சி எடுக்க வேண்டுமோ அதைச் செய்வதில்லை. நாம் தவறுதல் செய்தால் மட்டும் அலட்சியமாக மன்னித்து மறந்து விடுகிறோம். ஆனால் அடுத்தவர் இது போன்று தவறுகள் செய்கிறபொழுது அவரைப் பற்றித் தூற்றுகிறோம்; வெறுக்கிறோம். காந்தியடிகள் ஆரம்பத்தில் தம்மிடம் கண்ட தவறுகளை நீக்கப் பெரும்பாடு பட்டார். அன்றாடம் நாட்குறிப்பில் வெட்கப்படாது தம் தவற்றைக் குறித்து வைத்து நீக்க முயற்சி பண்ணினார். நீக்க முடியாது, மனதை அடக்க முடியாது போனபொழுதெல்லாம் உபவாசம் இருந்தும், கண்ணீர் விட்டுப் பிரார்த்தனை செய்தும், அழிக்கமுடியாத கீழான சம்ஸ்காரங்களை அழித்து, அட்டைபோன்று ஒட்டிக்கொண்டிருந்த கீழான பலஹீனங்கள், மட்டமான பழக்க வழக்கங்களை வென்றார். அதோடு நல்ல குணவான் ஆகவேண்டும் என்ற நோக்கத்தோடு நல்ல பண்புகளுக்கே மனதில் இடம் கொடுத்து மகாத்மா ஆனார். ஒவ்வொருவரும் தங்கள் மனதிலுள்ள கேடுகளை ஒழிக்கவேண்டும். ஒழுக்கத்தினாலும், அப்பியாசத்தினாலும் மனதில் நல்ல சம்ஸ்காரங்களை ஏற்படுத்த வேண்டும். நம்மை நல்லவர்களாக ஆக்கிக்கொள்வதற்கே வாழ்க்கை அமைந்திருக்கிறது. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு முயலவேண்டும். காந்தியடிகளுடைய முயற்சியும் உழைப்பும் நமக்குச் சிறந்த முன்மாதிரி ஆகும்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

12. சேற்றுமீனும் உலகில் வாழும் பக்தனும்:

உலகில் வாழும் உயிரினங்களைத் தாவரங்கள் என்றும் ஜங்கமங்கள் என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். விலங்குகள் ஜங்கம இனத்தைச் சேர்ந்தவை. விலங்குகளை முதுகெலும்பு உள்ளவை [Vertebrates] முதுகெலும்புஅற்றவை [Invertebrates] என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதுகெலும்புள்ள விலங்குகளை நீர்வாழ்வன [Pisces], நீர் நில வாழ்வன [Amphibians], ஊர்வன [Reptiles] பறப்பன [Aves], பாலூட்டிகள் [Mammals] எனப் பிரிக்கலாம். நீர் வாழ்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு மீன் ஆகும். நீரைக் கிழித்துச்செல்லப் படகு போன்ற உடல் அமைப்பைப் பெற்றிருப்பதும், துடுப்புக்களைப் பெற்றிருப்பதும், உடலெங்கும் செதில்களைப் பெற்றிருப்பதும், வழவழப்பான தோலைப் பெற்றிருப்பதும் மீனின் சில சிறப்புப் பண்புகளாம்.

மீனின் தோலில் சுரப்பிகள் [glands] உள்ளன. இவை எண்ணெய்போன்ற பொருளைச் சுரக்கின்றன. இதனால்தான் மீனின் உடல் மீது சேறு ஒட்டுவதில்லை. மீனின் தோலிலிருந்து சுரக்கும் எண்ணெய் போன்ற பொருளால் சேறு அதன் மீதுபடியாதது போன்று மனிதனுடைய உள்ளத்திலிருந்து பக்தி பெருக்கெடுத்தால் உலகப்பற்று என்ற சேறு அவன் உள்ளத்தில் ஒட்டுவதில்லை. உலகப்பற்று என்னும் சேறு மனிதனது உள்ளத்தில் தோயாமல் பக்தி காப்பாற்றுகிறது.

பிறப்பெடுத்த நாம் அனைவரும் உலகில் வாழ்ந்திருக்கக் கடமைப்பட்டவர்கள். உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், நமக்கேற்பட்டுள்ள கடமைகளைச் செய்துகொண்டிருப்பதற்கிடையில் நம் மனத்தைச் சதா கடவுள் பால் வைப்பதன் மூலம் பக்தியைப் பெருக்கலாம். பக்தி இல்லாத வாழ்க்கை நதிப்பிரவாகத்தில் சுழலில் அகப்பட்ட படகுக்கு நிகர். சுழலில் அகப்பட்டுக்கொண்ட படகில் உள்ள மனிதர்கள் எவ்வாறு தப்பிக்க முடியாதோ அவ்வாறு உலகப்பற்று என்ற சுழலில் அகப்பட்ட மனிதர்களும் துயரங்களில் இருந்து தப்புவதில்லை. ஆகவே உலகப்பற்றை ஒழிக்கப் பக்தியை உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்ய நாம் முயலவேண்டும். கையில் எண்ணெயைப் பூசிக்கொண்டு பலாப்பழத்தை அறுப்பவனுக்கு எவ்வாறு பலாப்பிசின் ஒட்டிக்கொள்வதில்லையோ அதுபோன்று பக்தியுடன் உலகக் காரியங்களில் ஈடுபட்டால் உலகப்பற்று உள்ளத்தில் ஒட்டுவதில்லை எனப் பரமஹம்சர் அருளியதிலிருந்து, பக்தி உலகப்பற்றை ஒழிக்க வல்லதொரு சிறந்த ஆயுதம் என்பது தெளிவு. அப்பக்தியானது உள்ளத்தில் ஊற்றெடுக்க உள்ளம் நல்லெண்ணங்களால் நிரப்பப்படவேண்டும். ஆனல் நம் உள்ளம் எந்த நிலையில் இருக்கிறது? ஒரு ஜல்லடை நல்ல பொருட்களையெல்லாம் நழுவ விட்டுவிட்டுப் பயன்படாத பொருட்களையெல்லாம் தன்னுள் வைத்துக் கொள்வதைப் போல நாம் நம் மனதில் நல்ல எண்ணங்களை நிலைத்திருக்கச் செய்யாமல் நழுவ விட்டுவிட்டுப் புல்லிய எண்ணங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறோம். இத்தகைய கீழான எண்ணங்கள் நிறைந்த உள்ளத்தில் நல்லெண்ணங்களை நிறையச் சேர்ப்பதன் மூலம் புல்லிய எண்ணங்களின் வேகமும் வலிவும் குறைக்கப்படுகின்றன. அப்போது அங்கு பக்தி பெருக்கெடுக்கும்: உலகப்பற்று அகலும்போது பற்றற்றான் மீது பற்று வளரும். இத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது பக்தி ஆகும். "பயனுண்டு பக்தியினலே" எனப்பாரதி கூறியாங்கு பக்தியினல் உலகப்பற்று நம் உள்ளத்தில் படியாது.

சேற்று நீரில் வசிக்கும் மீனின் தோலிலிருந்து சுரக்கும் ஒருவித எண்ணெய் போன்ற பொருள் சேற்றை மீனின் மீது ஒட்டாமல் காப்பது போன்று நம் உள்ளத்திலிருந்து பெருக்கெடுக்கும் பக்தி உலகப்பற்றை நம் உள்ளத்தில் ஒட்டாமல் காக்கும்.

"மீன் சேற்று நீரில் இருந்தாலும் அதன்மீது சேறு படிவதில்லை. மனிதன் உலகில் வாழ்ந்திருந்தாலும் அவன் உள்ளத்தில் உலகப்பற்று தோய்ந்துவிடலாகாது." — ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

அமரநாத யாத்திரை

(160ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

அமரநாதம் செல்லும் வழியில் பல இடங்களில் தண்ணீருக்குமேல் பனிப் பாறைகள் உறைந்து கிடப்பதையும் அடியில் தண்ணீர் குகைப் பாதைக்குள் செல்வதையும் காணலாம். இரண்டு இடங்களில் தண்ணீர் அடியில் ஓடிக்கொண்டிருக்க மேலே உள்ள பனிப்பாறைகள் மேல் நதியைக் குறுக்கே கடந்துசெல்கிறோம். சில இடங்களில் அந்தச் குறுகிய பாதையும் மலை சரிவதனால் மூடிவிடுகின்றது. அந்த இடங்களில் சரிவிலேயே ஜாக்கிரதையாக நடக்க வேண்டியுள்ளது.

பஞ்சதரணியிலிருந்து இரண்டுமைல் தூரம் ஏற்றமாக உள்ளது. சந்த்சிங் டாப் என்பது உச்சியின் பெயர். அது 13,500 அடி உயரத்தில் உள்ளது. அந்த இடத்தில் அமரநாதம் செல்வதற்கு ஸ்ரீ நகரிலிருந்து ஒரு குறுக்கு வழி வந்து சந்திக்கிறது. ஸ்ரீ நகரிலிருந்து இவ்வழி பஸ் மூலம் க்ஷீர்பவானி தாண்டி பால்தால் என்னும் இடம் வரை பஸ்ஸில் வந்து மீண்டும் கால் நடையாக பன்னிரண்டு மைல்கள் வந்தால் இந்த இடத்தை அடையமுடியும்.

இந்த வழியில் குதிரை, தண்டி போன்ற வசதிகள் இல்லை. பாதையும் அதிக சிரமமானது. ஆகையால் இந்த வழியில் யாத்ரீகர்கள் வருவதில்லை.

இங்கிருந்து இறக்கமாக அமரநாதர் குகை வரை வழி செல்கிறது. கோயிலுக்குச் சுமார் ஒரு மைல் முன்னால் ஹெலிகாப்டர் இறங்குவதற்கான இடம் உள்ளது. இடையிடையே சீதோஷ்ண நிலையைச் சர்வே செய்வதற்கு வந்து போவதாகச் சொல்கிறார்கள்.

அமரகங்கா நதி ஓரமாகவே சென்று குகையை நெருங்குகிறோம். பஞ்சடைந்த கண்களுக்கு, பனிமூடிய அந்தப் பரமனின் குகை தெரியவில்லை. "எங்கே, எங்கே குகை?" என்று எதிர்க்குரல் கொடுக்கிறோம். "அதோ!" என்று சுட்டிக் காட்டுகிறார். அவ்வளவுதான்! காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்பாக மாறி விடுகிறோம். மனம் அமரநாதனை நோக்கி இழுக்கப்பட, பூதவுடல் பூமியை நோக்கிச் சாய்ந்து தள்ளாட, அடி அடியாக முன்னேறுகிறோம். இதோ அமர கங்கையைத் தரிசிக்கிறோம், ஸ்பர்சிக்கிறோம். குகைக்கு முன்னால் அமரகங்கா நதி ஓடிக்கொண்டிருக்கிறது. குகைக்கு ஒருபர்லாங் தூரத்திலேயே குதிரையை நிறுத்தி இறக்கிவிடுகிறார்கள். அங்கிருந்து குகைப் பக்கம் வரை பல சிறு கடைகள் உள்ளன. அங்குப் பூஜைக்குத் தேவையான கற்பூரம், ஊதுபத்தி, உலர்ந்த பழவகைகள் விற்கப்படுகின்றன. சிற்றுண்டிச் சாலைகள் சிலவும் உள்ளன.

எங்கள் குழுவில் சிலபேர் அமரகங்கா நதியிலிருந்து நீரைப் பாத்திரத்தில் எடுத்து ஊற்றிக்கொண்டு குளித்தார்கள். உடல் சில்லிட்டு இரத்த ஓட்டம் நிற்பது போல் தோன்றுகிறது. உடனே உடலை நன்கு தேய்த்துக் கொடுத்தால் புதிய உற்சாகம் உண்டாகிறது. இவ்வாறு ஒருவழியாக ஸ்நானம் செய்து குகையை நெருங்கினோம். மற்றவர்கள் தம் மேலே நீரைத் தெளித்துக்கொண்டார்கள்.

நதிக்கரையிலிருந்து குகை வாயில் வரை படிக்கட்டுகள் அமைத்திருக்கிறார்கள். குகையை நெருங்க நெருங்க அன்பர்கள், தாய்மார்கள் எழுப்பிய 'ஸ்ரீ அமரநாத் கீ ஜெய்' என்ற ஒலி சதா எழுந்து கொண்டிருக்கிறது. அதைக் கேட்கும் போது உள்ளத்தில் பேருணர்வு உண்டாகிறது. படிக்கட்டுகள் வழியாக ஏறி ஆனந்தமய கோசமாக விளங்கும் அமரநாதர் குகையை அடைகிறோம். படைத்தல்,காத்தல், கரத்தல் போன்ற காரியங்களைச் செய்யும் சங்கர மஹாதேவனாகிய மஹாகாரணத்தை நேருக்கு நேராகக் கண்டு அந்தப் பேரின்பப் பெருநிலையில் ஒன்றி நிற்கிறோம். நம் குதிரைக்காரர் முகம்மது ரம்ஜானும் கரங்களைச் சிரத்திற்கு மேல் உயர்த்திக் கண்மூடி நிற்கிறார்! அந்தப் பரவசநிலை இனம், மொழி, மதம், கல்வி, தகுதி அனைத்தையும் கடந்து நிற்பது. வாழ்வில் ஒரு தடவையாவது அந்த அனுபவத்தை அடியார்கள் பெறத்தான் அமரநாதன் அந்தக் குகையிலிருந்துகொண்டு அழைக்

கிருனே? யாரே அறிவர் அவன் திருவுள்ளக் குறிப்பை! குகையை அடைந்தோம். அன்று பௌர்ணமிக்கு முதல் நாளாக இருந்ததால் அதிகக் கூட்டம் இல்லை. எங்கள் குழுவைச் சேர்ந்த 69 பேர்களுடன் மேலும் 50 பேர்கள் தாம் இருந்தார்கள். காலை 10 மணிக்குக் குகைக்குள் சென்றோம். உயர்ந்த குகை, அகன்ற வாயில். மழை, மேகம் ஏதும் இல்லாமல் ஆகாயம் தூய்மையாக இருந்ததால் உள்ளே நன்கு வெளிச்சம் இருந்தது. காலில் அணிந்திருந்த கேன்வாஸ்ஸைக் கழற்றி விட்டுக் காலுறையுடன் மேடையை அடைந்தோம். மேடைக்குப் பக்கத்தில் செல்லச்செல்ல உள்ளங் கவர் கள்வனன ஸ்ரீ அமரநாதன் பளிங்கை உருக்கி வார்த்தாற்போலத் தூய வெண்ணிற வடிவில் ஆறு அடி உயர அளவில் வளர்ந்துள்ள பனிலிங்கமாகக் காட்சி கொடுத்தார். அக்காட்சியைக் கண்டதும் எல்லாரும், உள்ளத்தில் இதுவரை பட்ட கஷ்டங்களை யெல்லாம் மறந்தனர். மேடையின் மீதுள்ள கிராதியைக் கடந்து உள்ளே சென்று லிங்கத்தைக் கண்ணாரக் கண்டு வாயார வாழ்த்தினர். லிங்கத்திற்குப் பக்கத்தில் இரண்டு பண்டாக்கள் மட்டும் இருந்தனர்.

ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டு வந்த பழங்களைப் படைத்தனர். கற்பூரத்தைக் கொளுத்தினர். ஊதுவத்தி ஏற்றி வைத்தனர். ஆராதனை செய்து லிங்கத்தைத்தொட்டு வணங்கினர். மேலிருந்து இலேசாக நீர் சொட்டிக் கொண்டிருந்தது. கீழே சில்லென்றிருந்த ஈரம் பாதத்திலிருந்து உடல் முழுவதும் ஏறியதைச் சிறிது நேரம் வரை உணர முடியவில்லை. எல்லாரும் 'ஹர ஹர மகாதேவா' என்றும் தங்களுக்குத் தோன்றிய தோத்திரங்களைச் சொல்லியும் வழிபாடு செய்தோம்.

ஒவ்வொருவரும் தனித்தனியாக நின்று கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டோம். சுமார் அரை மணிநேரம் அங்கு வழிபாடு செய்தோம். மேடைக்கு இடப்புறம் இரண்டு சிறிய பனிலிங்கங்கள் அமைந்துள்ளன. ஐதிகப்படி இவை பார்வதி, பரமசிவம் ஆகவும், இங்கு ஆவணிப் பௌர்ணமியன்று பரமசிவன் பார்வதிக்கு மக்கள் முக்தி அடையும் மார்க்கத்தை உபதேசித்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பு கோடைக் காலத்தில் ஆடு மேய்க்கச் சென்ற இடையர்கள் நதிக்கரையில் உள்ள குகையில் இந்த லிங்கத்தைக் கண்டனர். அதனை அவர்கள் மற்றவர்களுக்குச் சொன்னார்கள். அதன் பிறகு மக்கள் சென்று வழிபட ஆரம்பித்தனர். இன்றும் அந்தக் கோயில் வருமானத்தில் ஒரு பகுதியை அந்த இடையர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்குத் தருவதாகச் சொல்லப்படுகிறது.

லிங்கத்தின் அருகில் இருந்து வழிபாடு செய்த பிறகு குகையின் முன் பகுதியில் உள்ள சிறிய மேடை மீது அனைவரும் அமர்ந்தோம். அரை மணி நேரம் ஸ்ரீ சங்கரர் அருளிய லிங்காஷ்டகம், ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய சிவ புராணம் ஆகியவற்றைப் பாராயணம் பண்ணினோம். சிவனுக்குரிய நாமங்களைக் கூறி அர்ச்சனை செய்தோம். பத்து நிமிட தியானத்துடன் வழிபாட்டை முடித்தோம்.

ஒவ்வொருவரும் அமர கங்கா தீர்த்தம் எடுத்துக்கொண்டார்கள். ஆண்டவனுக்குப் படைத்த பிரசாதத்தை விநியோகம் செய்துவிட்டு எஞ்சியதைப் பிரசாதமாக அருந்தினோம். பக்கத்திலுள்ள சிற்றுண்டிச் சாலையில் தாகசாந்தி செய்துகொண்டு "அமரநாதனுக்கு ஜே" என்று சொல்லிப் பஞ்சதரணியை நோக்கிப் புறப்பட்டோம்.

எங்கள் குழுவில் அறுபதுவயதைத் தாண்டிய அன்பர்களும் தாய்மார்களும் பலபேர் அமரநாதனைத் தரிசனம் செய்யமுடியும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தார்கள். அமரநாதன் அருளால் அனைவரும் யாதொரு இடையூறும் இன்றிச்சென்று, திருப்தியாகத் தரிசனம் செய்ததால் எல்லையில்லா ஆனந்தத்தை அடைந்து திரும்பி வந்துகொண்டிருந்தோம். திரும்பி வரும் வழியில் சில இடங்களில் அமரநாதனைத் தரிசனம் செய்து வருபவர்களுக்கு லட்டு, ஜிலேபி போன்ற இனிப்புக்களும் சப்பாத்தி, டீ முதலியவைகளும் இலவசமாக வருந்தி அழைத்து வழங்கி மகிழ்கின்றனர். வடஇந்திய மக்கள் சுமார் ஆறுமாத, ஒரு வருடக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டும், வயதான மூதாட்டிகள் மெதுவாக ஊர்ந்து கொண்டும் வந்ததைக் கண்டோம். சாது ஒரு

வர் ஒரு கால் இல்லாத நிலையிலும் இரண்டு ஊன்றுகோல்களின் உதவியால் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் 'அமர்நாத் கீ ஜெய்' என்று சொல்லிக்கொண்டு வந்ததைப் பார்த்தோம். அக்காட்சியைக் காணும்போது கைகால்கள் இரண்டுமே நன்றாக அமைந்துள்ள நாங்கள் சென்று வந்ததைப் பெரிதாக எண்ண முடியவில்லை.

ஸ்ரீமத் பகவத் கீதையில்

"மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம்
யத்க்ருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம்"

என்று எட்டாவது தியான ஸ்லோகத்தில் ஸ்ரீ வியாசர் ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்துப் பாடுவது நம் ஞாபகத்திற்கு வருகிறது. இதன் பொருளாவது: "இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானால் ஊமை பேசுவான்; முடவன் மலையைத் தாண்டுவான். இறைவனுடைய அருளைப் பெற்றவர்களுக்கு முடியாத செயல் எதுவும் இல்லை." இந்த கருத்தைச் சிந்தித்துக்கொண்டே பஞ்சதரணி வந்துசேர்ந்தோம். அப்போது நண்பகல் ஒரு மணி. ஏற்கனவே தயார்செய்யப்பட்டிருந்த உணவை உட்கொண்டோம்.

அடுத்தநாள் ஆடிப் பௌர்ணமியன்று, அமரநாத தரிசனம் செய்வதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் பஞ்சதரணிக்கு வந்துகொண்டு இருந்தார்கள். நாங்கள் வந்து சேருவதற்குள் எங்கள் கூடாரங்களில் அவர்கள் தங்கியிருந்தார்கள். மழை வருகின்ற அறிகுறிகள் அதிகமாகத் தென்பட்டன. விரைவில் எங்கள் சாமான்களையெல்லாம் மூட்டைகட்டிக் குதிரைகள் மீது ஏற்றி அனுப்பிவிட்டு விரைவாகப் புறப்பட்டோம். வழிநெடுக நூற்றுக்கணக்கில் பஞ்சதரணியை நோக்கியாத்ரீகர்கள் நடந்தும், குதிரைமீதும், தண்டியிலும் வந்துகொண்டிருந்தார்கள். திரும்பி வருபவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் 'அமர்நாத் கீ ஜெய்' என்று சொல்லிக்கொண்டே சென்றது மனதை உருக்குவதாக இருந்தது.

இங்கிருந்து மஹாகுணஸ்ஸை நோக்கிச் செல்லும்போது பழைய சிரமங்கள் ஏற்பட்டன. இருந்தாலும் அமரநாதனைத் தரிசனம் செய்த பூரிப்பாலும், வழிநெடுகிலும் எல்லா வயதினரும் கூட்டம் கூட்டமாக வருவதைப் பார்த்ததாலும் அந்தக் கஷ்டங்களை முன் போன்று அவ்வளவு சிரமமாகக் கருதவில்லை. மாலை ஐந்து மணியளவில் அனைவரும் சேஷநாக் வந்துசேர்ந்தோம்.

இப்போதுதான் அமரநாத யாத்திரையின் கஷ்டங்களை ஓரளவு எங்களுக்கு உணர்த்த இறைவன் திருவுளங்கொண்டார் போலும்! வந்து சேர்ந்ததும் முதல் கஷ்டம் 70 கட்டில்களுக்குப் பதிலாக 40 கட்டில்கள் தாம் அங்குக் கிடைத்தன. முன்னதாக மூன்று நாட்களுக்கும் சேர்த்து பஹல்காமில் பணத்தை வாங்கிக் கொண்டபோதிலும், பஞ்சதரணியில் அதிகக் கூட்டத்தை முன்னிட்டு 30 கட்டில்களை அனுப்பிவிட்டனர் அமரநாத ஏஜன்சிக்காரர்கள். சிலகூடாரங்களைப் பிரித்து மற்றக் கூடாரங்களின் தரையில் விரித்து அதன் மீது ரசாய் போட்டுப் படுக்க ஏற்பாடு செய்துகொண்டோம். கட்டிலில் படுத்தவர்களுக்கு ஒரு ரசாயும், கீழேபடுத்தவர்களுக்கு இரண்டு ரசாய்களுமாக ஏற்பாடு செய்துகொண்டு படுத்து உறங்கினோம்.

இரவு முழுவதும் மழை தூறிக்கொண்டிருந்தது. அதனால் குளிர் அதிகமாயிற்று. படுக்கை வசதியும் குறைவாக இருந்ததால் பெரும்பான்மையோர் சரிவரத் தூங்கமுடியவில்லை.

27ஆம் தேதி காலை 5 மணிக்கு எல்லாரும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டோம். சிற்றுண்டி அருந்திவிட்டு 'ஸ்ரீ அமர்நாத் கீ ஜெய்' என்ற கோஷத்துடன் புறப்பட்டோம். சந்தன்வாரியை நோக்கிப் புறப்பட்ட அரைமணி நேரத்திற்குள் மூடுபனி ஏற்பட்டு வழியில் எதிரே வருபவர்கள் தெரியாத அளவிற்கு இருந்தது. இந்நிலை அரைமணி நேரம் நீடித்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்நிலை மாறி மழைத்தூறல் ஆரம்பித்தது. மழை தூற ஆரம்பித்தபோதுதான் அமரநாத யாத்திரையினுடைய கஷ்டங்களை உணர முடிந்தது. பாதை நெடுகிலும் குதிரைகளும், மனிதர்களும் நடந்து சேறாகி ஒவ்வொரு அடியும் வழுக்க ஆரம்பித்தது. குதிரைகளும் வழுக்கலினால் மிகவும் சிரமப்பட்டன. குதிரை மீது சென்றவர்கள் சிலர் பயந்து கீழே இறங்கி நடந்துவந்தனர். மழைக்கோட்டின் உபயோகம் அப்போதுதான் அனைவருக்கும் தெரிந்தது. (தொடரும்)

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் - ராமேஸ்வரம்

ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி ஸ்ரீ ராம நவமி யன்று இந்த மடம் சில வழிபாடு விசேஷங் களுடன் துவக்கப்பட்டிருக்கிறது. அன்று முற்பகல் 9-00 மணியிலிருந்து 10-00 மணிவரை ஸ்ரீ ராமநாதசுவாமி சந்நிதியில் ஐக்கியவழிபா டும், அம்பிகை சந்நிதியில் அர்ச்சனையும் நிகழ் வனவாயின. முற்பகல் 11-00 மணியிலிருந்து 12-00 மணிவரை இந்த மடத்தின் முன்மண்ட பத்தில் வழிபாடு நடைபெற்றது. ஒரு சப்பரத் திலே சீதா, லக்ஷ்மண, விபீஷண, சுக்ரீவ ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமச்சந்திர பிரபு, ஸ்ரீ ராமநாத சுவாமியின் இலிங்கப் பிர திஷ்டை, படம் பிரதிஷ்டை பண்ணப் பெற் றது. அதற்குக் கீழ் உள்ள தட்டில் ஸ்ரீ ராம கிருஷ்ணர், அன்னை சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய இம்மூர்த்தி களின் படங்களும் பொருத்தப் பெற்றன. இம் மூர்த்திகளின் சந்நிதியில் சுமார் முந்நூறு பேர் அன்பர்கள், தாய்மார்கள், வித்யாவன மாண வர்கள் கூடினர்கள். சிவநாமம், அம்பிகை நாமம், ராமநாமம் ஆகிய பஜனைகள் நடைபெற் றன. அவைகளைத் தொடர்ந்து அர்ச்சனை நிகழ்ந்தது. நண்பகல் 12-00 மணிக்குக் கற்பூர தீபாராதனை நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து குழுமியிருந்த அனைவரும் ஆங்கு அமுது பண் ணுவதற்கு அணி அணியாக அமர்ந்தனர். அத்தனை பேரும் ராம நாம உச்சாரணை பண் ணிக்கொண்டிருந்தபொழுது மகேஸ்வர பூஜை துவங்கியது. சப்பரத்தின்கண் எழுந்தருளப் பண்ணியுள்ள மூர்த்திகளின் முன்னிலையில் ஒரு தாம்பாளத்தில் பரப்பப் பெற்றுள்ள இலை யிலே இந்த மூர்த்திகளுக்கு முதலில் அன்னம் படைத்தலும் அதே வேளையில் அதைத் தொடர்ந்து அங்கு அமர்ந்திருந்த பக்தர்கள், பக்திமதிகள் ஆகியவர்களுக்கு அமுது வழங் கலும் செய்யப்பெற்றது. ஏககாலத்தில் எல்லா ரும் பிரம்மார்ப்பணம்பண்ணி அமுது ஏற்றனர்.

இந்தப் பாங்கில் நாள்தோறும் இந்த ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் மகேஸ்வர பூஜை நடாத்து வது இதன் குறிக்கோள் ஆகும். கோயிலிலே வழிபாட்டுக்கு வருபவர்களுள் ஒரு சிலர் இந்த மகேஸ்வர பூஜையில் நாள்தோறும் நண்பகல் 12-00 மணிக்கு வந்து கலந்துகொள்ளுவார்கள்.

வேற்றுமையை வளர்ப்பது அக்ஞானம்; ஒற்றுமையை வளர்ப்பது ஞானம். இங்ஙனம் ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் பகர்ந்தருளி யுள்ளார். இக்கோட்பாட்டிற்கு ஏற்ப இம் மடத்திலே ஜாதி, மத, மொழி, மாகாண வேற் றுமையின்றி யாத்திரைவாசிகளுக்கு நாள் தோறும் மகேஸ்வர பூஜை நிகழும். விருப்பம் உள்ள அன்பர்கள் இதற்காகவென்று காணிக்கை செலுத்தலாம்.

இப்பழைய பெரிய கட்டடத்தில் இதுகாறும் சரியான போக்கில் கக்கூஸ் அமையவில்லை. அந்த வேலை இப்பொழுது நிகழ்ந்துகொண்டி ருக்கிறது. அது பூர்த்தியாவதை எதிர்பாராது உடனடியாகவே யாத்திரைவாசிகளாக வரு கிற அன்பர்களும் தாய்மார்களும் இடவசதிக் கேற்றவாறு இம்மடத்தில் வந்து தங்கலாம். இன்னும் சில மாதங்களுக்குள் யாத்திரை வாசிகளுக்கு வேண்டிய இடவசதி நீர்வசதி முதலிய யாவும் முறையாக அமைக்கப்பெறும். இந்த ஸ்தாபனம் மேலரதவீதியில் வடமேற்கு மூலையில் இருக்கிறது.

செய்திகள்

நிகழ்பவை

ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் வட ஆற்காடு ஜில்லா மதினுப்பள்ளியில் மே மாதம் 17 ஆம் தேதி மாலை சுவாமி விவேகானந்தர் என்னும் தலைப்பில் பேசுவார்கள்; மறுநாள் மாலை பௌர்ணமி லட்சார்ச்சனை விழாவை நடாத்தி வைப்பார்கள்.

மே மாதம் 20 ஆம் தேதி புதன்கிழமை அன்று சேலம் குகை ராமாஸ்ரமத்தில் நடக்கும் குருபூஜை விழாவில் **ஸ்ரீமத் நித்தியானந்த** சுவாமிகள் 'நான்கு யோகங்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்கள்.

திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித் யாவன குருகுலத்தில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது பற்றிய விவரங்களை அட்டை இரண் டாம் பக்கம் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்	பிரசார விலை	... 14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	... 6-00
இராமாயணம்	,,	... 5-00
தினசரி தியானம்	,,	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,,	... 3-00
கர்மயோக விளக்கம்		... 10-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
அநுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம்	ஷை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
பஜனைப் பாடல்கள்		... 2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி	ஷை	... 1-50
பரமஹம்சர் பாமாலை		... 1-50
சந்நியாசி		... 1-25
இறைவணக்கம்		... 1-00
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00

பிரஹ்லாதன்	(நாடகம்)	ரூ. 1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்		... 1-00
பாண்டவ கௌரவபெருமை	(நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்)	... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		... 0-75
*ஆத்ம சக்தி		... 0-75
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவதத்துவம்		... 0-70
*மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
*ஆலய வழிபாடு		... 0-75
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார்?		... 0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது ?		0-50
*கணபதி		... 0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (10th Imp.)		...20-00
Sri Lalitambika Sahasranama Stotram		...10-00
The Indian National Education		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daily Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover)		... 4-50
Ramayana	(do)	... 4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
The Bahagavad Gita (Small Size)		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
Bheeshma The Superman		... 3-50
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
Reminiscences of Master Mahashaya		... 1-50
*Introducing the Gita		... 1-50
The Garland of Paraaparam		... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami		... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

விவேகானந்த குருகுல கல்லூரி

திருவேடகம் மேற்கு-624 217, சோழவந்தான், மதுரை ஜில்லா.

இக்கல்லூரி குருகுலமுறையில் பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. வாழ்க்கைப்பயிற்சி இதனுடைய சிறப்பு அம்சமாகும். இங்கு கீழ்க்கண்ட வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

THREE YEAR DEGREE COURSES (SEMESTER SYSTEM)

(a) B.A., B.Sc: Part I Tamil/Sanskrit, Part II English.

Part III 1. B.A: Main: Economics.
Ancillary: Economic Statistics & History of India II.
2. B.A: Main: History.
Ancillary: Modern Governments & General Economics.
3. B.Sc: Main: Mathematics.
Ancillary: Applied Mathematics & Physics.
4. B.Sc: Main: Physics. Ancillary: Mathematics & Chemistry.
5. B.Sc: Main: Zoology. Ancillary: Chemistry & Botany.
*6. B.Sc: Chemistry Major. Ancillaries: Physics & Mathematics/Zoology.
*7. B.Sc: Botany Major. Ancillaries: Chemistry & Zoology
* [Subject to Affiliation.]

(b) B.Com: Optional Subjects: 1. Costing 2. Income-Tax Law and Practice.

விண்ணப்ப படிவமும், விவரணமும் பெற விரும்புவோர் முதல்வருக்கு ரூ. 5-50 மணியார்டர் செய்தோ அல்லது ரூ. 5-00 நேரில் செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம். எந்த வகுப்பிற்கான விண்ணப்பம் என்பதை M.O. கூப்பனில் அவசியம் குறிப்பிடவேண்டும்.

K. சுப்ரமண்யம்
முதல்வர்.

சுவாமி சித்பவானந்தர்
தலைவர்.

விவேகானந்த குருகுல மேல்நிலைப்பள்ளி

திருவேடகம் மேற்கு-624 217, சோழவந்தான், மதுரை ஜில்லா.

மாணக்கர்களுக்கு நல்வாழ்க்கைப் பயிற்சி தரும் கல்வியானது இக்குருகுலப் பள்ளியில் கற்பிக்கப்படுகிறது. எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள இப்பள்ளியில் + 2 வகுப்பு மாணக்கர்களுக்கு காலையில் உடற்பயிற்சியும், மாலையில் யோகாசனப் பயிற்சியும், மூன்றுவேளை இறைவழிபாடும் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

+ 2 வகுப்பில் உள்ள பாடப் பிரிவுகள்

பகுதி 1: தமிழ்/சமஸ்கிருதம். பகுதி 2: ஆங்கிலம்.

பகுதி 3: (1) கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல் — (ஆங்கில வழி)
(2) கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல் — (தமிழ் வழி)
(3) வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல், வரலாறு — (தமிழ் வழி)
(4) தொழிற் கல்வி (Vocational Course) கணக்குப் பதிவியலும், தணிக்கை இயலும் (Accountancy & Auditing) — (ஆங்கில வழி)

விண்ணப்ப படிவமும், விவரணமும் பெற விரும்புவோர் தலைமையாசிரியருக்கு ரூ. 5-50 மணியார்டர் செய்தோ அல்லது ரூ. 5-00 நேரில் செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம்.

K. S. தாஸ்
தலைமையாசிரியர்

சுவாமி சித்பவானந்த
தலைவர்

Edited by SWAMI NITHYANANDA.
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai. Tiruchi Dt.